
Registered as a News Paper
பக்கம் - 26

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly
விலை - 16
நாதம் - 15 | வெள்ளி - 27 | 03 - 09 - 09 செப்ரெம்பர் - 2004



# திருமுக அறிமுகம்

மீன்கூடப்பாடும் மிடுக்குடைய தேனாடாம் மட்டக்களப்பு மண் தமிழுக்கு அளித்த அற்புதமான தமிழறிஞர்கள், கலைஞர்கள் கவிஞர்கள், புலவர்களின் பட்டியல் மிகநீளமானது. தமிழால் பெருமை பெற்றும், தமிழுக்குப் பெருமை சேர்த்தும் நின்ற இந்த தமிழ்த் தொண்டர்களான ராஜபாரதி, நீலவாணன் பரமஹம்ஸ தாசன், எருவில் மூர்த்தி, பாண்டியூரான் போன்ற எண்ணற்றோர் வரிசையில்புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தனித்துவமிக்க தமிழறிஞராவார்.

கீதைக்கவி செய்து கீர்த்தி மிகப் பெற்றோன்
ஏ பெரியதம்பி என தன்பன்- ஓதக்கேள்
பாட்டுக் கொரு புலவன் பாரதி யென்றா றொருவர்
பாட்டுக் கிவ னென்பேன்யான்.

என்று பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களால் விதந்துரைக்கப்பட்ட புலவர்மணியின் கீர்த்தி பெரிதாகும் மட்டக்களப்பின் பிரசித்தமான மண்டூர் கிராமத்தில் - 8-01-1899இல் பிறந்த புலவர்மணி இளவயது தமிழோடிணைந்த வாழ்வைக் கொண்டதாகும்.

ஆரம்பக்கல்வி மட்டக்களப்பில்..... தமிழும் ஆங்கிலமும் அவருள் ஆழவேரூன்ற, தமிழிலக்கியத்தை கற்கும் ஆர்வம் மேலோங்க எட்டாம் வகுப்புடன் இவரது ஆரம்பக்கல்வி முற்றுப்பெற்றது. 1917இல் இவர் யாற்ப்பாணம் நாவலர் காவிய பாடசாலையில் இணைந்து தமிழ் இலக்கியம் கற்கலானார்.

புகழ்பெற்ற தமிழ் அறிஞர்களான சுன்னாகம் குமாரசாமிப்புலவர் வித்துவ சிரோன்மணி கணேசையர் ஆகியோரிடம் தமிழை முறையாகக் கற்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது மிகப் பெரும் கொடையேயாகும்.



## புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

அத்துடன் அவருடன் சக மாணவநண்பனாக கல்விபயின்றவர் கணபதிப் பிள்ளை என்பவராவார்.

பெரியதம்பி புலவர்மணியாக, கணபதிப்பிள்ளை பண்டிதமணியானார்.

யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலை இருவரையும் உருவாக்கி தமிழுக்களித்த பெருமையைப்பெற்றுக்கொண்டது.

சைவமும் தமிழும் இவர்களின் இருகண்களுமாயின.

பண்டிதமணி யாழ்ப்பாணத்திலும் புலவர்மணி மட்டக்களப்பிலும் தமிழ்ப் பணியாற்றினர்.

புலவர் மணியின் கவி புனையும் ஆற்றில் அபரிமிதமானது.உரை நடைச் செய்யுள்களை யாப்பதில் அவர் வல்லவர். இளமையில் இவர் வெளியிட்ட மண்டூர் முருகன் மீது பாடப்பட்ட 'மாமண்டூர்ப்பதிகம்' முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளின் சிறப்புப் பாயிரத்தோடு வெளியான பெருமையை பெற்றதாகும்.

1940களின் மத்தியில் இவர் இயற்றிய பகவத்கீதை வெண்பா நூல் மிகவும் புகழ்பெற்றதாகும்.

பகவத் கீதையை கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என மூன்று பகுதிகளாகப்பிரித்து வெண்பா யாப்பில் புலவர்மணி பாடிய இந்நூலையும் விபுலானந்த அடிகளே அரங்கேற்றினார். சிந்தாமணியில் வரும் நாமகள் இலம்பகத்தை நாடகரூபத்தில் படைத்தார். அது அவரது உரைநடைத்திரனுக்கு சான்றாகும். கலித்தொகையில் வரும் பாலைக்கவி எனும் பகுதியையும் உரைநடையில் எழுதினார்.

'விபுலானந்தர் மீட்சிறபத்து' இவரெழுதிய மற்றொரு நூலாகும். "புலவர்மணி கவிதைகள்"என்பது இவரின் கவிதைத் தொகுப்பாகும்.

'உள்ளதும் நல்லதும்' இவரது வாழ்க்கை வரலாறாகும். சிறந்த மேடைப் பேச்சாளர், சிறந்த மொழிபெயர்ப்பாளர், சிறந்த ஆசிரியர் அரசியல் ஆய்வாளர், சீர்திருத்தவாதி, என பன்முகப் பரிமாணங்களைக் கொண்ட பெரியதம்பி பிள்ளையவர்களுக்கு 1951இல் மட்டக்களப்பு தமிழ்க்கலா மன்றமே புலவர்மணி என்றபடத்தை வழங்கியது.

கிழக்கு பல்கலைக் கழகம் இவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டத்தை (1997இல்) வழங்கிக் கௌரவித்தது. பொதுவுடமைச் சிந்தனை கொண்ட இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார். ஆசிரியக் கலாசாலையில் பேராசிரியராக பணியாற்றிய இவர், அரச கரும மொழிகள், திணைக்களம் ஆலோசனைச் சபை, இந்துசமய அவிபிருத்திச்சபை, இலங்கை வானொலி, கல்வி அபிவிருத்திச் சபை ஆகியவற்றிலும் கடமைபுரிந்துள்ளார். இன,மத-மொழி பேதங்களுக்கப்பாற்பட்ட மனிதநேயப் பண்பாளரான புலவர்மணி 2.11.1978இல் அமரரானார்.

அன்னாரின் நினைவாக- அவரது நூற்றாண்டு நிறைவையொட்டி 6-01-1999இல் மட்டக்களப்பில் சிலை யொன்றும் நிறுவப்படடுள்ளது.

தமிழை வாழவைத்தோர்
தமிழாகவே வாழ்வர்.....
புலவர் மணி இன்றும்- என்றும் வாழும் ஒருவரே....

அட்சயன்

# காரசாரம்

## பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் நெருக்கம் குறைந்து வருகிறதா...?

"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்ற தாய் படுத்திருக்கிறாள். நோயும். நோயோடு அவள் படுத்தபாயும். அவளுடைய அன்றாட உறவாகிவிட. கப்பல்போல கட்டிய வீடும். ஆம். காடுவெட்டி. நிலந் திருத்தி கல்லெடுத்து மண்ணெடுத்துத் தன் குழந்தைகள் வாழக்கட்டியவீடு.

"குழந்தை குட்டியள் நெருப்பில கைவைச்சிடும் நிலையடுப்பாக் கட்டுவம். கிணத்துக்கு சுத்துமதில் போட்டு துலாப்போடுவம். எப்பன உயரமா விளக்குமாடம். பேரப்பிள்ளையள் விளையாட மாமரநிழல்!

ஆம் எல்லாம் அப்படியே இருக்கு. ஆனா பேரப்பிள்ளைகள். பிள்ளைகள் எங்கே. அம்மா தன் தளர்ந்த கைகளால் ஈக்குமாறு எடுத்து குந்தியிருந்து அரக்கி அரக்கிக்கூட்டியவாறே கதைக்கிறார். ஒவ்வொரு வீட்டின் தாயினதும் ஆரம்பகாலம் இப்படித்தான் இருக்கிறது நீ போய்ப்படியடா சோதினை வருது. அது நான் கூட்டுவன். உடுப்ப வாளிக்க போட்டிட்டுப் போ நான் தோய்க்கிறன். அவனுக்கு போட்டுத் தின்னப் பஞ்சி. நான் போட்டுக் குடுத்தாத்தான் தின்னுவான். வயது வந்த பிள்ளையெண்டில்ல மடியிலபடுத்தாத்தான் நித்திரைவரும். பிள்ளைக்கு மேல்சுடுது. எனக்கு வாழைப்பழம் வேண்டாம். கொய்யாப்பழம் கிரந்தி வேண்டாம் பிள்ளைக்குக்கூடாது என்று எவ்வளவு உணவுவகைகளைத் தள்ளிவைத்து. பிள்ளையின் நலனைக் கவனித்த தாய் "இண்டைக்கு என்னம்மா சாப்பிட்ட நீங்கள்." என்று கேட்டால் "அங்கின ஒரு சிறங்கை அரிசிபோட்டன். கறி இன்னும் தேடேல்ல... என்றார் அவர். இது ஒரு உதாரணம்தான். சொந்த வீட்டை விற்றுப் பிள்ளைகளைப் படிக்க வைத்து வெளிநாட்டுக்கு அனுப்பிய தந்தை ஒருவர் கோலூன்றியவாறே வீடு வீடாகச் சென்று பிச்சை எடுப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. ஒரு பிள்ளையின் நல்வாழ்வுக்காக அனைத்தையும் தியாகம் செய்யும் பெற்றோர் இந்த நிலையில் வாழக் காரணம் என்ன?

பிள்ளைகள் வளரும்போது பெற்றோரின் அண்மை குறைக்கப்படு வதே காரணம் எனச்சர்வதேச முதியோர் ஆய்வு மையம் தெரிவிக்கிறது. நல்லொழுக்கம் என்ற பாடம் ஒழிக்கப்பட்டு 1964 இல் சமயபாடம் புகுத்தப்பட்டதும் கூட ஒரு காரணம் தான். அநேகமாக மத நூல்கள் தாய்தந்தையரை விட இறைவனே உயர்ந்தவன் என்று போதிப்பதும் உண்டு.

சொந்த மனைவி. பிள்ளை. தாய். தந்தையரை துறந்துதான் புத்தர் ஞானம்?! பெற்றார். மனைவியைக் கைவிட்டே பட்டினத்தார் ஞானம் பெற்றார். இதைக் கிராமியப்பழமொழியொன்று அருமையாகக்கூறும். "தாய்வீட்டுக்கு வீடு பிச்சையெடுக்க. பிள்ளை நந்தவனத்தில பூசை குடுக்குதாம்" என்று. இன்றைய உலகில் ஆணும் பெண்ணும் வேலைக்குப் போக வேண்டியிருப்பதால் பிள்ளைகளுக்கு பெற்றோரின் அண்மையில்லாமற்போகிறது. இருவருமே தொழில் செய்வோராக இருப்பதால் பிள்ளைகளின் உரிமை மறுக்கப்பட்டு அயலவருடனே பேரன் பேத்திகளிடமோ குழந்தை தங்கவைக்கப்படுகிறது. உளத தாக்கத்துடனேயே வளரும் பிள்ளைகளும் வயதுவரும் போது பணத்துக்கே முதலிடம் கொடுப்போராகவும். அப்பா அம்மாவுக்கு மாதாமாதம் காசனுப்பினால கடமை முடிந்தது என எண்ணுவோராகவும் உள்ளனர். பிள்ளை காசனுப்பிறான் பிறகென்ன. என்று இவர்களும் திருப்தியடைகின்றவர்களாக நடிக்க வேண்டியுள்ளது. அவ்வளவு தான். எப்போதாவது வரும் விசேடங்களை ஒலிஒளிநாடாவில் பதிவு செய்து அதைப்போட்டுப்பார்த்து உறைந்து போயிருக்கும் நிலை நீடிக்கிறது. உலகம் சுருங்கிவிட்டதுதான். 'பக்ஸ்' இன்ரநெற். தொலைபேசி. இவையெல்லாம் உறவை அரவணைக்குமா? ஆனால் விட்டுப்பிரிந்த உறவுகளை வெளிக்காட்டித் தமது வரட்டுக் கௌரவத்தையோ. வரண்ட நிலையையோ கூறுவதைப் பாருங்கள். கேளுங்கள.

மரண அறிவித்தல்:- 'க' நகரைச்சேர்ந்த ராசா மயிலர் காலமானார். இவர் காலஞ்சென்ற ராணியின் அன்புக்கணவரும் மாலா கனடா. லலிதா பிரான்ஸ். முருகன் ஜேர்மனி. வில்வன் டென்மார்க் ஆகியோரின் அன்புத்தந்தையும் ராசன் கனடா. மாறன் பிரான்ஸ். முல்லை ஜேர்மனி. ராதா டென்மார்க் ஆகியோரின் மாமனாரும். டென்மார்க் டிலுகன். மதுசன். கனடா கிப்சன் . ரோய் ஜேர்மனி ஆகியோரின் அன்பு பேரனுமாவார் ஈமக்கிரிகைகள்பற்றி பின்னர் அறிவிக்கப்படும் தகவல்-சுந்தரம் உறவினர்.

மரண அறிவித்தலைக் கேட்ட ஒருவர் கூறினார். "பாவம் அநாதைப்பிணம" அம்மா அப்பா பாசம் பணத்தால் நிரவக்கூடியதல்ல. இதை ஒவ்வொருபிள்ளையும் தான் பெற்றோராகும் போது உணருவர். உணர்ந்தாலும் தானும் அநாதையாகவே முதுமையைக கழிக்கும் சூழ்நிலையை உருவாக்கியே தீருவார்! 'முதியோா'இன்று உலகில் ஒரு பிரச்சினையாக உருவாகியுள்ளனர்.

மாயா

# சும்மா இல்லை... எல்லாம் இலாபத்தோடு தான்

ஒரு காலத்தில் சிறிலங்காவில் லொத்தர் சீட்டில் பரிசு விழுவது போல ரட்ணசிறி விக்கிரம நாயக்காவுக்கு பதவிகிடைச்சது. இவர் ஆரெவரெண்டு ஒருவருக்கும் தெரியாது. கதிர்காமத்தாரைப் போல இவரும் அம்மாவுக்கு வலக்கை இடக்கைதானே தவிர தேர்தல்ல மக்களைச் சந்திக்கிற அளவு பெலப்பில்லாதவை. ரத்வத்தை ஐயா பிரதமரா வரலாமெண்ட வண்ணக்கனவோட இருக்க, ரட்ணசிறி ஐயா அதைக் கனவிலும் காணாம வந்தவர். இப்ப பாதுகாப்பு அமைச்சையும் பதிலுக் கெடுத்ததைப் பார்த்தால், வருங் காலத்தில செயலலிதாவுக்கொரு பன்னீர்ச் செல்வன்மாதிரி சந்திரிகாவுக்கொரு ரட்ணசிறி எண்டாகிப் போகும். ஆனால் இதிலயும் ஒரு சாத்தியப்பாடு இருக்கு. இந்த அரசாங்கத்தின்ர முக்கிய மையக் கருத்து, செயற்பாடு என்னவோ அது சரிவர நிறைவேறுது வேறயென்ன? மையப்புள்ளியென்ன, நீங்கள் தூரப் போகாதையுங்கோ. காசு, காசு சேர்க்கிறது. முந்தி என்ன நடந்தது. ஒரு கூட்டுக்குடும்பத்தார்தானே. சந்திரிகா நிறைவேற்று அதிகாரங்கொண்ட சனாதிபதி. நாடாளுமன்றத் தீர்மானங்களைத் தாய் சிறிமாவோ நடத்தினா படை நடவடிக்கையள மாமா அனுருத்தசெய்தார். முரண்பாடு வராம வேலை போகும். இடையில சின்னச் சின்னக் காட்சிமாற்றம் என்ன சரிதானே. சிறிலங்கா அரசெண்ணுறது ஒரு வர்த்தக மையம். அங்க நடக்கிறது யாவாரமும் லாபநட்டக் கணக்குந்தான். பின்ன இந்தப் போர் எண்டது யாவாரத்துக்கயெல்லாம் பெரியலாபந்தாற யாவாரம். ஐ.தே.க வந்தா என்ன? ஐ.ம.சு.ம வந்தா என்ன? எப்பிடி சண்டைபோப்போகுது எண்டத விட, எவ்வளவு ஆயுதம் வாங்கோணும், எத்தின கப்பல் வாங்கோணும். எண்டு தானே முதல் கணக்குப் பாப்பினம். நீங்கள் நினைப்பியள், சண்டைய வெல்ல நினைக்கினமாக்கும் எண்டு இது வெல்லமுடியாத சண்டையெண்டு சின்னப்பிள்ளைக்கும் தெரியும். ஆனா இந்தச்சண்டை நடந்ததாலதான் நிறையப்பேர் வசதியா வாழமுடியுது. யுத்தத்துக்கு வாங்குற ஆயுத தளபாடங்கள், விமானங்கள் கப்பலுகள் இதிலயெல்லாம் கோடிக்கணக்கில கொமிசன் வருகுது கொமிசனில்லாம இப்ப கத்தரிக்காய் கூட விக் கேலாது.

இந்தப்பணம் அரசி யல்வாதியளின்ர வங்கிக்கணக்கை உயர்த்துது. ராணுவத்தின்ர பையளை நிரப்புது. இதோட இந்த ஆயுதங்கள விக்கிற நாடுகளுக்கு சிறிலங்காவில காணிபூமியுங்கிடைக்குது சரி இப்ப தான்நிண்டு போச்சே, இப்பவும் ஏன் கப்பலுகள் விமானங்களுக்கு ஓடித்திரியினம் எண்டா இதுதான்.

ஒஸ்லோவில் வாக்களிச்ச காசை வாங்கிப்போட சனாதிபதி கசகரணம் போடுறா, பாம்புக்குத்தலையைக் காட்டி மீனுக்கு வாலைக்காட்டி விலாங்குமீன் திரியிறதுபோல. இதை ஜே.வி.பிக் காறர் விரும்பேல்ல. காசை வாங்கினா அவதன்ர கட்சிக்கு செலவழிச்சுப் பலப்படுத்திப் போடுவாவாம். சமாதானப் பேச்சு நடந்தாத் தானே காசு வரும். அப்ப காசை வராமப்பண்ணிப்போடுறதில கவனமா இருந்து சமாதானத்தை குழப்பிவிடத் திரியினம். பின்ன, ஆனா அந்தமடம் ஆகாட்டிச்சந்தைமடம் எண்டு திரியிற அம்மையாரை உதொண்டும் செய்யாது. இதுக்க அமெரிக்காவோ, இந்தியாவோ இடையில பூந்து நிக்கிது எண்டதும் கட்டுக்கதை போலதான். இந்தியா வன்னித் தலைமைக் கெதிரா வாலாட்டப்போறதில்லை. அதை ஆரும் விபரந்தெரிஞ்சவை அடிச்சுச் சொல்லலாம். ரீ வீ யெஸ்ஸிலயிருந்து, பான்பராக்வரை தமிழ்ப்பிரதேசத்துக்க கொட்டுப்பட்டுக் கிடக்கிறது கொஞ்சமே. எங்கடசனம் வெளிநாட்டில உழைச்சு இஞ்ச அனுப்பிறகாசெல்லாம் இந்தியாவுக்க தான் போய் சேருது. கோடிக் கணக்கா ரூபா முட்டையிடுற தமிழீழ வாத்தை. இப்போதைக்கு வெட்ட இந்தியா அவ்வளவு முட்டாளில்ல.

ஆனா - சமாதானம், யுத்தம் ரெண்டுக்குமிடையில கோடிக்கணக்கில துலைச்சுப் போட்டு உறவுகளையும் உரிமைகளையுங்கூட விட்டுப்போட்டு வெளிநாடுகள்ள நிண்டு கஷ்டப்படுற எங்கட மக்களின்ர உழைப்பைக்கூட இந்தக் கூட்டுக்கொள்ளைக்காறற்ற பையளில் நிரம்பி வங்கிக்கணக்க உயர்த்துதெண்டா இந்த உழைப்பின் துன்பத்தை வேதனையை அறியாமல் வெளிநாடுகளிலிருந்து வாறபணத்தை வீண்செலவு செய்யும் உள்ளூரவர்கள் திருந்த வேணும். உடன்பிறப்புகளின் இரத்தம் வியர்வை இதுக்கெல்லாம் மதிப்புக் கொடுத்து - வாங்கிற ஒவ்வொரு பொருளையும், செய்யிற ஒவ்வொரு செயலையும் சிறந்ததாக மாற்ற வேணும். அரசாங்கத்தின்ர பைக்குள்ள எங்கடகாசு அரைச்சல்லியும் போகக்கூடாது எண்டு நினையுங்கோ.



# சந்திரிகா ஒரு யுத்தத்துக்குத் தயாராகி வருகிறாரா?

நிலாந்தன்

அண்மை வாரங்களாக அரச தரப்பில் இருந்து குறிப்பாக சந்திரிகா, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க, இராணுவத் தளபதிகள், மற்றும் அமைச்சர் மங்கள சமரவீர போன்றோரிடம், இருந்து வெளிவரும் கூற்றுக்கள் யுத்தத்திற்குக் கிட்டவாய் வரத்தொடங்கி விட்டன. குறிப்பாகப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும் சந்திரிகாவின் விசுவாசியுமான ரட்ணசிறிவிக்கிரமநாயக்க புலிகளை நோக்கி எச்சரிக்கை ஒன்றை விட்டிருந்தார். அவருடைய எச்சரிக்கை வெளிவந்த சில நாட்களிலேயே கொழும்பில் மற்றுமொரு தமிழ் ஒற்றர் சுட்டுக்கொல்லப் பட்டிருக்கிறார். ஆனால் ரட்ணசிறி விக்கிரமநாயக்க எச்சரித்ததுபோல யுத்தம் ஏதும் இன்னும் தொடங்கி விடவில்லை.

அதாவது இன்னும் சரியான வார்த்தைகளில் சொன்னால் இப்பொழுது நிகழ்ந்துகொண்டி ருக்கும் மென்தீவிர யுத்தம் ஒரு வன்தீவிர யுத்தமாக இன்னமும் மாறவில்லை. ஆயின் அரசாங்கத்தரப்பில்



இருந்துவரும் எச்சரிக்கைகள், மிரட்டல்களின்படி ஒரு வன்தீவிர யுத்தம் எப்போது தொடங்கும்? அல்லது அப்படி ஒரு யுத்தம் விரைவில் தொடங்கும் வாய்ப்புகள் ஏதும் உண்டா?

இப்போதுள்ள அகப்புற நிலைமைகளின்படி சொன்னால் அப்படி ஒரு யுத்தம் உடனடியாக வெடிக்கும் வாய்ப்புக்கள் இல்லை என்றே தோன்றுகிறது. இதற்குப் பின்வரும் காரணங்களைக் கூற முடியும்.

முதலாவது காரணம், குரைக்கிற நாய் கடிக்காது என்பது.

இரண்டாவது, மேற்கு நாடுகளின் அனுசரணையுடனான இந்த சமாதானத்தை தானாக முறிக்கும் நிலையில் அரசாங்கம் இல்லை. அதைத் தானாக முறிப்பதன் மூலம் மேற்குலகில் இருந்து அந்நியப்படவும் அரசாங்கம் விரும்பவில்லை பதிலாக புலிகளே யுத்தத்தைத் தொடங்கும் விதத்தில் புலிகளைத் தூண்டுவதே அரசின் உத்தியாக இருக்கிறது. ஆனால் கடந்த சுமார் 30 மாதகால சமாதான முயற்சிகளின் பேறாக மேற்கு நாடுகளின் மத்தியில் புலிகளின் அந்தஸ்து அதிகரித்து வரும் ஒரு பின்னணியில் புலிகள் உடனடியாக யுத்த நிறுத்தத்தை முறிக்கும் வாய்ப்புக்கள் மங்கலாகவே தெரிகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை முறிக்கும் ஒருநிலை இன்னமும் முழு அளவில் வளர்ந்து விடவில்லை.

மூன்றாவது காரணம், சந்திரிகா தன்னைப் பலப்படுத்துவதற்கும் இப்போதுள்ள குழப்பங்களில் இருந்து தன்னை விடுவிப்பதற்கும் யுத்தத்தை ஒரு தெரிவாக மேற்கொள்ளும் ஒரு நிலைமை இருப்பதால் அதற்குரிய ஒரு தருணம் என்று அவர் கருதும் ஒரு காலம் வரும்வரை அவர் யுத்தத்தைத் தொடங்கமாட்டார்.

யுத்தத்திற்கு காரணமாக இருக்கும் இந்த மூன்றாவது காரணமே அப்படி ஒரு யுத்தம் உடனடியாக மூளாது என்று சொல்வதற்கும் காரணமாக இருக்கின்றது. இது எப்படி என்று பார்ப்போம்.

சந்திரிகா இப்போது நான்கு பிரச்சினைகளிற்குத் தீர்வுகாண வேண்டியுள்ளது.

முதலாவது, அவரது பதவிக்காலம் முடிந்தபின் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதற்கு ஏதாவது குறுக்குவழியைத் தேடவேண்டியிருக்கிறது.

இரண்டாவது, நாடாளுமன்றத்தில் அவருடைய ஸ்திரமற்ற ஆட்சி.

மூன்றாவது, ஜே.வி.பி. உலகிலேயே எதிர்க்கட்சியை அரசாங்கத்தின் பங்காளியாக வைத்திருக்கும் ஒரே கூட்டுமுன்னணி எனப்படுவது சந்திரிகாவின் கூட்டுமுன்னணிதான். அதாவது வெளியில் இருக்க வேண்டிய ஜே.வி.பி ஐ அவர் உள்ளே வைத்திருக்கிறார்.

யு.என்.பி ஐ விடவும் தனது நிலை பலவீனமானது என்பதனாலேயே அவர் இப்படி ஒரு கூட்டிற்குபோனார். எனவே அவர் தன்னை பலப்படுத்தும் வரையும் ஜே.வி.பி ஐ உதறிவிட முடியாது.

நாலாவது, எரிபொருட்களின் விலை உயர்வால் ஏனைய பொருட்களின் விலைகள் உயர்ந்ததும் இது தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதை மேலும் சிக்கலாக்கியதும் அதோடு நாட்டில் நிலவும் வரட்சியுமாக தன்னை நம்பி வாக்களித்த மக்களிற்கு இனியும் பொய் சொல்லமுடியாது என்ற ஒரு நிலை சந்திரிகாவிற்குத் தோன்றி விட்டது.

எனவே இந்த நான்கு காரணங்களின் நிமித்தமும் ஒரு யுத்தத்தை அவர் தொடங்கக்கூடும் என்ற ஒரு ஊகம் பரவலாக உருவாகிவருகிறது.

ஒரு யுத்தம்தான் சில சமயம் அவருடைய பேராசைகளைப் பாதுகாப்பதற்கான புதிய வழிகளைத் திறந்து விடக்கூடும். ஒரு யுத்தம் தான் நாட்டை இப்போது பிடித்துலுப்பும் பிரச்சினைகளிலிருந்து மக்களையும், கட்சிகளையும் திசைதிருப்ப உதவக்கூடும்.

எனவே இந்த நான்கு காரணங்களிற்காகவும் அவர் யுத்தம் ஒன்றைத் தொடங்கக்கூடும்தான். ஆனால் அப்படி ஒரு யுத்தத்தை - சமாதானத்திற்கான யுத்தத்தை - முன்பு செய்து அதில் தோற்றதன் விளைவாகவே ரணில் ஆட்சிக்கு வந்தார். இது சந்திரிகாவிற்கு நன்கு நினைவில் இருக்கும்,அதோடு அப்படி ஒரு யுத்தம் சிலசமயம் மேலும் ஜே.வி.பி ஐ பலப்படுத்திவிடக்கூடும்.

ரணில் செய்த சமாதானத்திற்கெதிராக அவர் நடத்திய அரசியலின் விளைவாக அதிதீவிர சக்திகளையே அவர் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார். அவருடைய கட்சியின் அடித்தளத்தை அரித்துக் கொண்டு போகக்கூடிய சக்திகளை சில மாதங்களுக்கு முன்பு கட்டவிழ்த்து விட்டதன் பலனை அவர் இப்போது அனுபவிக்கிறார். யுத்தக் கூச்சல் அல்லது யுத்தச் சூழல் அல்லது சமாதானத்திற்கு எதிரான அரசியல் - என்பனவெல்லாம் மேற்கண்ட பொறுப்பிலிகளான அதிதீவிர சக்திகளையே மேலும் மேலும் கட்டவிழ்த்துவிடும் அதேசமயம் மிதவாத சக்திகளைப் பின்னுக்குத் தள்ளிவிடும்.



எனவே ஒரு யுத்தமா அல்லது சமாதானமா எது தனக்கு மிகவும் அனுகூலமானது என்ற முடிவிற்கு வரமுடியாது சந்திரிகா தளம்பிக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது. இனி வேறு தெரிவுகள் இல்லை என்ற நிலை தோன்றும்போதே மிகவும் இறுதிக்கட்டத் தெரிவாக அவர் யுத்தத்தை நோக்கிப்போவார்.

இப்போது அவர் முன்னால் இருக்கும் எல்லாக் காய்களையும் எப்படியாவது நகர்த்தி தனது பேராசைகளைப் பாதுகாக்க முடியுமா என்று பலவிதமாகவும் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்.

தன் கணவனோடு சேர்ந்து தனது தாய்க்கு எதிராக அரசியல் நடத்திய பெண்மணி ஆவர். அவரது கணவன் கொல்லப்பட்டதோடு அரசியலைவிட்டு ஒதுங்கிவெளி நாட்டிற்குப் போனவர் அவர்.

17 ஆண்டுகால ஈழப்போரில் யு.என்.பி யின் பெரும்பாலான பிரதானிகள் கொல்லப்பட்டு உருவாகிய ஒரு தலைமைத்துவ வெற்றிடத்தில், எந்தக் கட்சியை தனது கணவனோடு சேர்த்து எதிர்த்தாரோ அந்தக்கட்சிக்கே தலைமைதாங்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

அதிகாரத்தின் ருசி தெரிந்த அந்த நாளில் இருந்து தொடங்கி அவர் அதிகாரத்தை மேலும் மேலும் சுவைக்கவே விரும்புகிறார். அதைத் துறக்க அவர்தயார் இல்லை.

எனவே தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்குரிய ஏதாவது வழிவகைகள் கிடைக்குமா என்று அவர் தேடிக்கண்டு பிடிப்பதற்கு வரும் ஏப்ரல் மாதம் வரைக்கும் அவகாசம் உண்டு. ஏனெனில் அப்பொழுதுதான் நாடாளுமன்றத்தை கலைத்து மற்றொரு தேர்தலை நடாத்த முடியும் எனவே அதற்கிடையில் யுத்தத்தை ஒரு தெரிவாக எடுப்பதற்கு அவசரப்படவேண்டியதில்லை.

இது காரணமாகவே அவரிற்கு மிகவும் நெருக்கமான அமைச்சரான மங்கள சமரவீர இப்பொழுது நிலவும் மென்தீவிர யுத்தத்தைப் பற்றிச் சொல்லும்போது இனிப்பொறுக்கமுடியாது எனும் அளவிற்கு நிலைமைகள் எல்லை மீறிப் போய்விட்டன என்று கூறும் அதேசமயம், அரசாங்கம் சமாதானத் திற்காக பொறுமையைக் கடைப் பிடிக்கும் என்ற தொனிப்படவும் கூறியுள்ளார்.

மங்கள சமரவீர எதையாவது சொல்கிறார் என்றால், அது சந்திரிகாவிற்கும் ஏற்புடையதாகவே இருக்கும். ஆயின் பொறுமையின் எல்லை மீறப்பட்டுவிட்டது என்றான பிறகும் பொறுக்கத்தயார் என்றால் வேறு ஏதோ வெளியில் சொல்லப் படாத ஒரு எல்லை உண்டு என்று தானே அர்த்தம்? எனவே ஒரு யுத்தத்தைத் தொடங்க அவர்கள் தயார் இல்லை.

ஆனால் ஜே.வி.பி யையும், ஹெலஉறுமயவையும் சாந்தப் படுத்துவதற்காக அரசாங்கம் யுத்தத் தொனியில் கதைக்கிறது என்பதே சரி.

இப்படிப்பார்த்தால் யுத்தம் அரசாங்கத்தின் தெரிவுகளில் ஒன்றாக இருந்தாலும் கூட அது ஒரு உடனடித்தெரிவாக இல்லை என்பதே உண்மை நிலை. அதாவது இப்போதுள்ள மென்தீவிர யுத்தமே இனியும் தொடரும். கிழக்கில் புலிகள் தாக்கப்படுவதும் கொல்லப்படுவதும் நிறுத்தப்பட்டால் இந்த மென்தீவிர யுத்தம் தணிந்துவிடும். இல்லையென்றால் தனது எதிர்காலத்தை குறித்து சந்திரிகா ஒரு உறுதியான முடிவிற்கு வரும்வரையிலும் இது தொடரும். ●

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்...!
நேதாஜி எழுதும் புதிய அரசியல் தொடர்
தமிழ் தேசியமே தமிழர் இலட்சியத்தின் ஆதாரம்

# நறுக்கென...

சிலநேரங்களில் சில மனிதர்கள் சில நல்ல விடயங்களைச் சொல்லி தங்களைச் சேர்ந்த சிலருக்கு சினமேற்றியும் விடுகிறார்கள்....! அதற்கு நல்ல நோக்கம் தான் காரணம் எனச் சொல்லிவிடமுடியாது. வேறு பல சுயநல உள்நோக்கமும் இருக்கவே செய்யும். ஒரு ஹோட்டல்காரன் எதிர் ஹோட்டலில் இருக்கும் உணவு சுவையானது. சுகாதாரமானதுஎன நற்சாட்சிப்பத்திரம் வழங்குவானா? அப்படி வழங்கினால் அதற்குள்ளும் ஒரு வர்த்தக ரீதியிலான லாபநோக்கம் இருக்கவே செய்யும். சுற்றி வளைப்புக்கள் ஏன்? விடயத்துக்கு வாருங்கள் என்கிறீர்களா? சரிவருவோம்....



சமாதானப்பேச்சுக்களை மீள ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் அரசிடம் அதாவது முன்னைய ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிஅரசிடம் கையளித்த இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபை தொடர்பான விடயமே இனி அடித்தளமாக அமையவேண்டும் என்ற புலிகளின் உறுதியான நிலைப்பாட்டை சிங்கள பேரினவாதச்சக்திகள் அனைத்தும் மூர்க்கத்தனமாக எதிர்த்து வரும் நிலையில் அதற்கு மாற்றாக வேறொரு திட்டத்தை முன் வைக்க சனாதிபதி சந்திரிகா பகீரதப்பிரயத்தனம் செய்து வருவதும் தெரிந்தவிடயமே...

ஆக ரணில் விக்கிரமசிங்க மட்டும் இ.த.அ. சபையின் அடிப்படையிலிருந்து பேச இதுவரையில் அரசுக்கு ஆதரவுதர முன்வந்துள்ள நிலையில் எதிர்பாராத சமயத்தில் அரசின் பக்கமிருந்தும் சந்தேகத்திற்குரிய ஒரு இனவாதியின்

## சிங்கள தேசம் எங்கும் உரத்துக் கூறவேண்டும்

ஆதரவுக்குரல் எழுந்துள்ளதுதான் ஆச்சரியமும் அதிர்ச்சியும் தரும் விடயமாகும்.

'விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள திட்டவரைபால் நாட்டுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை..!' இந்த குரல் வந்த திக்கை நோக்கினால் அங்கே டி.எம் ஜெயரத்னா நிற்கிறார்...

பொதுசன ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர், அமைச்சர் பேரினவாத சிந்தனையில் மூழ்கித்திழைத்தவர்.. இப்படிக் கூறியது அதிர்ச்சியைத் தராமல் வேறென்ன செய்யும்?

புலிகளின் தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைவு நாட்டுக்கு எந்தவிதமான அச்சுறுத்தலையும் ஏற்படுத்தவில்லையென்றும்... இந்த திட்டவரைபை அடிப்படையாக்கி, நின்றுபோன சமாதானப்பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கலாம் என்றும் கூறிய ஜெயரத்னா இத்திட்ட வரைபில் கூறப்படும் சபை தற்போது நடைமுறையில் உள்ள உள்ளூராட்சி சபை போன்றதொன்றே எனவும் அவர் கூறியிருப்பது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் மட்டத்தில் பெரும் குழப்பத்தை உண்டுபண்ணியுள்ளதாக கூறப்படுகிறது. இது அநுரா பண்டாரநாயக்காவின் பின்னால் நின்று ஆட்சிபீடத்தில் அதிகார மேலாதிக்கம் செய்யத்தீவிரம் காட்டும் ஜே.வி.பியினரை குறிவைத்து அடித்த அடியேயாகும் என அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றதாம். ஜெயரத்னாவின் உள்ளக்கிடக்கை எதுவோ... ஆனால் தனி வாழ்க்கையில்( வாய் தடுமாறிக் கூறினாலும் கூட..) ஒரு நல்ல விடயத்தைக் கூறிவிட்டார்.

நன்றி ஜெயரத்னா... நன்றி 'புளத்சிங்கள'வில் இதனைக்கூறியதுடன் நில்லாது சிங்கள தேசமெங்கும் உரக்கக்கூறுங்கள்.. அதுவே உங்களின் தேசப்பணியாக இருக்கும்.

---

இப்போது இன்றைய அரசில் மிகவும் பரிதாபத்திற்குரியவராக இருப்பவர் பிரதமர் மகிந்தராஜபக்ஷதான். அவரின் கிரகநிலை சரியில்லைப்போலும்... அவரை யாரும் ஒரு பிரதமருக்குரிய மரியாதையுடன் நடத்துவதில்லை.. அவர் வகிப்பது அதிகாரமெதுவுமற்ற நாடாளுமன்றத்தின் பிரதமர் பதவிதான் என்றாலும் கடந்த ஆட்சியில் ரணிலுக்கு இருந்த மதிப்பு இப்போது இவருக்கு இல்லைத்தான்..

என்னதான் பௌத்த மஹாசங்கத்தினரால் பௌத்த மதத்தின் காவலன் என்று பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டாலும், நாடாளுமன்றத்தில் அவர் வகிக்கும் பிரதமர் பதவிக்குரிய அந்தஸ்து கௌரவத்திற்குரியது என்று வர்ணிக்கப்பட்டாலும், நடைமுறையில் எவரும் அவரை ஒரு பிரதமராக உளமாற மதிப்பதாக இல்லை.



முன்னர் பொ.ஐ.முன்னணியின் ஆட்சிக்காலத்தில் ஒரு அமைச்சராக இருந்தபோது அமைச்சரவைக்குள்அவருக்கு வழங்கப் பட்ட பட்டம் 'ஓட்டை வாயர்' அல்லது உளறுவாயர் என்பதாகும். எவராவது முக்கியமான அல்லது ரகசியமான விடயங்களை பேசிக்கொண்டிருக்கும்போது ராஜபக்ஷ வருவதைக்கண்டால் பேச்சுக்களின் தன்மையையே மாற்றிக்கொண்டுவிடுவார்கள்.

அந்தளவுக்கு ரகசியம் பேணத்தெரியாதவர் எனப்பெயர் பெற்றவர் சனாதிபதி சந்திரிகா அவருடன் முக்கியமான விடயங்கள் எதனையும் பேசுவதோ கலந்துரையாடுவதோ கிடையாது என்ற கதையும் பரவலாக அடிபடுவதுண்டு.

ஆனாலும் தென்பகுதியில் அவர் பரம்பரை அரசியல் செல்வாக்கு மிக்கவர் என்பதால் அவருடன் எவரும் முரண்படுவது

## பிரதமர் ராஜபக்ஷவுக்கு கிரகநிலை சரியில்லை

கிடையாது நிற்க.... விடயத்திற்கு வருவோம். அண்மையில் நிகழ்ந்த ஒரு சம்பவம் அன்னாரின் கௌரவத்தை தரைமட்டமாக்கியுள்ளதுடன் அவருக்கு மனமுடைவையும் ஏற்படுத்திவிட்டது. அதாவது அவரது பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட இராணுவக் கொமாண்டோப்படையினரை நாடாளுமன்ற வளாகப்பகுதிக்குள் செல்ல தடை செய்யப்பட்ட நிகழ்வு அவரை அவமானத் திற்குள்ளாக்கி விட்டது.

"எனது பாதுகாப்புப்படையினர் நாடாளுமன்றப் பகுதிக்குள் வர அனுமதிக்கப்படாமை, நான் பயணிக்கும் வீதிகளில் அடிக்கடி துப்பாக்கி ரவைகள் கண்டெடுக்கப்பட்டுவருவது போன்ற நிகழ்வுகள் எனக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற சந்தேகத்தை எனக்கு உண்டு பண்ணியுள்ளது" என அவர் நாடாளுமன்றத்திலேயே பகிரங்கமாக கூறிவிட்டார்.

உண்மையில் பிரதமர் கதிரைக்கு குறிவைத்து ஏமாந்த அநுராவுக்கும் ராஜபக்ஷவுக் கும் ஒட்டவே ஒட்டாது. அநுராவின் அரசியலில் அவரின் தற்போதைய குருநாதர்களான ஜே.வி.பியினருக்கும் ராஜபக்ஷவை பிடிக்கவே பிடிக்காது...

இதுபோதாதா அவருக்கு எதிராக திட்டமிடுபவர்கள் யாரென இனங்காண...

பாவம் அதிகாரமற்ற பதவியில் உள்ள ராஜபக்ஷ நீலச்சால்வையை மாற்றி சிவப்புச்சால்வை போடுவதாகக்கேள்வி...! அபாயம்..அபாயம்..



இராணுவத்திற்கும்- பொலிஸிற்கும் ரகசிய தகவல்களைச் சேகரித்து வழங்கும் உளவாளிகளாக.... இன்னும் தெளிவான கருத்தில் கூறுவதானால்கைக்கூலிகளாக செயற்பட்டு வந்த பலர் தொடர்ச்சியாக அரச அல்லது இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வைத்தே கொல்லப்பட்டுவருவதானது பரபரப்பான செய்திகளாக வெளிவருவதுடன், இந்த கொலைகளின் பின்னணியில் யார் உள்ளனர் என்பதும் மர்மமாக இருக்கிறது. அரச-இராணுவ வட்டாரங்களில் இக்கொலைகளுக்கு விடுதலைப்புலிகளே காரணம் என்று கூறப்பட்டாலும் அது இன்னமும் சட்டரீதியில் நிரூபிக்கப்படாத பிரசார நோக்கிலான கருத்து வெளிப்பாடாகவே

## அரசாலும்,படையினாலும் கைவிடப்பட்ட உளவாளிகள்!

உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு உளவாளி என்பவன் இரகசியமாகச் செயற்படுவான் தன்னை எந்த வகையிலும் (ஒரு உளவாளியென) இனங்காட்டிக் கொள்ளாதவன். மற்றவர்கள் சந்தேகப்படும்படி எந்தவகையிலும் நடந்துகொள்ளாதவன் தனது பாதுகாப்புக் குறித்து எப்போதும் எச்சரிக்கையாக இருப்பவன் என்பதுடன் தான் பணிபுரியும் அமைப்புக்கு விசுவாசமாகச் செயற்படும் காரணத்தினால் அந்த அமைப்பினரால் பெரும் அக்கறையுடன் கவனமாகப் பாதுகாக்கப் படவேண்டியவனுமாவான்.

கொல்லப்பட்ட உளவாளிகளை பாதுகாப்பதில் அரசு எந்தவிதமான தீவிரமான செயற்திட்ட கொள்கைகளையும் கொண்டிருக்கவில்லை என்பதையே இவர்கள் அனர்தரவாக தெருவீதிகளில் வைத்து கொல்லப்படும் நிகழ்வுகள் உறுதிசெய்கின்றன.

இவர்களை அவர்கள் உளவாளிகளா மதிப்பதில்லை கைக்கூலிகளாகவே கருதி நடத்துகிறார்கள் என்றே தோன்றுகின்றது.

தன்னினத்தைக் காட்டிக்கொடுத்து தன்மானமிழந்து அற்ப வசதிகளுக்காக அடிமைத் தொழில் புரியும் இந்த உளவாளிகளிற்கு இறுதியில் கிடைப்பது நடுத்தெரு மரணமும், துரோகி என்ற பட்டமுமே....!

சரி அரசாவது... இராணுவமாவது அவர்களை கௌரவிக்கலாம் தானே....!

கௌரவிக்கமாட்டார்களே....!

அவர்களும் தமிழர்கள் என்றே அடையாளப்படுத்தப்படுகிறார்கள் 'இராணுவ உளவாளிகள் எல்லோருக்கும் பாதுகாப்பை வழங்கமுடியாது' என்கிறார். இராணுவப் பேச்சாளர் சுமேத பெரேரா...

உளவாளிக்கு பாதுகாப்பை இராணுவத்தினரே வழங்கவேண்டும் என்கிறார் மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் திலக் ரணவீரராஜா.

காப்பாற்ற முடியாது என்கிறார் பொலிஸ்மாஅதிபர் இந்திர டீ.சில்வா. ஆக எல்லோருமே அவர்களுக்கு நடுத்தெரு மரணம் தான் முடிவு என்று தீர்மானித்து கைவிரித்து விட்டார்கள் போல் தெரிகிறது.

இந்த நிலையில் கைக்கூலிகளாக செயற்படுவோர் தம் கதி இதுதான் என்பதை உணர்ந்து தப்பினால் சரி.. என்ற நிலையே உள்ளது போல் தெரிகிறது.

அது சரி இராணுவ மற்றும் அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் நடக்கும் இக்கொலை களுக்கு அரசும் இராணுவமும் ஏதோ ஒருவகையில் ஒத்தாசையும்- உதவியும் புரிவதாக உளவாளிகளான - கைக்கூலிகள் அச்சமும் சந்தேகமும் கொள்ளத்தொடங்கியுள்ள தாகவும்தெரியவந்துள்ளது. தமிழ் தேசத்திற்கெதிராகவும் தமிழ் தேசியத்திற்கெதிராகவும் கைக்கூலியாகச் செயற்படுபவர்களின் நிலை. அரசாலும் படையாலும் கைவிடப்படும் நிலைதான்.

---

அது என்னமோ தெரியாது ரணில் இப்போது திடீரென அனுபவம் வாய்ந்த இராஜதந்திரியாக தன்னை இனம் காட்டத்தொடங்கிவிட்டார் என்றே கூறவேண்டும்.



தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு விழுந்த பலமான அடியால் துவண்டு போகாது பலவீனமான புதிய ஆட்சிக்கும் பல மிருந்தும் பதற்றத்துள் சிக்கி தடுமாறும் சனாதிபதிக்கும் 'இந்த அடி போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா' என்று கேட்குமா போன்று அண்மைக்காலத்தில் சில அசத்தலான அரசியல் அதிரடிகளை வழங்கத் தொடங்கியுள்ள ரணில் இப்போது கொஞ்சம் துணிச்சலாகவே (இதை விட வேறு வழியுமில்லை) சில கருத்துக் களை காலநேரவர்த்தமானம் பார்த்து வெளிப்படுத்துவதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு தயாரா? இல்லையா என்பதை அரசாங்கம் தெளிவாக உறுதியாக தெரியப்படுத்தவேண்டும்" என்று

## இந்த அடி போதுமா...? இன்னும் கொஞ்சம் வேணுமா...?

சனாதிபதியிடம் கோரியிருப்பது அரசுக்குள் நெருக்கடியை அதிகப்படுத்தும் விடயமேயாகும்.

இதற்கு சனாதிபதியால் ஆம் என்றும் கூறமுடியாது இல்லை என்றும் கூற முடியாது. ஆம் என்றால் அரசுக்குள் குழப்பமுண்டாகும். ஜே.வி.பி துள்ளும், ஹெல உறுமய கூச்சலிடும், பேரினவாதிகள் கண்டனம் தெரிவிப்பார்கள். ஏற்கனவே பலவீனமான நிலையில் அறுதிப் பெரும்பான்மையை நிரூபிக்கமுடியாது தடுமாறும் அரசும் அதனைப் பாதுகாக்க போராடும் சனாதிபதியும் இதற்கு ஒப்புக்கொள்வதென்பது உடனடிச்சாத்தியமற்ற விடயமே....!

சரி- இல்லை முடியாது என்று கூறலாம் என்றால் அதுவும் முடியாது இல்லையென்றால் சமாதானப் பேச்சுக்கள் முறிவடையும், போர் நிறுத்தம் பாதிப்புக்குள்ளாகும்.... சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களைச் சந்திக்கநேரிடும், கடன் வழங்கும் நாடுகள் கைவிரித்து விடும்.. ஆட்சியைத் தொடர்வதும் பொருளாதார வீழ்ச்சியை சமாளிப்பதும் முடியாதாகி விடும், மீண்டும் போர் மூள்வதை தவிர்க்க முடியாதும் போகலாம்...!

சனாதிபதியால்.. அதாவது சர்வவல்லமை பொருந்திய சந்திரிகாவால் அவரது நிறைவேற்று அதிகார மந்திர சக்தியால் தீர்வுகாண முடியாத கேள்வியாக ரணிலின் வினா விழுந்துள்ளது. ரணில் அத்துடன் விடவில்லை விடுதலைப்புலிகளின் இ.நி.அ சபைத்திட்டத்தின் அடிப்படையில் பேச அரசு தீர்மானித்தால் அதற்கு ஆதரவளிக்கத் தயார் என்றும் கூறி சாதாரண சிக்கலை இடியப்பச்சிக்கலாக்கியுமெல்லேவிட்டார்.

இனப்பிரச்சினைக்கு ஆளும் கட்சியும். அதாவது சனாதிபதியும், எதிர்க் கட்சியும் அதாவது ரணிலும் இணைந்து தீர்வுகான கிடைக்கும் ஒரு அற்புத வாய்ப்பு இதுவென்றே சர்வதேச சமூகம் சந்திரிகாமீது அழுத்தம் கொடுக்கப் போகிறது...

ரணில் சந்திரிகாவை ஒரு பொறிவலைக்குள் சிக்க வைத்துவிட்டீரே...!

செங்குட்டுவன்

# புலனாய்வுச் செயற்பாடுகளில் முக்கிய பங்காற்றும் தகவல்கள்

ஒரு நாட்டினது இருப்பின் பாதுகாப்பானது பூரணத்துவமானதும், துல்லியமானதுமான தரவுகள் அடங்கிய புலனாய்வுத் தகவல்களிலேயே தங்கியுள்ளது.

உலக புலனாய்வு வரலாற்றிலும் தகவல்களே மிக முக்கியமான பங்கினை ஆற்றியுள்ளது, ஆற்றிவருகின்றது. எதிர்காலத்திலும் அதிக தகவல்களையும், அறிவையும் கொண்ட நாடே பலம்வாய்ந்த நாடாக இருக்கப் போகின்றது.

ஆகவே ஒரு நாட்டின் பாதுகாப்பு விவகாரங்களுக்கு தகவல்கள் அவசியம் பெறுவது பற்றி பரந்து நோக்கும் போது பின்வரும் தகவல்களைச் சேகரிக்கும் புலனாய்வுச் செயற்பாட்டில் அந்நாடு தன் முழு ஆளுமையையும் செலுத்திவருகின்றது. அவையாவன.

01. அயல் நாட்டின் இரகசியம் வாய்ந்த இராணுவ, புலனாய்வு, அரசியல், பொருளாதாரம் பற்றிய தகவல்கள்.

02. குறித்த நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டிலும் இராணுவ, புலனாய்வு ஒழுங்குபடுத்தல், தயார்ப்படுத்தலிலுமுள்ள பலவீனங்களைக் கண்டறியக்கூடிய தகவல்கள்.

03. அந்நாட்டின் இருப்பின் பாதுகாப்பைப் பலப்படுத்திவரும் முறியடிப்புப் புலனாய்விற்கு அவசியம் பெறும் தகவல்கள்.

04. இரு நாடுகளுக்கிடையில் போர்கள் நடைபெறும் வேளைகளில் போர்க்களத்திற்கு பின்புல பலமாக இயங்கும் தலைமையகங்கள், விநியோகமையங்கள், தொலைத் தொடர்பு மையங்கள், விநியோகப்பாதைகள் போன்றவற்றைத் தாக்கி அழிப்பதற்கான தகவல்கள்.

ஆகிய தகவல்களைச் சேகரித்து புலனாய்வுத் தகவல் வங்கியைப் பலப்படுத்தும் போதே அந்நாட்டினது இருப்பின் பாதுகாப்பு பலமாகும்.

இவ்வாறான தகவல்களை மனிதவள மூலங்களிலிருந்தும், தொழில்நுட்பவளமூலங்களிலிருந்தும், சட்டபூர்வமானஆவண வள மூலங்களிலிருந்தும், ஒவ்வொரு நாட்டினதும் புலனாய்வு நிறுவனங்கள் பெற்றுக்கொள்கின்றன. எனினும் மனிதவள மூலங்களில் இருந்து பெறும் புலனாய்வுத் தகவல்களே புலனாய்வு இயல்பூக்கத்திற்கு இன்றியமையாததாக இருந்து வருகின்றது.

அரசியல் தலைவர்கள், இராணுவ மற்றும் புலனாய்வு தலைவர்களின் உண்மையான உள்நோக்கங்களைக் கண்டறிவதற்கு மனிதவள மூலங்களே தேவைப்படுகின்றன.

> தமிழர்களுக்கு உதவி வழங்கும் திட்டங்களுக்கான தகவல்களைச் சேகரித்துக்கொள்ள நிறுவனங்கள் களப்பணியாளர்களை கிராமம் கிராமமாக ஈடுபடுத்தி வருகின்றது. அவ்வேலைத்திட்டத்தினை மையப்படுத்தி மேலதிக ஆய்வுகள் செய்யப்பட்டு அறிக்கைகள் ஆக்கப்படுகின்றன. அதனை விடவும் மாதாந்த அறிக்கை, அரையாண்டு அறிக்கை, ஆண்டு அறிக்கை என பலவற்றை அந்நிறுவனங்கள் தயாரித்துவருகின்றன.
>
> அத்தகைய ஆவணங்களை பகுப்பாய்வுசெய்து பார்க்கும் போது நவீன புலனாய்வு நுட்பம் பற்றி தெரிந்துகொள்ளமுடியும். அதாவது அதில் தாயகத்தின் இருப்பின் பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கத்தக்க புலனாய்வுத் தகவல்கள் அச்சிடப்பட்டிருக்கும் புலனாய்வுத் தந்திரத்தை அடையாளம் காணமுடியும்.

அது போன்றே இரும்புப் பெட்டிகளில் பூட்டி வைக்கப்பட்ட ஆவணங்களையோ, செயலகங்களில் கோவைப்படுத்தப்பட்ட ஆவணங்களையோ பெற்றுக்கொள்வதற்கு மனிதவள மூலங்களே முக்கியத்துவம் பெறுகின்றன.

மனித வளமூலங்களை பயன்படுத்தி தகவல்களைச் சேகரித்து வெற்றிபெற்ற இஸ்ரேல் நாட்டின் நிகழ்வு பற்றியும் அமெரிக்காவின் புலனாய்வுக் கணிப்பீட்டில் ஏற்பட்ட தவறு பற்றியும் இங்குகவனிப்போம்.

1967 ஆம் ஆண்டில் இஸ்ரேல் நாட்டிற்கும் அரபு நாடுகளுக்கும் நடந்த ஆறு நாட்போரில் இஸ்ரேல் படையினர் மின்னல் வேகத்தில் செயற்பட்டுத் தன்னைவிட பலமடங்குகள் அதிகமான படைவீர்களையும், போர்த்தளபாடங்களையும் கொண்ட அரபு நாடுகளைத் தோற்கடித்து மாபெரும் வெற்றியைப் பெற்றது.

போரில் இஸ்ரேல் தன்படையின் ஆயுதபலத்தை மட்டும் நம்பிப் போர் புரியவில்லை.அரபு நாடுகளின் போர்முயற்சிகள், போர் தயார் படுத்தல்கள் பற்றிய அனைத்துத் தகவல்களையும் சேகரித்த பின்னர் அரபு நாடுகளின் முக்கிய இடங்களைத்தாக்கி அந்நாடுகளின் படைகளைச் செயலிழக்கச் செய்தகளம் அற்றபோரிலும் ஈடுபட்டது.

இப்புலனாய்வுச் செயற்பாட்டில் இஸ்ரேலின் மனிதவளமூலமான எலிகோகன் என்கின்ற திறமைமிக்க புலனாய்வாளன் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வேவு விமானம் மூலமாகப் பெறப்பட்ட தகவல்கள் மனித மூலவளத்தினைப் பயன்படுத்தி உறுதிப்படுத்தப்படாமையால் அமெரிக்கப் புலனாய்வு நிறுவனத்தின் கணிப்பீட்டில் ஏற்பட்ட தவறைப்பற்றி சற்றுப்பார்ப்போம்.

இரண்டாம் உலகப்போரின் போது "கில்பேட்தீவில்" நிலைகொண்டிருந்த ஜப்பான் இராணுவ நிலைகள் மீது அமெரிக்கா தாக்குதல் தொடுக்கத்திட்டமிட்டது. அதற்கு முன் ஜப்பானிய இராணுவத்தினரின் எண்ணிக்கை பற்றிய தகவல்களைச் சேகரிக்கும் முயற்சியில் அமெரிக்கா தன்னை ஈடுபடுத்தியது.

தகவல் சேகரிப்பிற்கு தொழில் நுட்ப வள மூலமான U2 வேவு விமானத்தை மட்டும் ஈடுபடுத்தியது. இவ்விமானமூலம் எடுக்கப்பட்ட நிழற்படங்களைப் பகுப்பாய்வுசெய்தது. அதாவது நிழற்படங்களில் காணப்பட்ட கழி வறையின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு எத்தனை பேருக்கு ஒரு கழிவறை என்கிற வழமையான வீதம் பங்கீடுசெய்தது.

அதன்படி 4000 இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கலாம் என்கிற அடிப்படையில் அமெரிக்கா கணிப்பீடுசெய்தது. ஆனால் உண்மையில் 100க்குக் குறைவான ஜப்பானிய இராணுவத்தினர் இருந்துள்ளார்கள்.

இத்தவறான கணிப்பீடு ஏற்படக்காரணமாக அமைந்தது தொழில்நுட்ப வள புலனாய்வு மூலவளத்தை மட்டும் அமெரிக்கா நம்பி இருந்தமையேயாகும். "கில்பேட்" தீவில் அமெரிக்கா முகவர்களை அமர்த்தி இருந்தால் உண்மையான கணிப்பீட்டைச் செய்து இருக்கமுடியும். என்கிற அடிப்படையில் நியூயோர்க் ரைம்ஸ்மகசீன்ஸ் செய்திகளை வெளியிட்டிருந்தது.

இவ்விரு உண்மை நிகழ்வுகளும் தகவல்களின் அவசியம் பற்றி உணர்த்தி உள்ளது. அதேவேளை மனிதவள மூலங்கள் புலனாய்வுச் செயற்பாட்டிற்கு மிகமுக்கிய பங்கினை ஆற்றிவருகின்றது பற்றியும் இடித்துரைத்துள்ளது.

**— நீலன் —**

> மனிதவள மூலங்களைப் பயன்படுத்தித் தகவல்களைச் சேகரித்துவரும் சிங்களப் புலனாய்வுச் செயற்பாடானது தமிழர் தாயக இருப்பின் பாதுகாப்பு உறுதிப்பாட்டைப் பலவீனமாக்கும். ஆதலால் தமிழர்கள் சிங்களப் புலனாய்வு அமைப்பினது மனிதவள மூலங்களாக தொழிற்படுவதை முழுமையாக கைவிடும்போது தான் தமிழர் தாயக இருப்பின் பாதுகாப்பு பலம் பெறும். அத்துடன் தமிழர் தாயகம் நாட்டம் கொண்டிருக்கும் இரகசியத் தகவல்களைப் பெறும்வகையில் திறமைமிக்க உளவு வலையமைப்பின் உருவாக்கத்திற்கு உழைக்கும் போதும் பாதுகாப்பின் பலம் மேலும் வலுவூட்டப்படும்.

மனிதவள மூலங்களைப் பயன்படுத்தித் தகவல்களைச் சேகரித்துவரும் சிங்களப் புலனாய்வுச் செயற்பாடானது தமிழர் தாயக இருப்பின் பாதுகாப்பு உறுதிப்பாட்டைப் பலவீனமாக்கும். ஆதலால் தமிழர்கள் சிங்களப் புலனாய்வு அமைப்பினது மனிதவள மூலங்களாக தொழிற்படுவதை முழுமையாக கைவிடும்போது தான் தமிழர் தாயக இருப்பின் பாதுகாப்பு பலம் பெறும். அத்துடன் தமிழர் தாயகம் நாட்டம் கொண்டிருக்கும் இரகசியத் தகவல்களைப் பெறும் வகையில் திறமைமிக்க உளவு வலையமைப்பின் உருவாக்கத்திற்கு உழைக்கும்போதும் பாதுகாப்பின் பலம் மேலும் வலுவூட்டப்படும்.

சிங்களப்புலனாய்வு அமைப்பினர் தடையின்றி தகவல்களைப் பெற்றுக்கொள்ளப்பயன்படுத்திவரும் மனிதவள மூலங்கள் உள்ள களத்தினை எடுத்துநோக்கின்;

அரசநிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றின் அதிகாரிகள், பணியாளர்கள், பத்திரிகை நிருபர்கள், அரசியற்கட்சிப்பிரமுகர்கள், பெரும் வர்த்தகர்கள், மதநிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள் போன்றன மனிதவள மூலங்களின் களங்களாக இருந்துவருகின்றன. இக் களத்தில் கண்ணுக்குப்புலப்படாத உளவாளிகளாக இயங்குபவர்களை இனம்கண்டு அத்தகவல்களை தமிழீழப் புலனாய்வாளர்களிடம் வழங்குதல் தமிழர்களது பொறுப்பாகும். அதுபோன்று தமிழர் தாயகம் பற்றிய முக்கியத்துவம் வாய்ந்த, இரகசியம் வாய்ந்த தகவல்கள் சிங்களப்புலனாய்வு அமைப்பினருக்கு தடையின்றிப்போவதனை தடுப்பதும் தமிழர்களின் இனக்கடமையாகும்.

உதாரணமாக அரசசார் பற்ற நிறுவனங்களை எடுத்து நோக்குமிடத்து.

அந்நிறுவனங்கள் தமிழர்களுக்கு உதவி வழங்கும் திட்டங்களுக்கான தகவல்களைச் சேகரித்துக்கொள்ள களப்பணியாளர்களை கிராமம் கிராமமாக ஈடுபடுத்திவருகின்றது. அவ்வேலைத்திட்டத்தினை மையப்படுத்தி மேலதிக ஆய்வுகள் செய்யப்பட்டு அறிக்கைகள் ஆக்கப்படுகின்றன. அதனைவிடவும் மாதாந்த அறிக்கை, அரையாண்டு அறிக்கை, ஆண்டு அறிக்கை என பலவற்றை அந்நிறுவனங்கள் தயாரித்துவருகின்றன.

அத்தகைய ஆவணங்களை பகுப்பாய்வுசெய்து பார்க்கும்போது நவீன புல னாய்வு நுட்பம் பற்றி தெரிந்துகொள்ளமுடியும். அதாவது அதில் தாயகத்தின் இருப்பின் பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கத்தக்க புலனாய்வுத்தகவல்கள் அச்சிடப்பட்டிருக்கும் புலனாய்வுத் தந்திரத்தை அடையாளம் காணமுடியும்.

உள்நோக்கம்கொண்ட இந்த நிறுவனங்கள் தமிழர்களின் வறுமையைப்போக்கும் கொடை நிறுவனங்களாக தம்மை வெளிப்படுத்தி வறுமைக்கான நிதிக்கொடையிலேயே தங்களை பிரபுக்களாக்குகின்றார்கள். இப்படியான உல்லாசமாக உலாவரும் வறுமையின் பிரபுக்கள் தமிழர்களுக்குக் கொடை வழங்கும் வள்ளல்கள்போல் வெளிப்படுத்திக்கொண்டு தமிழர்களின் இருப்பின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் தகவல்களைச் சேகரித்து அத்தகவல்களை புலனாய்வு நிறுவனங்களுக்கு வழங்கும் வள்ளல்களாக இயங்குகின்றார்கள்.

புலனாய்வுப் பசியுடனே உலாவரும் உளவாளிகளுக்கு தமிழர்கள் தகவல்தீனி போடாமல் இருக்கும் போதே தமிழர்கள் பலத்தோடு இருக்கமுடியும். அத்தோடு அவ்வுளவாளிகள் பற்றியும் அவர்களது தகவலாளர்கள் பற்றியும் எத்தகைய தகவல்களை பெறுவதில் நாட்டம் கொண்டிருக்கின்றார்கள் என்பது பற்றியுமான தகவல்களை தமிழீழப் புலனாய்வு அமைப்பினருக்கு தமிழர்கள் வழங்கும் பங்களிப்பானது மேன்மையானது. ஆகவே சிங்களப் புலனாய்வுப் பசிக்கு தகவல்தீனி போடுபவர்களாக இருப்பதனை விடுத்து தமிழர் புலனாய்வுப் பசிக்கு தகவல்தீனி கொடுப்பவர்களாக இருந்தல் அவசியமாகும்.

அடுத்ததாக தமிழர்கள் தமக்கான பல்வேறுதேவைகள் கருதி தினம் தினம் கொழும்பு, வவுனியா மற்றும் ஏனைய மாவட்டங்களுக்கு பயணங்கள் மேற்கொள்வது வழமையானதாகும். இப்பயணங்களின்போது சிங்களப்புலனாய்வாளர்களின் தகவலாளர்களைப்பற்றியோ அல்லது சிங்களப் புலனாய்வாளர்களின் புலனாய்வு முயற்சிகள் பற்றியோ தெரிந்துகொள்ள நேரிடவே செய்யும். இவ்வாறு தெரிந்து கொள்ளும் தகவல்களை தமிழீழப் புலனாய்வாளர்களுக்கு கிடைக்கச் செய்வதே தமிழ் இனத்திற்கு நன்மை பயக்கும்.

இத்தகவல்கள் தமிழர்களின் இருப்பின் பாதுகாப்பு விவகாரங்களுக்கு உதவிபுரிகின்றது. முதலாவது; தென்னிலங்கை பகுதிகளில் குறித்த சிங்களப்புலனாய்வாளர்களின் வலைவீச்சுக்குள் தமிழ் தேசபக்தர்கள் சிக்குண்டுபோகாதவாறு தடுக்க ஏதுவாகும்.

இரண்டாவது;சிங்களப்புலனாய் வாளர்களின் உளவுச்செயற்பாட்டை தமிழர் தாயகப் பகுதியில் செயலிழக்கச்செய்து தாயக இருப்பின் பாதுகாப்பை உறுதிசெய்ய ஏதுவாகும்.

சிங்கள இராணுவ பாசறைகள், நிலைமைகள், அமைப்புக்கள் ஆகியவற்றையும் தலைமைப்பீடத்தின் எதிர்கால போர்முயற்சிகள் பற்றியும் தகவல்களை சேகரித்து தமிழர் தாயகத்திற்கு வழங்கும் புலனாய்வுச் செயற்பாட்டுப் பங்காளிகளாக தமிழ்மக்கள் இயங்கும் போது தமிழ் இனத்திற்கு நன்மையே விளைகின்றது.

ஒரு நாட்டின் புலனாய்வுச் செயற்பாட்டிற்கு மிக முக்கியமான பங்கினை ஆற்றுவது தகவல்களே. இதனால்தான் புலனாய்வு நிறுவனங்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கே அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

யுத்தமொன்றின் போக்கையோ அல்லது ஒரு நாட்டின் சரித்திரத்தையோ மாற்றியமைக்கக்கூடிய அல்லது எதிரிப்புலனாய்வினால் திட்டமிட்ட தாக்குதல், நாசவேலையை முறியடிக்கக்கூடிய இன்றியமையாத தகவல் ஒன்றினைப் பெறுவதன் மூலம் புலனாய்வாளன் பெரும்சாதனையை நிலைநாட்டமுடியும்.

ஆகவே பயன்மிக்க புலனாய்வுத் தகவல் களை சேகரித்து, தமிழர் தாயக இருப்பையும், தமிழரின் வாழ்வையும் பாதுகாத்துக்கொள்ளும் புலனாய்வாளனாக தமிழர்கள் தம்மை அர்ப்பணிக்கும் போதே சிங்களப்புலனாய்வு போர் முயற்சிகள் தோற்கடிக்கப்படும்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 03 . 09 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# உயிரூட்டுவாரா சந்திரிகா...?

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு- அமைதி நடவடிக்கைகளுக்கு- மீண்டும் உயிர் ஊட்டுவது சனாதிபதி சந்திரிகாவின் கைகளில்தான் இருக்கிறது என அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் லண்டனில் தன்னைச் சந்தித்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் ஆகியோரிடம் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் சமாதான முயற்சிகளுக்கு விடுதலைப்புலிகளின் தரப்பிலிருந்து புதிதாக எந்த முயற்சியும் மேற்கொள்ள வேண்டியதில்லை என்பதுடன், புலிகள் சமாதான முயற்சிகளுக்கு எப்போதும் தயாராகவே இருக்கிறார்கள் என்பதை தன்னைச் சந்தித்த சமாதான ஏற்பாட்டாளர்களிடம் அரசியல் ஆலோசகர் தெளிவாகவே தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் இலங்கையின் சமாதான முயற்சிகள் தேக்கமடைந்திருப்பதற்கும், நெருக்கடிக்குள்ளாகியிருப்பதற்குமான இடையூறுகளை தோற்றுவித்தவராகவும், தோற்றுவிப்பவராகவும் இருப்பவர் சனாதிபதி சந்திரிகா அவர்களே ஆகும்.

உயிர்ப்புடன் இருந்த சமாதான முயற்சியை கோமா நிலைக்கு கொண்டு வந்தவர் என்ற வகையில் அதற்கு உயிரூட்ட வேண்டிய கடப்பாடு சனாதிபதி சந்திரிகா அவர்களுக்கே உண்டு.

அத்தோடு புலிகள் சமாதான முயற்சியின் ஒரு அங்கமாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபினை ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் சமர்ப்பித்ததையடுத்து அதற்கான இடையூறுகளை சந்திரிகா அவர்களே ஏற்படுத்தத் தொடங்கினார். இந்த முயற்சி இன்னமும் முடிவுக்கு வந்ததாகவும் இல்லை.

சமாதான முயற்சிக்கு ஏற்படுத்தும் தடையாகவேதான், சனாதிபதி சந்திரிகா அம்மையார் ஐக்கியதேசிய முன்னணி அரசின் மூன்று முக்கிய அமைச்சுக்களை பறித்ததுமுதல், திடீரென நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலைநடத்தியமையும் ஆகும்.

அத்தோடு, நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் தமிழ் ஆயுதக்குழுக்களைக் கொண்டு புலிகள் மீது தாக்குதலைத் தொடுத்தமை, பின்னர் ஏற்கனவே அரசு மூன்று இடைக்கால நிர்வாக சபைக்கான திட்டவரைபினை சமர்ப்பித்து அவை தமிழ் மக்களின் எந்தத்தேவைகளையும் உருப்படியாக நிவர்த்தி செய்யக் கூடியதாக இல்லை என்ற நிலையில் தான், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைத் தரக்கூடியதென்ற வகையில் ஒரு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபினை புலிகள் சமர்ப்பித்திருக்கும் நிலையில் அதற்கெதிராக மாற்றுத்திட்டமொன்றை தயாரித்து வருகின்றமை அவர் புதிதாக ஏற்படுத்தும் தடைகளும், தடங்கல்களுமாகவே கணிக்கவேண்டியுள்ளது.

அந்த வகையில் சமாதான முயற்சியை முன்னெடுக்க வேண்டியதற்கு தடைகளை அகற்றி பாதையை செப்பனிட வேண்டிய பொறுப்பு சனாதிபதி சந்திரிகாவிடமே இருக்கிறது.

புலிகள் இயக்கம் சமாதான முயற்சிக்கு இடையூறாக செயற்படவில்லை என்பதோடு இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபின் அடிப்படையில் பேச்சுவார்த்தையினைத் தொடங்கத் தயாராகவே உள்ளனர்.

அதிரடியாய் சமாதான முயற்சியை ஆரம்பிக்கப் போகிறவர் போல சமாதான முயற்சிகளை முடுக்கி விடுவதும் பின்னர் அதேவேகத்தில் அவற்றைகிடப்பில் போடுவதும் சனாதிபதியின் பாணியாக இருந்து வருகிறது


ஆகவே இனியாவது சமாதான முயற்சிக்கு புத்துயிர் அளிக்கவேண்டிய பொறுப்பு சனாதிபதியிடம் இருப்பதை புலிகள் சுட்டிக்காட்டியுள்ளதை சனாதிபதி சந்திரிகா புரிந்து கொள்வாரா என்பதில் தான் சமாதான முயற்சி ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றது.

## தூரனின்பார்வை

# மல்வத்தை மகாநாயக்கரின் செய்தியும் அது குறித்து சில கேள்விகளும்...

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சந்திப்பினை மேற்கொள்ளும்போது தீவிரமான விடயங்கள் குறித்து வாதாடப்போவதில்லை என மல்வத்தை மாகாநாயக்க தேரர் கூறியுள்ளார்.

அதுமட்டுமல்ல தான் ஒரு பொதுவுடமைவாதியோ, மதவாதியோ அல்ல...தனது கொள்கைகள் பௌத்ததர்மத்தின் அடிப் படையில் அமைந்ததே என்றும் தெரிவித்துள்ள அவர். இனப்பிரச் சினை தீர்வுக்கு ஜே.வி.பியும் விடுதலைப் புலிகளும,



விட்டுக்கொடுபடுன் செயற்படுவது அவசியமெனக் கூறியுள்ளார்.

மேலும் பல்வேறு நாடுகளின் ஆயுதக் குழுக்கள் பல அரசியல் நீரோட்டத்துடன் இணைந்து தேர்தல்களைச் சந்தித்துள்ளதாகவும், தமிழீழ விடுதலைப் புலிகளும் அவ்வாறு ஆயுதப்போராட்டத்தைக் கைவிட்டு விட்டு அரசியலுக்கு வரவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### சில கேள்விகள்

முதலில் மல்வத்த மகாநாயக்கருக்கு எனது வணக்கம்! தாங்கள் புலிகளைச் சந்தித்துப் பேச விருப்பது சந்தோசம் நிற்க.

புலிகளுடனான சந்திப்பின் போது நீங்கள் என்னவெல்லாம் பேசுவீர்கள் எனக் கற்பனை செய்துவைத்திருந்த எமக்கு தங்களின் செய்தி ஏமாற்றமளிப்பதாகவே உள்ளது. நீங்கள் விடுலைப்புலிகளுடன் பேசும்போது இனப்பிரச்சினை ஆழ மூலம் குறித்தும், இன்றைய நெருக்கடிச் சூழல் குறித்தும் அவற்றுக் கான காரணிகள், காரண கருத்தாக்கள் எவை அல்லது எவர் என்பது பற்றியும்! சமாதானத்துக்கான தடைகளை எவ்வாறு நீக்குவது என்பது குறித்தும் மிகவும் தீவிரமாக பேச்சுவார்த்தை நடத்துவீர்கள் என எதிர்பார்த்தோம்.

உங்களின் வருகை இனப்பிரச்சினைக்கு ஒரு தர்மநியாயத்தின் அடிப்படையிலான தீர்வு குறித்து ஆராய்வதாக இருக்கும் என நம்பினோம்.

ஆனால் ஒரு நல்லெண்ண தூதுக்குழுவில் வரும் ஒரு சராசரி சம்பிரதாயபூர்வ பேச்சாளராக வரப்போகிறீர்கள் என்பதை அறிந்ததும் "சப்"பென்றாகிவிட்டது. இங்கு நீங்கள் வந்து பேச வேண்டிய விடங்கள் அனைத்துமே தீவிரமான பிரச்சினைக்குரியவிடயங்கள் பற்றியதாகவே இருக்கையில், அப்படியான விடயங்கள் குறித்து புலிகளுடன் வாதாடப்போவதில்லை என நீங்கள் கூறியுள்ளதன் அர்த்தம் தான் என்ன?

பொழுதுபோக்காக பிரச்சினையற்ற விடயங்கள் குறித்தா புலிகளுடன் பேசப்போகிறீர்கள்? அப்படி பொழுதுபோக்காகப் பேசி பிரச்சினைகளை ஒதுக்கிவைக்கும் நிலையில் இப்போது இல்லை என்றே நினைக்கின்றோம்.

அடுத்தது உங்களைப் பற்றி நீங்கள் கூறி யுள்ள சுயவிபரத் தில் நீங்கள் பொது வுடமை வாதியோ, மதவாதியோ அல்ல என்று கூறீயுள்ளீர் கள்.

நீங்கள் அரசியல் வாதியுமல்ல. மத வாதியுமல்ல. பௌத்த தர்மவாதி தான் என்று கூறியிருப்பது மகிழ்ச்சியே. ஆனால் உங்களின் மத பீடங்கள் பௌத்த தர்மத்தின் படிதான் ஆட்சிபீடங்களுக்கு ஆசீர்வாதமளித்து வழி நடத்துகின்றனவா? அப்படியெனில் இங்கு தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்காதே...! சமாதானத்திற் கான யுத்தத்திற்கு மௌன அங்கீகார ஆசீர்வாதம் வழங்கியிருக்கமாட்டீர்களே.

ஜாதிகஹெல உறுமய போன்ற... தேசிய பிக்குமார் முன் னணி போன்ற... பௌத்த சிங்கள இனவாதக் கட்சிகளுக்கு அனுமதி வழங்கியிருக்க மாட்டீர்களே....! இன்று சமாதானத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கிநிற்கும் ஜே.வி.பி.க்கு எதிராக பௌத்த தர்மத்தின் பேரால் கண்டனம் தெரிவித்திருப்பீர்களே...! விடுதலைப்புலிகளுடன் பேசும்போது என்னென்ன விடயங்களை என்ன அடிப்படையில் பேச வேண்டும் என்பது பற்றி மகாசங்கத்தினருடன் பேசப்போவதாகவும் நீங்கள் கூறியிருப்பதாகத் தெரிகிறது. அதே மகாசங்கத்தில் அங்கம் வகிக்கும் ஹெல உறுமய பிக்குகள் முன்னணி ஆகியவற்றின் உறுப்பினர்கள் உங்களைப் புலிகளுடன் பேசவேண்டாம் என்று கேட்டால் என்ன செய்வீர்கள்? அவர்கள் சமாதானத்தை மட்டுமல்ல அதுகுறித்து பேசுகின்றவர்களையும் எதிர்க்கின்ற ஒரு விதமான அதர்மசிந்தனை கொண்டவர்களாச்சே...! இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகப் பேசும் போது- ஆராயப்படும் போது தீவிரவாதப் போக்குகளை உதறித்தள்ள வேண்டியது அவசியம் என்றுள்ளீர்கள்! மிக நல்லவிடயம். ஆனால் தீவிரவாதப்போக்குகளைக் கைவிடுதல் என்பது வேறு விடயம். தீவரமான விடயங்களை விவாதிக்காமல் இருப்பதென்பது வேறு விடயம். இரண்டிற்குமான வேறுபாடுகளைப் புரிந்து கொள்வீர்களென நம்புகிறேன். தீவிரவாதப் போக்குடையவர்கள் அரசிலேயே உள்ளார்கள். அரசுக்கு ஆதரவாக வும் உள்ளார்கள். அவர்கள் மதவாதி கள், பேரினவாத சிந்த னையா ளர்கள், நாட்டை இன்றைய அவல நிலைக்குள் தள்ளியவர்கள். அவர்களே சமாதானத்தின் எதிரிகள்...! அவர்களிடம் தான் அதனைக் கைவிடச்செல்லி நீங்கள் வலியுறுத்த வேண்டும். விடுதலைப் புலிகள் தீவிரவாதிகள் அல்லர்... அவர்கள் போராளிகள்.... ... அவர்கள் தமிழ்மக்களின் உரிமை கள் தொடர்பான நியாயமான கோரிக்கையில் இறுக்கமாக இருக்கிறார்கள். அவ்வளவுதான். இது தீவிர வாதப் போக்கே அல்ல....!

ஜே.வி.பியும் விடுதலைப் புலிகளும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுப்புடன் செயற்படவேண்டும் என்று கூறியுள்ளீர்கள்.

விடாக்கண்டனாக இருப்பது ஜே.வி.பிக்காரரும் ஹெலஉறுமய பிக்குகளும் மட்டுமே புலிகளல்ல...!

புலிகளின் நியாயமான கோரிக்கைகளையும், அவர்கள் விட்டுக்கொடுக்கவேண்டுமென்றால், அதில் என்ன அர்த்தம் இருக்கப் போகிறதாம்.?

சமாதானப் பேச்சுக்களின் அடித்தளமே அவர்களின் நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில் அமைந்தது தானே? பல்வேறு நாடுகளில் ஆயுதக் குழுக்கள் பல அரசியல் நீரோட்டத்தில் இணைந்து தேர்தல்களைச் சந்தித்துள்ளதாக கூறியுள்ளீர்கள்.

இங்குள்ள பிரச்சினைகள் அரசியலில் நீரோட்டத்தில் இணைந்து தேர்தலில் போட்டியிட்டால் தீர்ந்து விடுமென நீங்கள் கருதினால் - அல்லது நாங்கள் கருதவேண்டுமென நீங்கள் நினைத்தால்... உங்களின் அரசியல் அறிவின்மைக்காக வருந்துகிறோம்...!

பிரச்சினைகள் நியாயமாக தீர்க்கப்பட்டால்- அந்த தீர்வும் உறுதியானதாக இருந்தால் விடுதலை புலிகளும் அரசியல்நீரோட்டத்தில் கலந்துகொள்வார்கள் என்பது நிச்சயம். அப்படியல்லாத நிலையில்.. அரசியல் நீரேட்டத்தில் நிரந்தர கைக்கூலிகளாக அடிமைகளாக ஆட்சியிலுள்ளோருக்கு அடிபணிந்து சேவகம் பணிவோராக இருப்பதைப்போல், புலிகளும் இருக்க வேண்டுமென நாங்கள் நினைத்தால் தங்களுக்காக அனுதாபப்படுவதைத் தவிர வேறு வழியே இல்லை...

நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வொன்று தமிழர் பிரச்சினைக்குக் கிடைக்காமல் ஆயுதங்களைக் கீழேபோடுவதும், அரசிலுக்குள் புலிகள் நுழைவதும் முழுத் தமிழ்மக்களினதும் எதிர்காலத்தையே குழிதோண்டிப் புதைக்கும் செயல் என்பதை நீங்கள் அறியாதிருப்பது தான் இவ்வாறெல்லாம் நீங்கள் கூறக் காரணமாகும்.

உங்கள் வரவு நல்வரவாகட்டும். நீங்கள் விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும், புரிந்து கொள்ள, புலிகளும் தமிழ் மக்களும் உங்களையும் புரிந்துகொள்ள உங்கள் வரவு ஒரு வாய்ப்பாக வாவது இருக்கட்டும்

ஆட்சித்தலைமையை ஆட்டிப் படைக்கவல்ல இலங்கையின் ஆன்மீகத் தலைவரான நீங்கள் அப்போதாவது பௌத்த தர்மம் இந்நாட்டில் எவ்வாறு பேணிப் பாதுகாக்கப்படுகிறது என்பதை புரிந்துகொள்வீர்கள் என நம்புகிறோம். ஆயுபோவன்.

**ஒரு போராடும் இனத்தின் மீது ஒரு தீர்வை திணிப்பதில் சிங்களதேசம் மட்டு மல்ல சர்வதேச சமூகமும் அதிக விருப் பாகவே இருக்கும். இதில்தான் நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.**

**காரணம். திணிக்கப்பட்ட தீர்வை இன்னுமொரு இனத்துக்கான முன்னுதாரணமாகக் காட்ட உலகம் விரும்பும்.**

"இலங்கைக்கு சமாதானம் கிடைக்கவேண்டும் என்பதில் இந்தியா வில் இருக்கும் யாவருக்கும் கருத்து முரண்பாடுகள் இல்லை. யுத்தத்தை வெறுக்கின்ற மக்களாகவே இந்தியர் களும் உள்ளனர்".

இப்படி இலங்கை வந்தி ருந்த புதுடில்லி ஜவஹர்லால் நேரு மக்கள், வசன்மக்கள், ஜெர்மனிய மக்களுக்கிடையில் தோன்றியுள்ள புதிய நவீன கூட்டாட்சி தான் சிறந் தது என ஒருதரப்பும் சுவிர்ச்சர்லாந்து நோர்வே, இந்தியா என இன்னுமொரு தரப்பும் நாடுகளின் தீர்வு முறைகளின உதாரணங்களைக்காட்டி ஒவ் வொன்றும் சிறந்ததென கூறியபடி இருக்கிறார்கள்.

ளுக்கு உள்ளாக்கப்பட்ட மக்களின் மத்தியில்தான் அவர்களுக்கான கேள்விகள்,அபிலாசைகளும் இருக்கும

அடக்குமுறைகளுக்குள் ளாக்கப்பட்ட மக்கள் தமது கேள்விகளை கேட்கும் காலங்கள் அவர்களுக்கு அத்தனை காலமும் அளிக்கப்பட்ட பதில்கள், அந்த அதிகாரசபை தொடர்பாக சிங்கள தேசத்தால் இன்று எழுப்பப்படும் பிரச்சினைகள் ஒரு பிரச்சினையே அல்ல.

இந்த பிரச்சினைகளுக்கு எந்த நியாயப்பலமான வலுவும் இல்லை; இருக்கவும் முடியாது. காரணம் இலங்கை அரசு களின் கூற்றுப்படியே இரண்டு விட யங்கள் தான் இங்கு முக்கியத்துவமிக்கது; பிரச்சினை களுககுரியது.

ஒன்று - ஐக்கிய இலங்கை இரண்டு - தமிழீழ தனியரசு.

சிங்கள தேசத்தின் அதிஉச்ச வாதம் ஐக்கிய இலங்கைக்கு எந்த பங்கமும் இல்லாதிருப்பது, அவ்வா றாயின் தமிழ்மக்களின் ஆகக் குறை ந்த கோரிக்கையான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கு இணங் கிப் போவதே. அதுவே ஐக்கிய இலங்கையைப் பாதுகாக்கும்.

பதில் தான் தங்கியிருக்கிறது.

எமக்கான நியாயங்களும், உரிமைகளும் அதற்குள்தான் உள்ள டக்கப்பட்டிருக்கிறது.

புலிகளின் முன் அரசு சமர்ப்பிக்கும் மாற்றுத்திட்டம் என்பது எமது அபிலாசைகளை புறந்தள்ளி விட்டு சிங்களதேசத்தின் அபிலாசை களை திணிப்பதாகவே இருக்கும்.

இது பேச்சுமேசையிலும் சுமூகமான சமாதான பேச்சுக்காக முன்நகர எந்த மார்க்கத்தையும், விட்டு வைக்கப்போவதில்லை.

ஒரு போராடும் இனத்தின் மீது ஒரு தீர்வை திணிப்பதில் சிங்களதேசம் மட்டுமல்ல சர்வதேச சமூகமும் அதிகவிருப்பாகவே இருக்கும். இதில்தான் நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

காரணம். திணிக்கப்பட்ட

# தமிழர்களின் ஆகக்குறைந்த கோரிக்கையே இடைக்கால தன்னாட்சி அதிகார சபை



**சிங்களவர்களுக்கு ஐக்கிய இலங்கை வேண்டு மென்பதற்காகவே தமிழ் மக்கள் தமது அபிலாசை களை இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்குள் வரையறுத்துக் கொள்கிறார்கள். இந்த விடயத்தில் சிங்கள மக்களல்ல தமிழ் மக்களே வரலாற்றில் அதிஉச்ச சகிப்புத்தன்மையைக் கொண்டிருக் கிறார்கள்.**

**இதனால் சிங்களதேசம் தமிழ் மக்களுக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எந்த எதிர்ப்பையும் தெரிவிப்பதில் நியாயம் இல்லை.**

**அந்த வகையில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபு மறுக்கப்படுமாயின் தமிழ் மக்கள் தமிழீழ தனியரசுக்காக போராடுவதை தவிர்க்க முடியாது.**

பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறை பேராசிரியர் பி.சகா தேவன் ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் ஒரு கேள் விக்கு பதிலளிக்கும் போது... "இந்திய அரசியலமைப்பிலிருந்து பல விடயங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்த முடியும். இது, அதாவது அது ஒரு பின்னிலை மட்ட சமஷ்டி (Multi Level Federalism) முறையாக அமைய வேண்டும். இதன் மூலமே சிறந்ததொரு தீர்வு கிடைக் குமென நம்புகிறேன்...." எனவும் தெரிவித்திருந்தார்.

இப்படி பேராசிரியர் சகா தேவன் மட்டுமல்ல இலங்கை இனப் பிரச்சனை விவகாரத்தில் ஆர்வ முள்ளவர்களும் அச்சமுள்ளவர்களும் எல்லோருமே தத்தமது நாடுகளின் அடிப்படையிலான தீர்வுகள் தொடர் பான ஆலோசனைகளை வைக்கி றார்கள்.

இலங்கையைப் பொறுத்த வரை தென்னாபிரிக்கமுறைதான் சிறந்தது என தென்னாபிரிக் காவிலிருந்து வருபவர்களும், பெல்ஜியம் நாட்டில் பிலெமிஷ்

ஆனால், உண்மையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சிறந்த தீர்வு எது?

நாம் மேல் பார்த்த எல்லா உதாரணங்களும் அந்தந்த நாடுகளின் மக்களுக்கு பொருத்தப்பாடுடைய தீர்வுமுறைகள் அவை. அந்த மக்க ளுக்கு அந்தத் தீர்வுமுறை பொறுத் தப்பாடுடையதுதான். ஆனால், இன்னு மொரு நாட்டின் தீர்வு இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமை வது சாத்தியமா?

அப்படி பொருத்தப்பாடுடையதாக வேண்டுமானால் அங்குள்ள மக்கள் எத்தகைய பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொண்டார்களோ, அந்த மக்க ளின் போராட்ட முறை எப்படி இருந் ததோ, அதை ஒத்த பிரச்சினையை எதிர் கொண்டவர்களாக தமிழ் மக்களும் இருந்திருக்கவேண்டும். அது கூட முழுமையாக பொருத்தப் பாடுடையதாக இருக்கமாட்டாது.

காரணம், ஒரு இனத்தின் பூசல்களுக்கு, மொழிரீதியாக, கலா சாரரீதியாக, நிலரீதியாக, பொருளா தாரரீதியாக, வரலாற்று ரீதியாகப் பிரச்சினைகளின் தன்மைகள் மாறுபட் டதாக இருக்கும்.

அதோடு அடக்கு முறைக காலங்களில் அந்த மக்கள் மீது nதாடுக்கப்பட்ட அராஜகங்கள் எல்லாம் அவர்களின் கேள்விக ளுக்கான தீர்வைத் தீர்மானிக்கும்.

அந்த வகையில் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழ் மக்களின் ஆகக்கூடிய கேள்வி என்ற

**சிறி இந்திரகுமார்**

அடிப்படையில் தமிழீழ தனியரசுக் கான போரை நடாத்தியவர்கள், சமா தானத்தின் பெயரால் சகவாழ்வின் சமரசத்தால் ஆகக்குறைந்த கேள் வியாக இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கானகோரிக்கையும் முன்வைத்திருக்கிறார்கள்.

அந்த வகையில் இனி, தமிழ் மக்களின் சார்பில் புலிகள் சமர்ப்பித்திருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்ட வரைபில் குறைத்துச்சொல்ல என்ன இருக்கிறது. இனிவிட்டுக்கொடுப் பதற்கு எதனை எதிர்பார்க்கிறார்கள்.

எந்த தீர்வாக இருந்தாலும் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையிலானதாகவே இருக்கப்போகிறது.

உண்மையில் இலங்கை யில் தமிழ் மக்களுக்கான பிரச சினையில் புலிகளால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் இடைக்கால தன்னாட்சி

சிங்களவர்களுக்கு ஐக்கிய இலங்கை வேண்டு மென்பதற்காகவே தமிழ் மக்கள் தமது அபிலாசைகளை இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்குள் வரையறுத்துக்கொள்கி றார்கள். இந்த விடயத்தில் சிங்கள மக்களல்ல தமிழ்மக்களே வரலாற்றில் அதி உச்ச சகிப்புத் தன்மையைக் கொண்டிருக்கிறார்கள்.

இதனால் சிங்களதேசம் தமிழ் மக்களுக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எந்த எதிர்ப்பையும் தெரிவிப்பதில் நியாயம் இல்லை.

அந்தவகையில் இடைக் கால தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்டவரைபும் மறுக்கப்படுமாயின் தமிழ் மக்கள் தமிழீழ தனியரசுக்காக போராடுவதை தவிர்க்க முடியாது.

ஆனால், இதனை எத்தனை தூரம் எங்களின், நாடாளுமன்ற உறுப்பினர்களும், புத்திஜீவிகளும் சக்திமிக்க அமைப்புகளும் சிங்கள தேசத்துக்குமய், சர்வதேசத்துக்கும், எடுத்துரைத்துள்ளார்கள்.

நாம் எத்தனை தூரம் எங்க ளது நியாயங்களின் வலிமையை உணர்த்தியிருக்கிறோம்.

நாம் நிமிர்ந்து நிற்பதா, பணிந்து போவதா என்பதெல்லாம் சமர்ப்பிக் கப்பட்டிருக்கும் இடைக்கால தன் னாட்சி அதிகாரசபைக்கான திட்ட வரைபிலிருந்து பேச்சை ஆரம்பிப்

தீர்வு இன்னுமொரு இனத்துக்கான முன்னுதாரணங்களாக காட்ட உலகம் விரும்பும். ஆனால், நாம் போராடி எமது தேசத்தை மீட்க வேண்டும் அல்லது எமக்கான தீர்வைப் போராடி பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆகவே அழுத்தங்களைக் கண்டு, கூச்சல்களைக்கண்டு நாம் கலங்கத் தேவையில்லை .எமது நியாயங்களை உரத்து உலகு சொல்ல வேண்டும்.

இந்த கடமை புலிகளுக்கு மட்டுமல்ல. தமிழ்மக்கள் எல்லோ ருக்கும் உண்டு, நாடாளுமன்ற உறுப் பினர்கள், புத்தி ஜீவிகள் போன் றொருக்கு இதில் கணிசமான பங் குண்டு.

அரசு இன்று சமர்ப்பிக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எதிரான மாற்றுத்திட்டம் என்பது எங்களுக்கான தீர்வை சிங்கள தேசம் தீர்மானிக்க முயல்கிறது என்பதே இதன்பொருள்.

இன்னும் எங்களின் முது கில் அவர்கள் சவாரி விட முயல் கிறார்கள் என்பதே அர்த்தம்.

ஆகவே நாம் நிமிர்ந்து நிற்க வேண்டிய காலம் இது.

அழுத்தங்களைக்கண்டு பணிந்து போகாமல் துணிந்து எமது நியாயங்களைச் சொல்ல வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

## நாற்றிசை நடப்பு

# அமெரிக்க - இஸ்ரேல் கூட்டுத்தயாரிப்பான 'ஏரோ' ஏவுகணை உலகத்தை திசைதிருப்புமா?

**அமெரிக்கர் ஒருவகையான தந்திரத்தை பயன்படுத்த மறு பக்கத்தில் சதாரும் ஒருவகையான தந்திரத்தை உபயோகித்துள்ளார். இரு வேறு உரையாடலுக்குள் தயாராகி வரும் நஜாவ் நகரம் தனித்துவமான களமாக காட்சியளிக்கிறது. நஜாவ் போன்று பலூஜாவும் மாறுமா அல்லது ஈராக்கே மாறிவிடுமா என்ற சந்தேகம் வலுவடைந்துவிட்டது. அமெரிக்கர்கள் முந்திக் கொள்ள துணிந்தாலும் ஈராக்கின் வலுமிக்க ஷியாக்கள் ஆபத்தானவர்களாகவே மாறுவார்கள். அரசியல் போராட்டங்களுக்கு அவர்களது தனித்துவம் தனியானது ஆயுதப் போரை விமர்சிக்கும் ஷியாமத தலைவர்கள் அதனை அமெரிக்காவுக்கும் உரியதாகப்பார்க்கின்றார்கள்.**

ஆயுதப்போட்டிக்கு மீண்டுமொரு வருகையாக 'ஏரோ' ஏவுகணையின் வருகை அமைந்துள்ளது. அமெரிக்காவும் இஸ்ரேலும் கூட்டாக தயாரித்துள்ள இப்புதிய வகை ஏவுகணை ஏவுகணைகளை தடுப்பு வல்லமை கொண்ட ஆயுதமாக தருவிக்கப்பட்டுள்ளமை வில்லியம் புஷ் ஆட்சியை பிடித்த போது உருவாகிய NMD என்ற தேசிய பாதுகாப்பு ஏவுகணைத் திட்டத்தின் அபிவிருத்தி யாது- ஏரோவை உலகம் நோக்குகின்றது. ஆயுதப் போட்டியை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் அமெரிக்காவும், ஐக்கிய நாடுகள் சபையும் ஒரு பக்கம் முயலும் போது மறுபக்கத்தில் அமெரிக்காவின் ஆயுதப்போட்டி அரங்கேறிவருகிறது. இது ஒரு இரட்டைவேடப்போக்காகவுள்ளது. வல்லரசு என்றவுடன் ஏன் மேற்குலகம் என்றவுடன் மனக்கண்முன் தோன்றுவது இரட்டை வேடம் பொருந்திய அரசியல் என்பதாகும். அவ்வகையான இரட்டை வேட அரசியலில் அமெரிக்கா மட்டுமல்ல இஸ்ரேலும் இணைந்துள்ளது. இதனை இரட்டை வேடமென மதிப்பீடு செய்வதை விட இதுவே அமெரிக்கா இஸ்ரேலின் வேடமென அளவிடுவதே பொருத்தமானதாகும்.

### அமெரிக்க சனாதிபதி

குடியரசுக் கட்சியின் வேட்பாளரான தற்போதைய சனாதிபதி மீண்டும் தேர்தலில் போட்டியிடுகின்றார் என்பதுடன் அதனை வெளிப்படுத்தும் குடியரசு கட்சி மாநாடு அமெரிக்காவில் நடைபெறுகிறது. அம்மாநாட்டின் ஆரம்ப தயார்ப் படுத்தல்கள் அமெரிக்க மக்களால் குழப்பப்பட்டுள்ளதுடன் அந்நிகழ்வுக்கு திரண்ட குடியரசுக் கட்சி ஆதரவாளர்களை விட அதிகமான மக்கள் வீதியில் இறங்கி புஷ்க்கு எதிராக போராட்டம் நடத்தினர். தெளிவான தகவல்கள் வெளிவராத போதும் நான்கு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வீதிகளில் ஊர்வலமாகச் சென்றதாகவும் கூறப்படுகின்றது. அமெரிக்கா சனாதிபதியை விமர்சிக்கும் பதாதைகள் தாங்கிய வண்ணம் ஆர்ப்பாட்டக்காரர்கள் காணப்பட்டதுடன் பெருமளவானவர்கள் வெளிப்படையாக புஷ்ஷின் ஆட்சியை விமர்சித்துள்ளனர். புஷ்ஷின் ஆட்சியால் ஏற்பட்டுள்ள விளைவுகளை விமர்சித்த அமெரிக்க ஆர்ப்பாட்டக்காரர்கள் உலகம் முழுவதும் புஷ் ஏற்படுத்தி வரும் ஆட்சியால் அமெரிக்கர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், தமக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சதாம் ஹூஷன் கைது செய்யப்பட்ட பின்பு மீண்டும் அதிகரித்த புஷ்ஷின் செல்வாக்கு "செப்டெம்பர் 11 அறிக்கைக்கு" பின்பு படுமோசமான நிலையை அடைந்தது. அந்த அறிக்கையோடு வெளிவந்த நிறையத் தகவல்கள் புஷ்ஷின் நிர்வாகம் எப்படி அல்கொய்தாவின் தாக்குதலை கோட்டை விட்டதென்றும் அதனை புஷ் அப்படி அரசியலாக்கியதுடன் அமெரிக்க மக்கள் அழிந்த போது புஷ் அப்படி நடந்து கொண்டார் என்பது தெரியவந்தது. இதனை



மிக நுணுக்கமாக நோக்கினால் தாக்குதலுக்கு காரணமே புஷ் நிர்வாகம் என்பதாகவே அமையும் நிலை தென்படுகிறதை அமெரிக்க ஊடகங்களும் மக்களும் மறந்திருக்கமாட்டார்கள். அது மட்டுமல்ல ஈராக் மீதான போரை நிகழ்த்தும் போது காட்டிய காரணங்களின் எந்த அடிப்படையும் இல்லை என்பது பின்னர் தெரிய வந்தது. எதிர்கட்சி வேட்பாளர் ஒரு தடவை கூறியிருந்தார். "அமெரிக்க மக்களுக்கு பொய் உரைக்காத தலைவர் ஒருவர் தேவை" என இது தெளிவாக காட்டுகிறது. புஷ்ஷின் பல வீனத்தை குடியரசுக்கட்சி மாநாட்டை விமர்சித்த அமெரிக்க மக்கள் தாங்கிச் சென்ற பதாதைகளில் ''புஷ்'' ஒரு பொய்யன் என குறிப்பிட்டிருந்தனர். மிக மோசமான அரசியலை புஷ் மேற்கொண்டார். ஒரு வகையில் இது ஒரு அசிங்கமான நாகரிகமில்லாத காட்டு மிராண்டித்தனமான அரசியல் கலாசாரமாகும். அத்தகைய அரசியல் கலாசாரம் புஷ் உடனோ அல்லது அவரது பரம்பரையுடனோ முடிந்து விடுவதல்ல. தொடர்ச்சியாக அதன் தாக்கங்கள் காணப்படும். ஒரு தவறான நிர்வாகமும் ஆட்சியும் ஒரு நாட்டுக்கும் சரி நிர்வாக நிறுவனத்துக்கும் சரி தொடர்ச்சியான பாதிப்புக்களையும் விளைவுகளையுமே ஏற்படுத்தும். இது அமெரிக்க சனாதிபதிக்கு மட்டுமுரியதல்ல.

எனவே புஷ் அடுத்த சனாதிபதியாக வரவேண்டுமாயின் கடந்த காலத்தைப் போன்று அமெரிக்க சனநாயகத்திற்குள் ஒரு சதிப்புரட்சியை அரசியல் யாப்பு ரீதியாக மேற்கொள்ள வேண்டும். ஆனால் அதற்கு ஜோன் ஹறி ஒன்றும் அல்கோர் போன்றவரல்ல அதால் என்னதான் புஷ் தலைகீழாக நின்றாலும் சனாதிபதியாவது கடினமானதாக மாறிக் கொண்டிருக்கிறது. மக்களின் எதிர்ப்புணர்வானது. புஷ்ஷையும் குடியரசுக் கட்சியையும் நிலைகுலையச் செய்துவிடும் என்பதில் விமர்சகர்களுக்கு அதிக நம்பிக்கையுண்டு. அதனை மிகவும் தீவிரமாகவே ஊடகங்களும் விரும்புகின்றன. எப்படி சனாதிபதி புலனாய்வு பிரிவுகள், அமெரிக்க நிர்வாகங்கள் கூட்டாக செயற்பட்டு உலகத்தை ஏமாற்றியுள்ளனர் என்று அமெரிக்க மக்களே வெளிப்படுத்தி வருகின்றனர்.

### ஷியா மதத்தலைவர்

ஷியா மதத்தலைவர்களின் அரசியல் பலமும் இராணுவப்பலமும் கூட்டாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அல்சதாரின் ஆயுதப் போராட்டம் எப்படியோ அதற்கு நிகராக ஆயதுல்லா அலி சிஸ்ராயின் அரசியல் பலமும் விளங்குகிறது. மிக மோசமான நெருக்கடி நிலையை அமெரிக்கப் படைகள் சந்தித்த போது லண்டனிலிருந்து வந்த ஆயதுல்லா அலி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளார். இவ்வாறு குறுகிய குறுகிய காலயுத்த நிறுத்தங்கள் பலவற்றை அமெரிக்க இராணுவம் ஏற்படுத்துவதோடு எதிரியை சலிப்படைய வைத்து நிலைமையை தமக்கு சாதகமாக மாற்ற வருகின்றனர். இதற்கான தயார்ப்படுத்தலில் அலி பங்களித்துவிட்டார் என்ற குற்றச்சாட்டு இஸ்லாமியத் தரப்பிடமிருந்து வெளிவந்தாலும் அவர்களின் புனித நகரமான றஜாவ் அதன் இமாம் பள்ளிவாசலையும் பாதுகாப்பதே ஷியாதரப்பின் மிதவாத தலைவரின் நோக்கமாக அமைந்திருந்தது. ஏனெனில் இஸ்லாமியரின் அடிப்படை குரானும் பள்ளிவாசலும்

**— ஐங்கரன் —**

என்பதையே அவர்கள் முதன்மைப்படுத்துவதாகும். சதார் தனது படைகளை விலக்கிக் கொண்ட விதம் தனித்துவமானது. அதனால் வெறும் பள்ளிவாசல் காக்கப்பட்டது மட்டுமன்றி அவர்களின் அரசியல், போராட்டம், ஆயுதம், ஆயுததாரிகள் என்பன எல்லாமே பாதுகாக்கப்பட்டது.

அமெரிக்கர் ஒருவகையான தந்திரத்தை பயன்படுத்த மறு பக்கத்தில் சதாரும் ஒருவகையான தந்திரத்தை உபயோகித்துள்ளார். இரு வேறு உரையாடலுக்குள் தயாராகி வரும் நஜாவ் நகரம் தனித்துவமான களமாக காட்சியளிக்கிறது. நஜாவ் போன்று பலூஜாவும் மாறுமா அல்லது ஈராக்கே மாறிவிடுமா என்ற சந்தேகம் வலுவடைந்துவிட்டது. அமெரிக்கர்கள் முந்திக் கொள்ள துணிந்தாலும் ஈராக்கின் வலுமிக்க ஷியாக்கள் ஆபத்தானவர்களாகவே மாறுவார்கள். அரசியல் போராட்டங்களுக்குள் அவர்களது தனித்துவம் தனியானது ஆயுதப் போரை விமர்சிக்கும் ஷியா மத தலைவர்கள் அதனை அமெரிக்காவுக்கும் உரியதாகப்பார்க்கின்றார்கள். இரண்டு தரப்பையும் சமமாக மதிக்க விரும்பும் நிலை என்பதை விட இருதரப்பு இராணுவ நகர்வை நிராகரிப்பதே அவர்களது இலக்காக இருக்கிறது. இது அமெரிக்கர்களுக்கு அபாயமான அறிவிப்பாகவே அமையும் ஷியாத் தலைவர் அமெரிக்காவுக்கு பெரியளவில் சலுகையளிப்பதாக கூறுவதை விடுத்து அமெரிக்க ஆட்சிக்கு சவால்விடும் தலைமைகள் ஷியா மதப்பிரிவுக்குள்ளிருந்தே வெளிவரும் என்பதை கவனித்தல் சிறப்பானது.

### ஆப்கான் நிலைமை

ஆப்கானிஸ்தான் அரசியலில் சனநாயகம் திறனற்ற ஒன்றாக வளர்ந்து வருகிறது. தற்காலிகமாக ஓய்வெடுத்த தீவிரவாதம் படிப்படியாக ஆரம்பித்து முழு வீச்சுடன் செயல்பட தொடங்கிவிட்டது. கடந்தசில நாட்களாக நிகழ்ந்துவரும் தற்கொலை தாக்குதல்களில் அமெரிக்கர்கள், ஆப்பானிஸ்தானர் பல கொல்லப்பட்டதுடன் ஆப்கான் பாடசாலை சிறுவர்களும் கொல்லப்பட்டுள்ளனர். இப்படுகொலைகளை அரசியலாக்க விரையும் அமெரிக்க ஆப்கானிய தலைவர்கள் பாரியளவான நெருக்கடியை முகங்கொடுக்க தொடங்கிவிட்டனர். சனாதிபதி தேர்தலுக்கு தயாராகும் ஆப்கான் மக்கள் சனநாயகத்தை அடிப்படையையே தெளிவாக அவர்கள் கற்றவர்கள் என்றுகூறிவிடமுடியாது. ஆனாலும் வாக்களிப்பது மட்டுமே இந்நாடுகளில் சனநாயகமென புகட்டிவரும் அமெரிக்கா அதனை சாதித்துவிட வேண்டுமெனக் கருதி செயல்படுகிறது. மேலும் தலிபான்களே தாக்குதல்களை ஆரம்பித்திருப்பது தெரிய



வருகின்றது. அமெரிக்கா புதிய ஏவுகணைகளை தயாரித்து தமது நாட்டில் எல்லையில் நிறுத்தினாலும் அமெரிக்க மக்கள் கொல்லப்படுவது தவிர்க்க முடியாதென்பதே இப்படுகொலைகளின் சாராம்சமாகும்.

ஆப்கான் அரசியலில் தற்போதய சனாதிபதிஹமீட் கர்சாய் அரசமுறைப்பயணம் ஒன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றிருந்தார். அவருக்கு முஷாரப் முறைப்படியான கௌரவமான வரவேற்பைக் கொடுத்ததுடன் தனித்துவமான தலைவராகவும் மதித்திருந்தார். ஆனால் அவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பே விசேடமானதாக இருந்தது. குறிப்பாக அவரது இரு பக்கமும் புடைசூழ அமெரிக்க இராணுவ வீரர்களே வலம்வந்ததையும் பாகிஸ்தானில் உரை நிகழ்த்துவதோ பகிரங்கமாக வெளியே செல்வதையோ அமெரிக்க இராணுவவீரர்கள் அனு மதிக்கவில்லை- ஒருவகையில் அமெரிக்க சனாதிபதிபாகிஸ்தானுக்கு வருகைதந்தது போல் இருந்தது. இதுவே ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தரிசிக்க விரும்பும் சனநாகத்தின் தோற்றுவாய் என்பதனை மறுக்கமுடியாது. இதனை அடிப்படையாகக் கொண்டே அடுத்த *தேர்தலையும் சனாதிபதியையும் அமெரிக்கா* பாதுகாக்க வேண்டிவரும்.

பிரித்தானியக் குடியேற்றத்திலிருந்து விடுபட்ட நாடுகளில் சனநாயகம் அரசியல் ஊடுருவலுக்கூடாக நிகழ்ந்தது. ஒருவகையில் சாதி, மதரீதியிலும், பொருளாதார வலுவிலும் ஒன்றிணைந்திருந்த சதேசமக்களை விசேசிகளாக (23 ஆம் பக்கம் பார்க்க...)

சிறிலங்காவின் பிரதமர் மகிந்த ராஜபக்சமீது ஒருவகை அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாக செய்திகள் வெளிவருகின்றன. அவரே அமைச்சரவைக் கூட்டத்தில் அதனை வெளிப்படுத்தியிருக் கிறார்.

வெளிப்படையாக இது குறித்து அவர் முறையிட்டது நாடாளுமன்ற சபாநாயகரிடமாகும். அதாவது நாடாளுமன்ற வளவிற்குள் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் அனுமதிக்கப்படவில்லை என அவர் முதலில் சபாநாயகரிடம் புகார் செய்தார். ஆனால் இதற்கு நாடாளுமன்றப்பாதுகாப்பு நடைமுறை தொடர்பாக கடிதம் மூலம் அனைத்துநாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டதாகவும் அதனைச் சரிவர நடைமுறைப்படுத்தாமையே இதற்குக்காரணம் எனவும் நாடாளுமன்ற அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டது.

பின்னர் அவருக்கு பாதுகாப்பு வழங்கவென நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதாக அவர் அமைச்சரவைக்கூட்டத்தில் தெரிவித்தார். இதற்கு பொலிஸ்மா அதிபர் விளக்கமளிக்க வேண்டும் என அமைச்சரவை தெரிவித்தது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டில் தற்போது இல்லாத நிலையில் பதில் பாதுகாப்பு அமைச்சராக ரட்ணசிறி விக்கிரம நாயக்க பதவிவகிக்கின்றார். அவரது அமைச்சின்கீழ் இருக்கும் ஒரு பகுதிமீது இவ்வாறான குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

சிறிலங்காப்பிரதமர் மகிந்த ராஜபக்சவைப் பொறுத்தவரை, இவருக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டமை நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலானது என்பது இரகசியமான ஒன்றல்ல. ஏனெனில் இப்பதவி, அடுத்த சனாதிபதி யார்? என்பதை கோடி காட்டும் ஒன்றாகச் சிறிலங்காவில் உள் ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது சனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக் குப்பின் ஐ.தே.க. விருப்பமில்லாத நிலையிலும் அப்போது பிரதமராக இருந்த பிரேமதாசவையே நியமிக்கவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. உண்மையில் பிரேமதாசவை விட, காமினி திசநாயக்கா, அத்துலத் முதலி ஆகியோரே ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் விருப்பத்துக்குரிய வர்களாக இருந்தனர்.

பின்னர் பிரேமதாச தான் சனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் தனக்கு ஆபத்தில்லாத டி.பி.விஜயதுங்கவைப் பிரதமராக நியமித்தார். பிரேமதாச குண்டு வெடிப்பில் கொல்லப்பட டி.பி.விஜயதுங்க சனாதிபதியானார்.

இப்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு தான் அரசியலில் நீடித்திருப்பதற்காக இந்த சனாதிபதி முறையை ஒழித்துவிடும் முயற்சியில் தீவிரமாக இறங்கியிருக்கிறார். அது வெகு இலகுவாகச்சாத்தியப்படுமாக இருந்தால் அதனையே முதல் நடவடிக்கையாக மேற்கொண்டிருப்பார். ஆனால் அந்த நம்பிக்கை அவருக்கு இல்லைப் போலவே தெரிகிறது.

இம்மாற்றத்திற்கு ஐ.தே.க மட்டுமல.. ரஜ.வி.பியின் நிலைப்பாடும் உறுதியாக வெளிவர வில்லை. அத்துடன் பிரதமர் மகிந்தராஜபக்சவின் நிலைப்பாடு எவ்வாறு அமையும்? என்பதும் முட்டுக்கட்டையாகவே இருக்கும். அவர் தேர்தல் சம..த்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அமர்த்துவதே தமது ஆட்சியின் முதல் வேலை எனக்குறிப்பிட்டிருந்தாலும் இப்பொழுது அவர் பிரதமராகி அடுத்து சனாதிபதி வேட்பாளர் தெரிவில் முன்னிலையில் உள்ள வேளையில் அதனையே நோக்கமாகக் கொண்டிருப்பார் என முற்றிலும் எதிர்பார்க்கமுடியாது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்தவரை அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் தனது அரசியல் வாழ்க்கையை நீடித்துக் கொள்ள முடியாவிடின் தனக்குப் பின்னர் அநுராவை நியமிப்பதிலேயே குறியாக இருப்பார். இதற்கு இப்பொழுது முட்டுக்கட்டையாக இருப்பவர் மகிந்த ராஜபக்ச.

இப்பொழுது பிரதமர் மகிந்த ராஜபக்சவும் சரி, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவும் சரி சனாதிபதி முறை நீக்கத்திற்கு ஆதரவளிப்பார்கள் என எதிர்பார்க்கமுடியாதநிலையில் சந்திரிகா அரசியலிலிருந்து வெளியேறவேண்டியே ஏற்படும். அதன் பின்னர் சு.க.மூலம்கூட அநுராபண்டாரநாயக்க அதிகாரத்திற்கு



# அரசியலில் நீடிக்க அழுத்தம்

வருதல் என்பது சாத்தியமற்றதாகும்.

எனவே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் அநுராபண்டாரநாயக்கவுக்கும். முக்கிய முட்டுக்கட்டை பிரதமர் மகிந்தராஜபக்சவாகும்.

இந்தவேளை ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் விருப்பத்திற்குரியவராக அநுராவும் விருப்பமற்றவராக மகிந்தராஜபக்சவுமே உள்ளனர். ஏனெனில் ஜே.வி.பிக்கு அதிகம் செல்வாக்குள்ள தென்பகுதி மாவட்டம் ஒன்றிலேயே (அம்பாந்தோட்டை) மகிந்தராஜபக்ச அரசியல் செல்வாக்கு மிக்கவராகக் காணப்படுகிறார். அத்துடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி- ஜே.வி.பி. நாட்டில் அவர் அக்கறையற்றவராகவே செயற்பட்டு வருகிறார்.

இதேவேளை உபசனாதிபதி தெரிவில் ஜே.வி.பியின் மூக்கை உடைக்கும் வகையில் ஜே.வி.பியைப் புறந்தள்ளி ரணிலுடன் உடன்பாட்டுக்கு வந்து அதனை சுமுகமான முறையில் தமக்குப் பெற்றுக்கொண்டமையானது ஜே.வி.பிக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு ஆட்சிக்குள்ளேயே-அல்லது கட்சிக்குள்ளேயே பலம் பொருந்தியவர்களுக்கு வேண்டப்படாதவராக இருக்கும் வேளையில் அவருக்கு பல்வேறு இடைஞ்சல்கள் ஏற்படுவதில் புதுமை ஒன்றும் இல்லை.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டில் இல்லா சூழலில் அவரது பொறுப்புகள் வழமையாகப் பிரதமரிடமே ஒப்படைக்கப்படவேண்டும். அவ்வாறில்லாது ரட்ணசிறிவிக்கிரமநாயக்க விடமும் ஏனைய அமைச்சர்களிடமும் ஒப்படைக்கப்பட்டிருப்பது நேரடியாக மகிந்த ராஜபக்சவை ஓரம்கட்டும் முயற்சி என்றே கூறவேண்டும். அத்துடன் அவரது சொந்தப் பாதுகாப்பு தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்பன ஐயத்தையே ஏற்படுத்து கின்றன.

ஆனால் பிரதமர் மகிந்தராஜபக்சவுக்கு கட்சிக்குள் கணிசமான அளவு செல்வாக்கு இருப்பு இதனை முறியடிக்க உதவக்கூடும். ஆனால் கட்சியின் ஆரம்ப முதல் பண்டாரநாயக்க குடும் பத்திற்கும் ராஜபக்ச குடும்பத்திற்கும் இருந்த அரசியல், குடும்ப உறவு இதனால் பெரும் சிக் கலுக்கு உள்ளாகியிருக்கிறது. இவ்விடயத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நோக் கத்தை நிறைவேற்ற எவ்வளவு தூரம் செல்வார் என்பதைப் பார்த்தால் சந்திரிகாவின் வழமையான பாணிப்படி மகிந்த ராஜபக்ச மேலும் பல அழுத்தங்களைச் சந்திக்கவேண்டியேவரும்.

வேலவன்

# நேர்நோக்கு

இந்த முறை வரட்சி நாடு முழுவதும் பிடித்தாட்டுகிறது.


வரட்சியின் விளைவை விவசாயிகள் முதல் சாதாரண பாமர மக்கள் வரை அனுபவித்து வருகின்றார்கள்.

குளங்களிலும், கிணறுகளிலும் வேகமாக வற்றிவரும் நீரினால் குடிப்பதற்கான நீர் முதல் வயல்களில் விதைக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு இறுதி நேரத்தில் தேவையான நீரை வழங்க முடியாதும், பெற்றுக்கொள்ள முடியாதும், மக்களும் விவசாயிகளும் திணறுகிறார்கள்.

ஆனால் சிறிலங்கா அரசு வரட்சி மாவட்டங்களாக அறிவித்த மாவட்டங்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற மாவட்டங்கள் அறிவிக்கப்படவில்லை.

அத்தோடு இந்த மாவட்டங்களில் வாழும் மக்களுக்கு எந்த வித உதவிகளும் வழங்கப்படுவதாகவும் இல்லை.

இதனால் விவசாயிகள் தமது முதலீடுகளை வயல்களில் கொட்டி விட்டு விளைச்சல் களுக்காக சோகமாகக் காத்திருக்கிறார்கள்.



வன்னியில் சில இடங்களில் காய்ந்து வரண்டு போன வயல் நிலங்களில் ஊசலாடிக் கொண்டிருக்கும் பயிர் களுக்கான நீரை வழங்குவதற்கான ஆங் காங்கு தேங்கி நிற்கும் நீரை உழவு இயந்திரங் கள் மூலம் விசேட பொறி முறை அமைப்பு மூலமாக வாய்க்கால் களில் நீரை விசிறி நீர் பாய்ச்சும் முயற்சிகளில் விவசாயிகள் ஈடுபடு வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இந்த உழவு

# வரட்சியின் கொடூரத்தால் விவசாயிகள் பாதிப்பு

இயந்திரத்திற்கு தேவையான எரிபொருட்களின் விலை இன்று அதிகரித்துள்ள நிலையில் விவசாயிகளுக்கான உற்பத்திச் செலவு அதிகரித்து, இதனால் விவசாயிகள் அவர்கள் தமது இலாபங்களை இழப்பதோடு தமது சொற்ப முதலீடுகளையும் இழக்கும் நிலையில் இருக்கிறார்கள்.

யுத்தம் எனின் அரசின் தடை, சமாதானம் எனில் இயற்கையின் தடை என எமது விவசாயிகளை இன்னல்கள் வாட்டி வதைக்கிறது.

இதற்கிடையில் அரிசியின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து செல்ல மக்களின் வருமானங்களோ எந்த முன்னேற்றங்களும் இன்றி அவர்களின் வாழ்க்கைச் செலவை திட்டமிட முடியாதவாறு திக்குமுக்காட வைக்கிறது.

மக்கள் யுத்தக் காலத்தில் சிக்கனமாக வாழ முடிந்தது. ஆனால் இன்று சமாதானக் காலம் என்ற பெயர்தான் சிக்கனமாக எந்த காரியத்தையும் செய்ய முடியவில்லையே என மக்கள் அங்கலாய்கின்றார்கள்.

இதற்கு அடிப்படை காரணம் அரசு சமாதானத்தின் மீதான தனது வெறுப்பாக பேச்சை இழுத்தடிப்பதனால் பொருளாதார முன்னேற்றங்கள் எவையுமின்றி நாட்டின் பொருளாதார சிக்கல்கள் மக்களை வதைக்கிறது.

இந்த நிலையில் எமது விவசாயிகளின் மீது சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டர் நிறுவனங்களின் பார்வை திரும்ப வேண்டியது அவசியமாகிறது.

தொடர்ந்து விவசாயிகள் பாதிப்படைவதானது எமக்கான உணவுத் தேவைகளை பூர்த்தி செய்யவே நாம் இறக்குமதியில் தங்கியிருக்க வேண்டிய அவலத்தை தந்துவிடும்.

இந்த நிலையில் விவசாயிகளும், மக்களும் பாதிப்படையா வண்ணம் அவர்களுக்கான நிவாரணங்கள் வழங்குவது தொடர்பாக சிந்திக்கவேண்டும்.

மேலும் இந்த விவசாயிகளினதும், வரட்சியினால் பாதிக்கப்படும் மக்களினதும் நிலைமைகள் குறித்து, குறித்த அரச அதிகாரிகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய பலாபலன்களை பெற்றுக்கொடுக்க முயற்சி செய்யவேண்டும்.

பாராமுகமாக செயற்படும் அரசின் கவனத்தில் இந்த விவசாயிகளின் பகுதி மீது திருப்பி அவர்களுக்கான வாய்ப்புக்களை வழங்கவேண்டியது உரிய அதிகாரிகளின் பொறுப்பல்லவா?

அத்தோடு வரட்சியால் பாதிப்படையும் மக்களிற்கு வரட்சி நிவாரணங்கள் வழங்க கோரிக்கைகள் விடுக்கவேண்டும்.

பெருமளவு மக்கள் இதனையே இன்று எதிர்பார்கின்றார்கள்.

வரட்சியின் காரணமாக தொழில்களில் நட்டமடைந்திருப்பதோடு வருமான இழப்புகளை சந்திக்கும் மக்களை கவனத்தில் கொள்ள வேண்டும்



நக்கீரன்

# அடுத்த நகர்வு என்ன...?

பு.சத்தியமூர்த்தி

லண்டனுக்குப் பறந்திருக்கிறார் சந்திரிகா. நாட்டில் தற்போதைய நாட்களில் இருக்கக்கூடாது என்பது அவருக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனை. கிரகமாற்றம் விளைவிக்கும் பலன்களிலிருந்து தப்பிக் கொள்ள அல்லது காத்துக்கொள்ள கொழும்பை விடவும் லண்டன் சிறந்தது என அவரது சோதிடர் வழங்கிய பரிந்துரையைச் சிக்கனப் பிடித்த சந்திரிகா லண்டனுக்குப் பறந்துவிட்டார். அவரைப் பிடித்தாட்டும் ஜே.வி.பி. என்ற கிரகத்தின் பலன்களிலிருந்து தப்பிக்கொள்ள மார்க்கமின்றி அவதியுறும் சந்திரிகாவுக்கு கிரகமாற்றம் வேறு நல்லாயில்லை எனில் என்னதான் செய்வார்? அவரது அடுத்த அரசியல் நகர்வு என்னவாக இருக்கப்போகிறது அநுராபண்டாரநாயக்கவையும் மங்கள சமரவீரவையும் தன் கிடுக்கிப்பிடிக்குள் வைத்திருக்கும் ஜே.வி.பி அவர்கள் மூலமே சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தனது கட்சியுடனான கூட்டணியை மேலும் மேலும் தாபித்துவருகிறது. மறுபக்கமாக மகிந்த ராஜபக்ச ஆர்ப்பாட்டமில்லாமல் தன்னை நிலைநிறுத்தியபடி இருக்கிறார். நாட்டின் பொருளாதாரமோ 'இன்றோ நாளையோ' என்றிருக்கிறது. இன்னமும்கூட ஆட்சியைப் பொறுப்பேற்று ஐந்துமாதங்கள் நிறைவடைந்துவிட்டபோதிலும் கூட - நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிருபிக்க முடியவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது கூடச்சிக்கலாக இருக்கிறது. உலகநாடுகளினதும் குறிப்பாக உதவிவழங்கும் நாடுகளினதும் உலக நிதிநிறுவனங்களினதும் ஆக்கினைவேறு.

இந்தச்சூழ்நிலையில் என்னதான் செய்யப்போகிறார் சந்திரிகா?

தனது இக்கட்டுக்களிலிருந்து மீள்வதற்கு சாட்சிக்காரன் காலில் விழுவதை விடுத்து சண்டைக்காரன் காலில் விளச் சந்திரிகா தயாராவதாகத் தெரிகிறது. ஜே.வி.பி யுடன் புடுங்குப்பட்டுக் கொண்டிருப்பதையும்;

ஜாதிகஹெலஉறுமய என்ற பிடிச்சிராவிப் பிட்சுகளின் நச்சரிப்பை விலைக்குவாங்குவதையும்;

கழுவுகிற மீனில் நழுவுகிறமீனாக நடந்துகொள்ளும் ஆறுமுகம் தொண்டமானை நம்புவதையும்;

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசை உடைத்து அதிலிருந்து ரவூப்ஹக்கீமைத்தவிர ஏனைய எம்.பிகளை உள்வாங்குவதற்காக ஆலாய்ப்பறப்பதையும், கைவிட்டுவிடச் சந்திரிகா துணிந்துவிட்டார் போலப்படுகிறது.

முற்பத்தொன்பதையும் ஒன்பதையும் நம்புவதைவிட எண்பத்தியிரண்டே சிறந்ததென்றும் முடிவைச் சந்திரிகா எடுக்கக்கூடும்.

நாடுதிரும்பியவுடன் ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில்விக்கிரம சிங்கவுடன் நேரடிப்பேச்சில் இறங்கப்போகிறார் சந்திரிகா. நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு சமாதானப்பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கும்படி நேரடித்தாக்குதல் ஒன்றை ரணிலின்மீது தொடுக்கலாம் அவர்.

உண்மையில் சந்திரிகாவின் முன்னுள்ள இன்றைய ஒரேதெரிவு ஐ.தே.கட்சியுடன் சமரசம் செய்துகொள்வது மட்டுமே. பதின்மூன்றாவது நாடாளுமன்றின் சமன்பாட்டின் படி, குழப்பவாதிகளான ஜே.வி.பியையும் ஜாதிகஹெல உறுமயப் பிட்சுகளையும் புறமொதுக்கிவிட்டு ஏதாவது காரியங்களைச் செய்யவேண்டு மெனில் சந்திரிகாவுக்கு ஐ.தே.கட்சியின் துணையை நாடுவதைத்தவிர வேறெந்தவழியுமே கிடையாது.

இவ்வாறானதொரு உடன்பாட்டை; ஐ.தே.கட்சியுடன் ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் சந்திரிகா வெற்றிபெறுவாராயின் அது 'ஒரு தேசிய அரசாங்கம் என்ற' கட்டத்தை அடையக்கூடும். அவ்வாறான ஒரு கட்டம் அடையப்படுவது சிறிலங்காவின் அரசியலிலும், இலங்கைத்தீவின் அரசியலிலும் காத்திரமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய நாடாளுமன்றப் பலத்தினைக் கொண்டிருக்கும்.

இன்று சந்திரிகாவின் முன்னுள்ள அவசர நிகழ்வுகள் என்ன?

நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிருபித்து தனது அரசாங்கத்தை இயங்குநிலைக்கு கொண்டுவரவேண்டும். இதற்கு தற்போதைய 106 ஆசனங்களுடன் மேலும் 07 ஆசனங்களின் ஆதரவு தேவை.

சமாதானப் பேச்சுக்களை முன்கொண்டுசென்று ஒருவளர்ச்சிப்போக்கினை எட்டுதலும், அதன்மூலம் இந்த வளர்ச்சிப்போக்கினைக்காட்டி-ரோக்கியோ நிதி உதவிப்பொதியினைப் பெற்றுக்கொள்ளுதல். இதன்மூலம் நாட்டில் பொருளாதார அபிவிருத்தி, புனரமைப்புப்பணிகளை மேற்கொள்வதனூடாக தன்னுடைய அரசியலினை முன்நகர்த்திவிடமுடியும்.

நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையினை ஒழித்து வெஸ்ற்மினிஸ்ரர் முறையிலான நாடாளுமன்ற ஆட்சியைக்கொண்டுவந்து அதிகார பலமுள்ள பிரதமர் பதவியைப்பெறுவதன்மூலம் தனது அரசியல்வாழ்வினை நீடித்துக்கொள்ளுதல் அல்லது அரசியல் யாப்பில் ஒரு திருத்தத்தை மேற்கொள்வதன்மூலம் மூன்றாவது முறையும் தான் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடிய வாய்ப்பினைப் பெறுதல்.

இவையே சந்திரிகாவின் இன்றைய அரசியல் நிகழ்ச்சி நிரலின் உள்ளடக்கங்கள். இவற்றில் மிக அவசரமானது. அவசரமானது, ஆறுதலாக ஆனால் கட்டாயமாக நிறைவேற்றப்பட்டே ஆகவேண்டியது என்ற வகையில் நிகழ்வுகள் அமைந்துள்ளன.

இதில் முக்கியவிடயம் என்னவெனில் இவை அனைத்தும் எதை முன்வைத்து நிகழ்த்தப்பட உத்தேசிக்கப்படுகின்றனவெனில், சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்வைத்தே என்பது சற்று அங்கதமானதுதான். ஏனெனில் சமாதானப் பேச்சுக்களில் எட்டப்படவேண்டிய முன்னேற்றம் என்ற நிர்ப்பந்தம் பொருளாதார உதவிகளுடன் பிணைக்கப்பட்டிருப்பதாலேதான் சந்திரிகாவின் பார்வை அத்திசையில் நகர்கிறது. இல்லையேல் செவிடன் காதில் ஊதிய சங்காகச் சமாதானத்துக்கான குரல்கள் போயொழிய வேண்டியதுதான்.

மறுதலையாக சந்திரிகாவும் ரணிலும் மனச்சுத்தியுடன் தமது அரசியற் பேரத்தை நிகழ்த்தி, தேசிய அரசொன்றை நிறுவி அடிப்படைவாதச் சக்திகளை புறமொதுக்குபவர்களாக இருந்தால்;

நேர்மையாக தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வொன்றை முன்வைப்பார்களாக இருந்தால் - இதனை வேறு வார்த்தைகளில் சொல்வதாயின், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை ஏற்றுக்கொண்டும், அர்த்த முள்ள சமஷ்டி முறையிலான தீர்வொன்றை முன்வைப்பார்களாகவும் இருந்தால்;

இன்றைய நாடாளுமன்ற சமன்பாட்டிற்குள்ளேயே சிறிலங்கா வின் இரண்டாவது குடியரசு யாப்பினை புறங்காண்பதுகூட மிக இலகுவானதொரு விடயமே.

சிறிலங்காவின் தற்போதைய அரசியல் யாப்பினை மாற்றியமைப்ப தாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும், சிலவேளைகளில் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பும் தேவைப்படுகின்றன. ஐ.தே. கட்சியின் 82, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 65 ஆக 147 ஆசனங்களின் பலம் சாதாரணமாகவே தேசிய அரசாங்கத்திற்குக் கிடைத்துவிடும். அது இனப்பிரச்சினை விடயத்தில் நேர்மையுடன் செயற்படுமானால் தமிழர்களின் 22 ஆசனங்களும் பக்கபலமாக இணையும்போது எந்தவிதமான எதிர்க்கேள் விகளுக்குமே இடமின்றி அரசியலமைப்பு மாற்றம் நிகழ்ந்தேறிவிடும்.

இவை அனைத்துக்குமான அடிப்படைத்தேவை சந்திரிகாவிடம் நேர்மையான அணுகுமுறை உள்ளதா? என்பதுதான். அதனை உடன்தொடர்ந்து ஐ.தே.கட்சி இதற்கு எந்தளவுக்கு ஒத்துழைக்கும் என்பது.


சிறிலங்காவின் கட்சி அரசியலும், பேரினவாத சிந்தனையும் உள்ளவரைக்கும் அரசியல் என்பது குதம்பலாகவே இருக்கப்போகிறது. இரண்டகத்தன்மையுடன், தங்களது வேலைத்திட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு மட்டும் மறுதரப்பாரின் ஒத்துழைப்பினை நாடும் பண்பு நீடிக்கும்வரைக்கும் ஆரோக்கியமான அரசியல் என்பதும் அரசியற்பேச்சுக் களில் நேர்மை, தீர்வுக்கான நாட்டம், அர்ப்பணிப்பு என்பவை பகற்கனவுகளாகவே இருக்கும்.

அவ்வாறில்லாவிட்டால் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டரை வருடங்கள் கடந்தும் இன்னும் ஆரம்பப்புள்ளியிலேயே சமாதான முயற்சிகள் நின்று கொண்டிருக்கமாட்டா அல்லவா?





# எங்களையும் கொஞ்சம் கவனியுங்கோ...!



"...எங்கட சொந்த இடத்தில இப்ப ஆமி இருக்கிறான். அதால எங்களுக்கு அங்க போகேலாமக் கிடக்கு. அதால நாங்க இப்ப அகதியா இஞ்ச இருக்கிறம்.

கொடுமையால் ஏற்படும் அகதி வாழ்வின் அவலத்தை சொல்லியபடி இருந்தது.

நாம் அவர்களை நெருங்கி நாம் சென்ற விடயத்தைக்

அவர்கள் உளரீதியாகவும் தொழில் ரீதியாகவும் முன்னேற்றகரமான பாதையில் செல்ல வழிகாட்டப்பட வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள். அந்த மக்கள் கூறியது போல ".....எல்லாருக்கும் எங்கட நிலமை நல்லா தெரியும். எல்லாரும் வந்து பதிஞ்சு பதிஞ்சு போட்டு போறவை உதவிதான் ஒண்டும் செய்யிறதில்லை"

என்கிற நிலமை மாற வேண்டுமல்லவா?

இதேபோன்று இதே குடியிருபில் மட்பாண்ட தொழில் செய்யும் ஒரு குடும்பத்தினரை சந்தித்தோம் அவர்கள் "எங்களுக் கெண்டு தொழில் இருந்தாலும் அதைக் கொண்டு செய்யிற சட்டிபாணையல விற்கமுடியேல்ல. இதால சாப்பாட்டுக் கெண்டு தார நிவாரணம் காணாம இருக்கிறதால சிலநேரம் ஒரு நேரமா

"எங்கட காணியில நிண்ட வேம்பு ஒண்டு பதினையாயிரம்படி கேட்டவங்க நாங்கள் குடுக்கேல்ல. ஆனா இப்ப ரோட்டால பேகேக்க பார்த்தம் ஆமி எல்லாத்தையும் வெட்டிப்போட்டான் தென்னையெல்லாம் வட்டில்லாம நிக்குது வளவப்பார்த்தா வயிறு பத்தி எரியுது...."



எங்களுக்கு ஒரு உதவியும் இல்ல எல்லாரும் வந்து கூட்டம் வைப்பினம் நாங்களும் கையத்தட்டிப்போட்டுவிட வேண்டியதுதான் நாங்கள் அவையலோட சண்டபிடிக்காதது ஒண்டு தான்குறை எங்களுக்கு பள்ளிக்கூடம் நாச்சிக்குடாவில இருக்கு ஆனா அங்க ஆசிரியர் பற்றாக்குறை நிறைய அதால மாதம் நாங்கள் ஆசிரியர்களுக்கெண்டு நூரு இருநூரெண்டு கொடுக்கிறனாங்கள்.

நாங்கள் இப்ப மொத்தமா நாப்பத்தைச்சி குடும்பங்கள் இருக்கிறம் மிகுதி ஆட்கள் இன்னும் வந்து குடியமரவில்லை. எங்களுக்கு தொழில்செய்ய காசு இல்லாம

அடிச்சுப் போட்டு இடைவழியில திட்டம் முடிஞ்சிது எண்டு சொல்லிப் போட்டினம் அதோட இனி உங்கட முயற்சிதான் என்டிட்டு போட்டினம்.

இதில மழைவந்தால் தண்ணிநிற்கும் நாங்கள் இதை யெல்லாம் சொன்னநாங்கள் அவர்கள் இதெல்லாம் செய்துதரலாம் எண்டு தான் சொன்னவையல் இன்னும் செய்து தரேல்ல.

முக்கியமா அரசாங்க அதிபரிட்ட திரும்பத்திரும்ப எதிர்பார்க்கிறது எங்களுக்கு இந்தக் காணியை சம பூமியாக்கி தண்ணி வசதி வீட்டுவசதி சுகாதாரவசதி ஏற்படுத்தித்தந்தால் நாங்கள் எங்கட

# முழங்காவில் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களின் குமுறும் கோபங்கள்

கால்ல நிண்டு அடுத்த முயற்சியை நோக்கிப் போவம்." இதுவே அந்த மக்களின் உள்ளக்குமுறலாக இருந்தது. இதுமாத்திரமன்றி முழங்காவில் பகுதியில் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இந்நிலையில் தான் குடியிருப்புகளில் இன்னும்

எங்களுக்கு ஒருத்தரும் உதவிசெய்யுரதாயில்ல. நாங்கள் இஞ்ச வந்த புதிசுல பாய் உட்பட கொஞ்ச சாமான்கள் தந்தவையல். இப்ப ஒருதரும் ஒண்டும் தாரேல்ல. ஆனா எங்களோடையிருந்து இப்ப கிளிநொச்சி போய் இருக்கிறவைக்கு காசு, சாமான் எல்லாம் குடுத்திருக்கினம்.

எத்தின நாளைக்குத்தான் நாங்கள் மனம் வெம்பியபடி இருக்

கூறினோம். நாங்கள் ஏதோ உதவி வழங்கும் நிறுவனத்தில் இருந்து வந்திருப்பதை போல எண்ணியவர்கள் பின்னர் எங்களை யுணர்ந்து கொண்டு எம்முடன் உரையாடத் தொடங்கினார்கள்.


".......நாங்கள் ஒவ்வொரு இடமா இடம் பெயர்ந்து எத்தின இடத்துக்கு அலையிறது. எங்கட இடத்தில இருப்பமெண்டா ஆமி விடுகிறானில்லை. இஞ்ச

சமைச்சுச் சாப்பிட்டுப்போட்டு நாங்களும் பிள்ளைகளும் இருக்கிற நாங்கள்." என்று கண்ணீர் மல்க கூறினார். நாம் கணேஸ் குடியிருப்பில் இருந்து புறப்பட்டு நாச்சிக்குடா சமாதான சகவாழ்வுத் திட்டம் (75வீட்டுத்திட்டம்) குடியிருப்புக்கு சென்று அந்த மக்களை சந்தித்தோம்.

**அருள், ஜெயசீலன்.**



"இஞ்ச வந்து ஆறுமாதமாகுது எங்களுக்கு இஞ்ச நல்லதண்ணிவசதி இல்ல. இஞ்சயிருந்து முக்கால் மைல் போகோணும் தண்ணிக்கு. அதோட இஞ்ச மலசல கூடம் இல்ல இந்தக் காணிய பாருங்கோ..."



கிறது எங்களுக்கெண்டு ஒரு எதிர்காலம் எப்ப வரப்போகுது என்று இடம்பெயர்ந்து முழங்காவில் கணேஸ் குடியிருப்பில் வசித்து வரும் கணேசமூர்த்தி கமலேஸ்வரி வேதனையோடு எங்களிடம் கூறினார்.

பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் காரணமாகப் பல இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து முழங்காவில் பகுதியில் பல்வேறு குடியிருப்புகளில் வசித்து வரும் மக்களின் குறைகளை கேட்டறியும் நோக்கோடு முழங்காவில் பகுதிக்கு நாங்கள் சென்றோம்.

சுட்டெரிக்கும் பாலைவனம் போல் கொதிக்கும் வீதியூடாக நாம் எமது பயணத்தை தொடர்ந்தோம். சாதாரணமாக எல்லா இடங்களிலும் ஒரு அளவு உஷ்ணம் என்றால் முழங்காவில் பகுதியில் சற்று அதிகமாகவே உஷ்ணத்தை உணரக் கூடியதாக இருந்தது.

காட்டு மரங்களுக்கிடையில் ஆங்காங்கே சிறு சிறு கொட்டில்களை அமைத்து வசித்து வரும் அந்த மக்கள் வெயிலின் அகோரத்தால் வீடுகளுக்கு வெளியே மரங்களுக்கு கீழ்படுத்திருந்தார்கள். இந்தக்காட்சி இன்னமும் போரின்

இருப்பமெண்டா எங்களை கஸ்டம் விடுகுதில்லை ஏதும் உதவி கிடைக்குமெண்டுபார்த்தா... விதானையார் இருபத்தையாயிரம் ரூபாவிற்கு பதியப் போரன் எண்டவர். நாங்கள் எங்கட பழைய விதானை யாரிட்ட இருந்து கடிதம் வாங்கி குடுத்தம். ஆனால் அதுவும் கிடைக்கயில்லை. பிறகு சொன்ன வயள் காணி தந்து குடியமர்த்தப் போறமெண்டு ஆனா காணி அளந்து ஆவணங்கள் ஒண்டும் தரேல்ல எங்கட நிலமைய கொஞ்சம் அரசாங்க அதிகாரிகள் வந்து பார்த்து நடவடிக்கை ஏதும் எடுக்க வேணும்..." என்று கணேஸ் குடியிருப்பில் வசிக்கும் கணேசமூர்த்தி கமலேஸ்வரி மட்டுமல்ல பெரும்பாலான குடும்பங்களும் இவ்வாறுதான் எங்களிடம் கூறினார்கள்.

இந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகின்ற போதிலும் அவை உரிய காலத்திற்கு கிடைப்பதுமில்லை, அவை அவர்களின் பசியை போக்க போதுமானதாகவும் இல்லை. அந்த மக்கள் இன்னும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

அந்த மக்கள் தெரிவித்த கருத்து, எங்களை ஆரம்பத்தில இஞ்சயிருந்த முஸ்லிம் ஆக்கள் விட்டிட்டுப்போனகாணியல்ல முதல்ல குடியிருத்தினவ பிறகு இஞ்ச முஸ்லிம் ஆக்கள் வந்து குடியிருக்க தொடங்கின உடன எங்களுக்கு வேறகாணி தாரமெண்டு சொல்லி எழும்பச்சொன்னவையள் நாங்கள் புதிசா இஞ்சவந்து இப்ப குடியமர்த்தினர். ஒரேக்கர் காணிக்கு உறுதி தாறம்எண்டும் சொன்னவையல் இப்ப முக்கால் ஏக்கர்தான் இருக்குபோல, இன்னும் காணி அளக்கேல்ல.

எங்கள எல்லோரும் வந்து



"இஞ்ச வந்தாப்பிறகு பிள்ளைகளுக்கு ஒரே வருத்தமுங்கோ....தகர வெக்கேக்க பகல்ல இருக்கேலாது அதோட தண்ணிக்கு கனதூரம் நடந்துபோகோணும் நாங்கள் பௌசறில தண்ணி கொண்டு வந்து தரச்சொல்லி கேட்டனாங்க ஆனால்தாரமெண்டு சொன்னவை ஆனா இதுவரையும் தண்ணி தரேல்ல......"

பாத்திட்டும் போனவையல் எங்களுக்கு இப்பஇருக்கிற பெரிய பிரச்சின தண்ணீர்தான் என்ன தேவைக் கெண்டாலும் கனதூரம் போய்த்தான் தண்ணி கொண்டுவரவேண்டும்.

எங்களுக்கு இஞ்ச ஒரு நிறுவனம் பொதுக்கிணறு ஒண்டு கட்டித்தந்தவையல் அதில காலையில் 03 மணிக்கு எழும்பினாத்தான் ஒரு குடம் தண்ணி எடுக்கலாம் அதால சமைக்கவும் குடிக்கவும் தண்ணியில்ல நாங்கள் எல்லாரும் கடல்தொழில்தான் செய்யிறனாங்கள்

இருக்கு அதோட எங்களுக்கு மலசல கூடம் இல்லாம பெரியபிரச்சினையா இருக்கு. மலசல கூட வசதிசெய்து தரச்சொல்லி கேட்டனாங்கள் இன்னும் கட்டித்தரேல்ல. அதோட இப்ப எங்களுக்கு இன்னுமொரு பயமிருக்கு அந்தக்காணி இல்லாமப் போனமாதிரி இந்தக் காணியும் இல்லாம போயிருமெண்டு பயமாயிருக்கு நாங்கள் அரசாங்க அதிபரிடம் கேட்டுக் கொள்ளுறது இதுதான் அதாவது எங்களுக்கு காணி உறுதி தந்து மலசல கூடமும், நல்ல தண்ணிக் கிணறும் கட்டித்தரவேணும் அதோட ஆரம்பத்தில சொன்னமாதிரி நிரந்தரவீடும் கட்டித்தரவேணும். ஏனென்றால் எங்களுக்கு இப்ப உள்ள தகரக் கொட்டில்ல இருக்க முடியேல்ல சரியான வெக்கையா இருக்கு இதால பிள்ளைகளுக்கு கனக்க வருத்தம் வருகிது. இஞ்சவந்தாப்பிறகு தகர வெக்கைக்கு பிள்ளையளுக்கு வருத்தம் கூடிவிட்டது அதோட இஞ்சகாணி பள்ளம் புட்டி யாக்கிடக்குது இத டோசர் விட்டு இடிச்சு சமபூமியாக்கி தாரனெண்டு சொன்னவை கொஞ்சம்

வாழ்ந்துவருகின்றனர். இவர்களுக்கு நிவாரணம் கிடுகு, தவிர ஏனைய உதவிகள் எதுவும் வழங்கப்படுவதில்லையென கூறுகின்றனர். இவர்களின் பெரும்பாலானோரின் காணிகள் யாழ்குடாநாட்டில் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்துக்குட்பட்டதாகவே உள்ளது. இன்னும் சிலர் தங்களின் நிரந்தர இடத்தில் சொந்தக் காணியற்றவர்களாக காணப்படுகின்றனர். இவர்கள் எப்போது தங்கள் ஊர் திரும்புவது..., 14 ஆண்டுகள் வரை அகதிவாழ்வு வாழ்ந்த இவர்களின் நிலை இனி யாவது மாற்றப்படுமா? இவர்களின் பிள்ளைகளின் எதிர்காலம் இன்று கேள்விக்குறியாகவே உள்ளது

இது இவ்வாறிருக்க 1987 90 காலப்பகுதியில் இந்தியா, மற்றும் ஏனைய இடங்களுக்குச் சென்றவர்களின் காணிகளில் முழங்காவில் குடியிருப்புகள்சில அமைந்துள்ளன. முன்னர் இடம்பெயர்ந்தவர்களின் மீள்வருகையால் பின்னர் இடம்பெயர்ந்த இவர்கள் இன்னோர் இடப்பெயர்வை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் பண்டிதர் குடியிருப்பு செல்லப்பிள்ளை குடியிருப்பு, கணேஸ் குடியிருப்பு ஜெகநாதன் குடியிருப்பு போன்ற குடியிருப்புகளில் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணரப்படாமல் உள்ளது. இந்த அகதி முகாம் வாழ்மக்கள் திட்டமிட்டு அடிப்படை வசதிகளுடன் குடிய மர்த்த அதிகாரிகளும் அபிவிருத்தியாளர்களும் வழிசமைப்பார்களா? ●

கோட்டை முகாமை விட்டு 1990 செப்டெம்பர் 26 அன்று அதிகாலை சிறிலங்காப்படையினர் தப்பி பண்ணை வீதி வழியாக மண்டைதீவுக்கு தப்பியோட, 3 நூற்றாண்டுகளின் கோட்டை முழுமையாக விடுதலைப்புலிகளின் வசமானது. தியாகி லெப்.கேணல் திலீபன் வீரச்சாவைத்தழுவிய நேரம் அப்போதைய யாழ் மாவட்டத்தளபதி பானு(கேணல் பானு) கோட்டையில் தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றினார்.

கோட்டையை வைத்து யாழ்ப்பாணத்தை சிதைத்த படைகள் அல்லோலகல்லோலப்பட்டு தப்பியோடிவிட்டன. இந்தப் படைகள் மண்டைதீவுக்கு தப்பியோடி அங்கிருந்த சிங்களப் படையினருடன் இணைந்து கொண்டன. அப்போதைக்கு மண்டை தீவினை ஆக்கிரமித்து நிலைகொண்டிருந்த படைகளின் இலக்கு நிறைவேறியது.

அதனால் மண்டைதீவிலிருந்து 26 ஆம் திகதியன்றே படைகள் பின்வாங்கத்தொடங்கின. இந்த மீள படைநகர்வு ஊர்காவற்றுறை நோக்கி ஆரம்பமானது. மீளவும் தீவக மக்களுக்கு கிலி பிடிக்க ஆரம்பித்தது. ஏற்கனவே தீவகத்தை

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்... 12



விட்டு மக்கள் வெளியேறிய போதும் தங்கள் வீடுகளைக்காக்க வயதானவர்கள் இருந்தனர். படை பின்வாங்கல் பகலில்தான் நடந்தது. அதனால் அராலித்துறை வழிப்படகுப்பயணம் அதி காலையுடன் முடிந்ததால் - இந்தப்படை பின்வாங்கலில் மக்கள் அகப்படாது தப்ப முடிந்தது. 26 முதல் 28 வரை தாம் கொண்டு வந்த சாமான் சக்கட்டுகளுடன் படைகள் பின்னுக்கு நகர்ந்து கொண்டிருந்தன. அதனுடன் சிங்களப்படை நிலை காரைநகரிற்கு சென்று விடும் என்றுதான் மக்கள் நினைத்தார்கள். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. ஊர்காவற்றுறையை பலம்மிக்க தளமாக வைத்திருக்கும் நோக்குடனேயே படைகளின் பின்நகர்வு நடந்தது. ஊர்காவற்றுறையில் புகழ் பெற்ற சென்.அன்ரனிஸ் கல்லூரியை கடைசி நிலையாகக்கொண்டு பாடசாலைக்கு முன்னாக மண் அரண் அமைத்து பின்வாங்கிய சிங்களப்படைகள் தம்மை நிலைப்படுத்தத் தொடங்கின. பண்டைத்தமிழ் துறைமுகம் -தொல்கால கல்வெட்டினைக்கொண்டிருந்த துறைமுகம் உள்ளிட்ட ஊர்காவற்றுறை நகரம் சிங்களப்படைகளால் சிதைக்கப்பட்டு பாரிய படைத்தளமாக 28 ஆம் திகதி மாறியது.

ஊர்காவற்றுறைக்கு மண்டைதீவுப்படைகள் பின்வாங்கி விட- 35 நாட்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மண்டைதீவு விடுபட்டது. தீவகத்திற்கான பண்ணைப்பாதையும் விடுவிக்கப்பட்டது.

அராலித்துறை வழியாக இரவில் தப்பியோடிய மக்கள் கோட்டை மீட்பின் விளைவாக- இரவிலும் பகலிலுமாக பண்ணை வீதி வழியாக தமது சொந்த நிலத்திற்குத் திரும்பினர். ஆனால் இலகுவாகத்தமது இடத்திற்கு வரத்தக்கதாக பண்ணைவீதி இருக்கவில்லை.

பிரதான பாலம் தகர்க்கப்பட்டிருந்தது சாலை துண்டிக்கப் பட்டிருந்தது. சாலையில் இருந்து மதகு நீர்ப்போக்கு குழாய்கள் சிதைக்கப்பட்டு பல இடங்களில் மண்டைதீவுச்சந்தி வரை சாலை துண்டாடப்பட்டிருந்தது.

அதனால் உடனடியாக மக்களால் அவ்வழியாக நுழைய முடியவில்லை. ஆனால் சிங்களப்படைகளால் பிடிக்கப்பட்டு திரும்பியே வராத தமது உறவுகளின் நிலையை அறியத்துடித்த அவர்களின் உறவுகளான மண்கும்பான்-அல்லைப்பிட்டி- மண்டைதீவு வாசிகள் குருநகரில் மீன்பிடிப்படகுகள் வழியாக செல்வதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டனர். படைகளால் முற்று முழுதான ஆக்கிரமிப்பில் இப்பகுதிகளே இருந்தன.

சாலை துண்டிக்கப்பட்டிருந்ததும் - அதில் கண்ணி வெடிகள் - மிதிவெடிகள் படைகளால் புதைக்கப்பட்டிருக்கலாம் என்பதாலும் மக்கள் அதன் வழி செல்ல முடியவில்லை. ஆனால் ஆத்தலைந்து காணாமல் போன தம் உறவுகளைத்தேடி கடல் வழி அவர்களின் உறவுகள் மண்டைதீவுக்குள் நுழைந்தன.

அங்கு அவர்கள் கண்டகாட்சி குருதியை உறைய வைப்பதாக இருந்தது.




துருவன்

தொல்லியல்

# வன்னியில் எடுக்கப்பட்ட யானை உருவ மண்சிற்பம்

வவுனியாவில் ஒரு தொல் பொருள கலைச் சாலை இருக் கின்றது. சிங் களக் கலாசாரப் பாணியில் நகர மத்தியில் அமைந் துள்ளது. இத னுள் இருக்கும் தொல் பொருட் கள் எவை எனப் பார்க்கும் நோக்கில் அதனுள் நுழைந்தோம்.

முதலில் வாசலில் வரவேற்றது புத்தர் சிலையொன்று. அதனை கடந்து உள்ளே சென்றால் அதிகம் புத்தர்சிலைகள் அவற்றிற் குரிய காலங்கள் குறிப்பிடப்பட்டு வைக்கப் பட்டிருக்கின்றன. வவுனியாவிலும் - வன்னியி லும் எடுக்கப்பட்ட புத்தர்சிலைகள் அவை. இன்னமும் தொன்மையானவை ஏதாவது இருக்குமா எனத் தேடியபோது ஒரு பக்கத்தில் சில மட்பாண்டங்கள் இருந்தன. மிக நேர்த்தி யான - நவீனம் என இன்று கூறப்படும் சிற்பங்



மண்ணினால் புருவ அலங்காரங்கள் செய்யப் பட்டுள்ளன. முகப்பக்கம் கண் அழுத்திக்கீறப் பட்டுள்ளது. கோது வடிவுடையதான இந்த மண்யானையின் ஓட்டுத்தடிப்பு சுமார் அரை



அங்குலமாகும். வட்டக்கச்சியில் அண்மையில் எடுக்கப்பட்ட மண்யானை உருவங்களை விட 1998 காலப்பகுதியில் அக்கராயனில் மண் யானை உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அக்கராயன் இடதுகரை அணைக்கட்டு வீதி யில் பெ.கணேசன் எனப்படுபவரின் வீட்டு வளவுள் மண்வெட்டியபோது யானைகளின் உருவச்சிற்பங்கள் உடைந்த துண்டுகளாக எடுக்கப்பட்டன. இது மேற்கொண்டு அகழ்வு செய்யப்படவில்லை. இதை விட பூநகரி, குமுழமுனை கிராமத்தில் ஒரு யானை உரு வச்சிலை கலைச்சிற்பம் எடுக்கப்பட்டது.

அக்கராயனில் - வட்டக்கச்சியில் எடுக்கப்பட்ட யானை உருவச்சிலைகளை

களுக்கு இணையான மண்சிற்பங்கள் இருந் தன.ஒரு மண் உருவ யானைத்தலையும் இருந்தது. இவை எடுக்கப்பட்ட இடம் கிளி நொச்சி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கிளிநொச்சியில் எங்கு எப்போது எடுக்கப் பட்டவை என குறிப்பிடவில்லை. அண்மைக் காலங்களில் கிளிநொச்சி- மல்லாவிப் பகுதிகளில் அதிகம் மண்சிற்பங்கள் எடுக் கப்பட்டன.

இந்த நிலையில் கிளிநொச்சியில் புதையுண்ட யானைகள் பற்றிப் பார்க்கலாம்.


அண்மையில் பல மண்யானை உருவச் சிலைகள் கிளிநொச்சியின் வட்டக்கச்சியில் அகழ்வு செய்யப்பட்டன. வட்டக்கச்சியில் உள்ள புழுதி ஆறின் படுகைக்கரையோரத்தில் இவை அகழ்வு வேலையொன்றின் போது கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் தொல்பொருள் தேடலாளர் ந.குணரட்ணம் குழுவினர் அப்பகுதியில் அகழ்வுப்பணியை மேற்கொண்டு உடைந்த நிலையில் நாலு மண்யானைகளை எடுத்தனர். பின்னர் இந்த உடைந்த மண் யானைகள் பொருத்தப்பட்டன. இந்த மண் யானைகள் சுமார் ஒரு அடி உயரமானவை மிகவும் நேர்த்தியாக செப்பனிடப்பட்டு


விட பூநகரியில் எடுக்கப்பட்ட யானை உருவத்தலை தோற்றத்தில் வேறுபாடானதாக உள்ளது. மனிதர்களின் ஆரம்ப கலை மண் சிற்பங்களில் ஆரம்பமாகின்றது. மண்சிற்பங் களாக உருவாக்கப்பட்டவை விலங்குருக் களாகும். இந்த விலங்குருக்களின் செப்பனிடப்



பட்டவையாக வன்னியில் எடுக்கப்பட்டுள்ள யானை உருவங்களின் சிற்பங்கள் விளங்கு கின்றன. இவை இன்னமும் காலக்கணிப்புக்குட் படுத்தப்படவில்லை. இந்த யானை உருவச் சிலைகளை கிளிநொச்சி அக்கராயன் வலது கரையில் உள்ள தொல்பொருள் சேகரிப்பு மையத்தில் ஆர்வலர்கள் சென்று பார்க்கலாம்.

குரலோன்





## மண்ணின் மைந்தர்களின் கதை



# "நீங்கள் வந்திருக்காவிட்டால் எதிரிக்குள் பாய்ந்திருப்பேன்"

ஓயாத அலைகள் 03இன் தொடர் நாவற்குழி பாலத்தை அண் மித்திருந்தது. எதிரிக்கு எமது நகர்வு தெரியாமல் இருக்க உப்புத்தரையில் சுமார் இரண்டரை கிலோமீற்றர் தவண்டே நகரவேண்டியிருந்தது. எமது நகர்வு எதிரிக்கு தெரிவதற்கு நியாயமில்லை என்பது எமக்கு நன்றாகத்தெரியும். என்றாலும் நாம் மெதுவாக, நிதானமாக சத்தம் சந்தடி யில்லாமலேயே ஊர்ந்து கொண்டி ருந்தோம்.

கும்மிருட்டு எங்கும் பரவிக் கிடந்தது. ஒருவர் ஊர்ந்து செல்லும் போது அவரது காலில் அடுத்தவரின் தலை உராயுமளவிற்கே மிக நெருக் கமாக நகர்ந்துகொண்டிருந்தோம். சற்று தவறுவீட்டாலும் எமது நகர்வுப் பாதையை தவறவிட்டுவிடுவோம். என்பதை அந்த கடுமையான இருள் மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்தியது. எனவே இடையிடையே ஒருவரை ஒருவர் தொட்டுப்பார்த்தவாறே நகர்ந்து கொண்டிருந்தோம்.

எமது இரகசிய நகர்வு கும்மிருட்டில் சுமார் இரண்டரை மணி நேரம் தொடர்ந்து தடை அணிக்கு மாத்திரம் விடைகொடுக்க தடையணி எதிரியின் தடைவேலிக்குக்கிட்டவாக சென்று தங்களது நிலைகளை சரி செய்தனர். தாக்குதலுக்கான நிலை எடுத்துவிட்டனர். இரண்டாவது அணி யான ஆதரவுச்சூட்டு அணியும் தாக்கு தலுக்கான நிலை எடுத்துவிட்டது.

நடைபேசியூடாக சண்டைக் கான சமிக்ஞைகள் பகிரப்பட்டுவிட் டன. அப்போதுதான் எம்மை நோக்கி ஊர்ந்து மிக வேகமாக ஒரு உருவம் வருவதை அவதானித்தோம். தளபதி வீரமணி வருபவனை சுட்டிக்காட்டி யாரென கேட்க, நான் அது அச்சுதன் என்று அவரது சந்தேகத்தை நிவர்த்தி செய்தான். வேக வேகமாக வந்த அச்சுதன், தளபதி வீரமணியிடம் சொன்னான்.

5.4 (பைவ்-போர்) தடை அந்தா தெரியுது, (50மீற்றர் இருக்கும்) உடைக்கலாம், ஆனால் ஆமி இரண்டு, இரண்டு பேராக மாறி, மாறி சுற்றுக்காவலில் (ரோந்து) செல்கிறான் என்னசெய்வது என சிந்து அண்ணை கேட்டுவரச்சொன்னவர் என்றான்.

எவ்வளவு நேர இடை வெளிக்குள்ள மாறுரான் என்று வேகமா பார்த்துக்கொண்டு வா என்று அச்சுதனை அனுப்பிவிட்டோம். சொன்ன மாத்திரத்திலேயே அச்சுதன் முதலை ஆட்களைக்கண்டு பாய் வதைப்போல் மின்னலென ஊர்ந்து சென்று அதேவேகத்தில் திரும்பி வந்தான்.

குறைந்தது 05 நிமிடத் திற்கு ஒருமுறை மாறுகிறானாம். என கூறினான் அச்சுதன். அவன் சந் தித்து விட்டுச் சென்றதும் அடிக்கச் சொல் அல்லது அவன் சந்திக்கும் போது நான்குபேரையும் சுட்டுவிட்டு, தடையை உடைக்கச்சொல் என்ற மேலதிகாரியின் கட்டளையை, தனது பொறுப்பாளருக்கு எடுத்துச் சென்றான்.

அச்சுதன் சென்று சுமார் 05 நிமிடம் வரை எதுவித அசைவோ, ஓசையோ! எழவில்லை. ஆனால் எதிரியின் பிரதேசம் திருவிழா வொன்று களைகட்டியதுபோல் மின் சார விளக்குகளால் நிரப்பப்பட்டி ருந்தது. நாவற்குழி பாலத்தை அண்டியுள்ள எதிரியின் முகாம்களி லும், எதிரியின் காவலரணிலும் கண்டி வீதியிலும், கூடுதலான மின்குமிழ்கள் ஒளிர்வூட்டிக்கொண்டிருக்க, எதிரியின் தேடொளிகள் நாம் நகர்கின்ற பக்க மாக தனது தேடலை தொடர்ந்த வண்ணமே இருந்தது.

ஒட்டுமொத்தமாக எதிரியின் பிரதேசம் பகல்போலவே இருந்தது. பகல் போன்ற அந்த வெளிச்சத்தில் எதிரி எம்மை நன்கு அவதானித் தவாறே இருக்கிறான். எமது நகர்வு களின் ஏதாவது ஒரு அசைவு காட்டிக்கொடுத்து விட்டால், நிலைமை மிகமோசமாக இருக்கும். என்பதை உணர்ந்த தடைஅணிகள் மிகுந்த அவதானத்துடனேயே தமது செயல் திட்டங்களை நிறைவேற்றத் தொடங்கிவிட்டனர்.

வழமையான தடை உடைப்பிற்குப்பதிலாக இம்முறை வித்தியாசமான வேட்டோசையுடனே சண்டைதொடங்கியது. அதன்பின் தான் வெடிமருந்து பொதி (ரோபிட்டோ) வெடித்தது. அப்போதே ஏதோ வித்தியாசமாக ஏதோ நடந்து விட்டதை உணர முடிந்தது பெரும் பாலும் சுற்றுக்காவலில் (ரோந்து) எதிரிகளின் கதை முடிந்தது. என தெரிந்து கொண்டவர்களாய், எழும்பி எமது நகர்வை வேகப்படுத்தினோம். எதிரியின் தடைகள் ஒன்று, இரண்டு, மூன்று என பல கடந்து கடைசித் தடையை கடந்தபோது அச்சுதன் ஓடிவாங்கோ... ஓடிவாங்கோ என.. கூப்பிட்டவாறே, அடையாள சமிக் ஞையை முறைப்படி காட்டிக் கொண்டிருந்தான்.

சண்டை தொடங்கிவிட் டதால் எதிரியின் தாக்குதலும் உக்கிரமடையத் தொடங்கிவிட்டது. பல விதமான எறிகணை வந்து வீழ்ந்து கொண்டிருந்தது. எறிகணை களின் சிதறல்கள் எல்லாத் திசைக ளையும் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டன. எதையுமே பொருட்படுத்தாத அச்சுதன், இதால..... இதால ஓடுங்கோ! இதையும் பார்த்திட்டுப் போங்கோ! என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணத்திற்கான உக் கிரச்சமர் தொடங்கி களமுனை மிக மிக கொந்தளிக்கின்ற நேரத்திலும், எதுவித பதற்றமும் இன்றி இயல்பாக தனது களப்பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். அன்று மட்டுமல்ல அவன் இயக்கத்திற்கு வந்தநாள் தொட்டு என்றுமே அவன் எந்த வேலையிலும் பதற்றமில்லாதவனா கவே இருந்தான்.

யாழ் மீட்புச்சண்டை உக்கி ரமைடைந்துவிட்டது. பல நாட்கள் நடந்த பலத்தசண்டையின் பின் பெரியதொரு பிரதேசம் எமது கைக ளுக்குவந்துவிட்டது. எனவே மேலும் சிலபிரதேசங்களை மீட்க திட்டங் களை, தெளிவுபடுத்தினார் தளபதி சொர்ணம் அவர்கள். அதற்கமைய எமது ஆயத்தங்கள் செய்யப்பட்டு விட்டன. அந்த திட்டத்திற்கான வேவுப்பணிகளில் அச்சுதனும் பங்கேற்றுவிட்டு குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டனர். அப்போதுதான் அந்தச்சோகம் நடைபெற்றது.

18.05.2000 இரவு 10 மணி யிருக்கும். மறுநாள் நடக்கவிருக்கும் சண்டைக்கான திட்டங்கள் எல்லோ ருக்கும் தெளிவுபடுத்தப்பட்டு, முழு ஆயத்த நிலையில் இருக்கும்படி பணிப்புரை வழங்கப்பட்டது. அதற் கமைய நாம் எல்லோரும் வேகமுடன் எமது வேலைகளைச் செய்துவிட்டு, சிறிது நேரம் நித்திரை செய்வோம்

— க. மிரேசு —

என சென்றபோதே எதிரியின் எறி கணை ஏவுதளங்கள் முழக்கமிடத் தொடங்கின. எல்லோரும் எங்களது பொருட்களை எடுத்துக்கொண்டு காப் பரணுக்குள் புகுந்து விட்டோம்.

எல்லோரையும்போல் அச்சு தனும் தனது சுடு கருவியையும் ஏனையபொருட்களையும் எடுத்துக் கொண்டு பக்கத்திலுள்ள காப்ப ரணுக்கு ஓடினான். ஆனால் அப் போது எறிகணை விழ ஆ... அம்மா... என்ற சத்தம் கேட்கிறது.

ஐயோ! என்றசத்தம் கேட்ப தும் கேட்காததும்போல் எறிகணைகள் வந்து விழுந்துகொண்டே இருந்தது. அது யாருடைய சத்தம் என நாம் நொடிப்பொழுதில் திகைத்துப் போயிருக்க பெரியதொரு காயத் துடன். மிரேசண்ணோய்... என்று சத்தம் போட்டுக்கொண்டே பிரதாபன் ஓடி வருகிறான். வந்தவன் கையை காட்டி அச்சுதன் என்றுதிசை யைக்காட்டினான்.

அந்த கும்மிருட்டிலும், எறி கணை புகைக்குள்ளும் ஓடிச்சென்று அச்சுதனை நானும், தேவனும், இயல்வாணனும் தூக்கினோம். இரத்தம் வழிந்தோட அச்சுதனின் உடலெல்லாம் தலையிலிருந்து கால்வரை இரத்தத் தால் தோய்ந்து விட்டதைக் கண்டோம்.

வேகமா தூக்குவோம்........ எனச்சொல்லி தூக்கிவந்த போதுதான் அவனது காயங்களை பார்க்க முடிந்தது. வலது தோல்பட்டை, கழுத்து, நெஞ்சு போன்ற இடங்களில் காயம். எனவே மருந்திட செய்த முயற்சி பயன்தரவில்லை, வேதனை யால் அவன்துடித்து சிகிச்சைக்கு ஒத்துழைக்கவில்லை. நாம் தூக்கி வந்த 03 நிமிடங்களிலேயே அவனது உயிர் ஈழத்தாயை முத்த மிட்டுவிட்டது. நாளை நடக்கப்போகும் சண்டையில் நிறையச்செய்ய வேண்டும் என்று ஆசையில் இருந்த வனை, வீர மரணம் அரவணைத்துக் கொண்டது.

லெப். அச்சுதன் (அன்ரனி பிரான்சிசு ஜெகதீபன்) வீரச்சாவ டையும் போது அவனது உடலிருந்து வெளியேறிய இரத்தத்தின் அளவை என்னவென்று குறிப்பிடமுடியும்.

யாழ் மீட்பு நாவற்குழி சண் டையில் அச்சுதன் நிறையவே சண்டைகளை செய்து, சாதனைக ளைப் படைத்தான்.

சாதாரண தோற்றத்தைக் கொண்ட அவன் எப்போதுமே அமை தியாகவே இருப்பான். யாருடனும் கதைக்கமாட்டான் கேள்விக்கு மாத்திரமே பதிலளிக்கும் அவன், ஒரு சாதுவானவன் போலவே இருப்பான். ஆனால் அவனது நடை,சண்டை, செயற்பாடுகள் பாரம் சுமத்தல் என்பன இவனை அவனா என்று ஆச்சரிப் படும் அளவுக்கு சிந்திக்கவைக்கும்.

1998 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பல நாட்கள் ஊரியான், சுட்டதீவுப்பகுதிகளில் எங்களின் நீண்ட தற்காலிக எல்லைக்காவல ரண்கள், அமைக்கப்பட்டு காவல் காத்து நின்றகாலங்கள். துன்பங்களும் வேதனைகளுமான அந்த களவாழ்க் கையின் போது, அச்சுதன் எவ்வளவு நிதானமாக செயற்பட்டான், அவனது கடமையுணர்வு எத்தினை எத்தினை வரலாற்று உண்மை என்பதை எல்லோரும் நினைத்துப்பார்க்கிறோம்.

ஊரியானில் நிலைகொண்டிருந்தபோது மாரிகாலம் என்பதனால் எமது உழவு இயந்திரம் உணவுப் பொதிகளுடன், சேற்றுக்குள் போராடியே வந்துசேரும். சில நாட்களில் வயல்வெளிகளில் தண்ணீர் நிரம்பி விட்டால், எங்களது உணவு வண்டி நின்றுவிடும் உணவும் வராது.

ஆனால் அது போன்றஇக்கட்டான நிலையில், நிச்சயமாக எங்களது இரண்டு சக்கர உணவு வண்டி ஒன்று வெளிக்கிடும். அதுதான் லெப்.அச்சுதன். என்னதான் மழை, காற்று, குளிர், ஓயாத எறிகணை வீச்சு எதுவென்றாலும் அச்சுதன் உணவை கொண்டுவந்தே சேர்ப்பான்.

சில நேரங்கள் நாளொன் றுக்கு மூன்று வேளையென 20-30 நாட்களும் சுமார் 8-12 கிலோமீற்றர் சென்று காவிக்கொண்டு வருவான். எமது காவலரணிலிருந்து முரசு மோட்டை மகாவித்தியாலயத்திற்கும் வந்து சிலவேளைகளில் உணவை சுமந்து வந்து தந்த அவனது உணர்வை என்னவென்று சொல்வது.

முன்பே குறிப்பிட்டது போல் அச் சுதன் எப்போதும் பதற்றப்படவே மாட் டான். குறித்த நாளொன்றில் ஊரி யான் பகுதியில் எமது அணி ஒன்று முன்தாக்குதலுக்கென திரையிடும்

(22 ஆம் பக்கம் பார்க்க..)








# ரமணா

**திருக்கோவில் கரன்**

மனம் ஏதோ இனம் புரியாத அங்கலாய்ப்புடன் இருந்தது. என்னை நான் சுதாகரிக்க கஷ்டப்பட்டேன். எப்போதும் போல் நிழல் படக்கோவையை எடுத்து ரமணனின் நிழற்படத்தை பார்த்தேன். அவனது யதார்த்தமான தத்துவங்கள் என்னை ஒரு நிலைப்படுத்தியது. எனது துயரங்களை சுமக்கும் சிலுவை மட்டுமல்ல அவன் "ரமணா நான் கொடுத்து வைத்தவன்.." என்னை அறியாமலே ரமணாவின் நிழற்படத்தோடு பேசியதை நினைக்க எனக்கு வெட்கமாகவும் இருந்தது. இருந்தாலும் ஆலயங்களில் கற்சிலைகள் முன்னால் துயரத்தை அழுது தீர்ப்போரில் விட நான் ஒருபடிமேலானவன் என நினைத்தபடி நிழற்படத்தை பார்த்தேன். அவன் கண்டிப்போடு சொல்லும் சில அறிவுரைகள் என் எண்ணத்தில் மின்னலாய் ஓடியது.

ரமணா இப்போதுதான் டீன்.ஏச். வயதின் நிறைவை எட்டிப்பிடித்தவன் என்னோடு அறிமுகமான கடந்த காலங்களை நினைத்து பார்க்கின்றேன்......

"வணக்கம்"

இந்த ஒற்றை சொல், புன்சிரிப்பு, அழகான பேச்சு, அறிவீனங்களை எதிர்க்கின்ற துணிச்சல் என எவரையும் பார்த்தவுடன் வசீகரிக்கும் அழகு அவளிடமும் இருந்தது. இதைவிட அறிஞர்கள் அதிர்ச்சியுறும் தத்துவம், எந்த விற்பன்னரும் வெல்லமுடியாத வார்த்தைப் பிரயோகம் எல்லாம் அவன் மீது எனக்கு மரியாதையை ஏற்படுத்தின. ஆனாலும் அவனோடு எனக்கு நட்பு ஏற்படும் என்பதை நான் எதிர்பார்க்கவில்லை. சாதாரண தரம்வரை படித்த என்னால் ஒரு பல்கலைகழகத்தை தனதாக்கிய ஊரில் பிறந்தவனோடு பேச அச்சமாகவே இருந்தது.

"ரமணா...."

அவன் பெயரை உச்சரித்தபடியே அவன் பின்னால் ஒரு கூட்டம் உலவும் அவர்களை பார்க்க எனக்கு பொறாமையாக இருக்கும் நானும் அவர்களில் ஒருவனாகவில்லையே என்று. தன்னைச்சுற்றி ஒரு கூட்டமே இருப்பதை கண்டு ரமணன் என்றும் பெருமை கொண்டதில்லை. நினைத்ததை நடத்தி முடிக்கும் அரும்பு மீசைவயதில் அவனுக்கு இருக்கும் பக்குவம் ஆச்சரியத்திற்குரியது. "வாழ்ந்து விட்டுத்தான் வாழ்க்கை பற்றி உபதேசம் பண்ண வேண்டும் என்பதல்ல சிந்தனையால் எந்தவயதிலும் வாழ்க்கையின் அனுபவத்தை பெறலாம்" இதை எந்த தத்துவஞானியும் சொல்லவில்லை இந்த ரமணாதான் சொல்லிக் கொடுத்தான். இவனோடு நீண்ட நாள் பழகாவிட்டாலும் இவன் தாய் தந்தையரிடம் இவனைப்போல நானும் தத்துவம் படிக்கவேணும். இந்த வயதிலேயே இவன் இப்படித் தத்துவம் பேசுகிறானே இவன் அப்பா பென்சமின் பிராங்கிளின், எமர்சன், போன்றவையின்ரை தத்துவம் போல தன்ர தத்துவத்தையும் வெளியிட்டிருக்கலாமே என நான் பலதடவை நினைத்திருக்கின்றேன்.

ஆரம்பத்தில் ரமணா எதையும் அதிகமாய் என்னோடு பேசியதில்லை. எனக்காக அவன் அதிகநேரம் செலவழிக்க விரும்பியதும் இல்லை. இதைப்பற்றி பின்னர் ஒரு நாள் அவனே சொல்ல நேர்ந்தது. "நீங்கள் என்னோடை நட்புக்கொள்ள விரும்பிறியள் எண்டதை நான் புரிஞ்சு கொண்டன். எனக்கும் ஒரு நட்பு தேவையாயிருந்தது. ஒரு வயதானவரோட நட்புக் கொள்ளுறதைவிட என் வயது வாலிபனோடை நட்புக் கொள்ளுறதில விழிப்பு அவசியம். வாலிபன்ர உணர்வுகள் திடீரென மாறும், ஆராய்தல், புரிதல் அவசியம்.ஆகவேதான் நான் காத்திருந்தேன்.அவனின் பொறுமையும் பக்குவமும் என்னை சிந்திக்க வைத்தன. எனது எண்ண ஓட்டங்கள் அவனிற்கும் யதார்த்தத்திற்கும் ஏற்றதாய் இருந்தன. தவறான விடயங்களை சுட்டிக்காட்டினான். எனது அன்பு அவனின் அருகில் இருக்கவே நான் விரும்பினேன்.

சின்ன வயதில்மாயத்தோற்றங்களை அனுபவிக்க விரும்பும் வயதில் அவன் ஆற்றல் பலரை அதிரவைத்திருக்கும். எதையும் இலகுவாகவே இவன் சிந்திப்பதுண்டு. வாழ்க்கை சாதாரணமானது வாழ்க்கையில் எதுவும் அதிசயங்கள் அல்ல இயல்பானவை. பதற்றம் யாரையும் காப்பதும் இல்லை. துணிச்சல் எல்லோரையும் வாழவைத்ததுமில்லை. "ஆறிலும் சாகலாம். நூறிலும் சாகலாம்" ஆறில் செத்தால் அறியா வயது, நூறில் செத்தால் அனுபவித்த வயது. இடையில் சாவோரைப்பற்றி நான்.. என ஏதோ அவன் சொல்ல முனைந்து அப்படியே விட்டதும். மீதி என்னவென என்னால் உணரமுடியாமலும் இல்லை... அனுபவிக்க அறியத் துடிக்கின்ற வயதில் நடக்கும் சாவுகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இலட்சியத்திற்காக சாவோரை தடுத்தல் தவறானது. ஆனால் சாவை துரத்துதல்தானே மனிதாபிமானம். இது யாருக்கு விளங்கும். எல்லாமே ரமணாதான் சொல்லிக்கொடுத்தன். நீண்ட நாட்கள் மறைத்த ஒன்றை ஏதோவழியில் பெறமுயற்சித்தேன்.

அதுதான் ரமணன் என்ற தத்துவ ஆசிரியன் பற்றிய தரவுகள். காலம் சரியாக இருக்கும் போது கேட்டால் அவன் நிச்சயமாகவே சொல்வான் என்பது எனக்குத் தெரியும்.

"ரமணா...."

சற்றுத் தாமதமாகவே பதில் குரல் கொடுத்தான். கேள்வியை கேட்டதுமே ஒன்றும் மறைக்காமல் சொன்னான், அவனது கதைக்கு சிறிது நேரம் ஆமாம் என பதிலுரைக்க முடிந்தது. அதற்கு மேல் என்னால் முடியவில்லை. மூளையில் மின்சாரம் பாய்ச்சியது போல தலை விறைத்தது. வார்த்தைகளை உச்சரிக்க நா கூட எழுவதற்கு அதிக கஷ்டப்பட்டது.. ஒரு குழந்தை போல அவனின் கழுத்தை கட்டிப்பிடித்தேன் என்னைப் புரிந்து கொண்டான். ஆதரவோடு அணைத்து என்தலையை வருடினான்.

சேற்றுவாசனைக்குள்ளும் நாற்றின் பசுமைக்குள்ளும் ரமணன் என்ற தத்துவாசிரியன் தந்தை போராடிக்கொண்டிருக்கிறார். வறுமையின் பிடிக்குள் சிக்கிய அவனின் அம்மா எனக்குள்ளே வந்துபோனாள்.. முதிர்கன்னிகளாகும் அவனின் சகோதரிகள் மொத்தத்தில் ஒரு ஏழைக்குடும்பம் என் கண்களுக்குள் நிறைய உடைப்பெடுத்த எனதுகண்களைப் பார்த்ததும் சற்றுக்கண்டிப்பாக

"இதுக்குத் தானா கேட்டியள்"

"இல்லை ரமணா...அப்பிடி இல்லை"

....................

ஆறாம் தரம்வரை கல்விகற்ற உனக்குள்ளை இத்தனை தத்துவம் எண்டா நீ எவ்வளவு பட்டறிவு பெற்றிருப்பாய். நீயும் எமர்சனுக்கு மகனாய் பிறந்திருந்தா...எத்தினை கண்களில் பட்டிருப்பாய்... நீதானே ஏழை வீட்டிலே பிறந்திட்டாய்.... பணம் இருந்தால்தான் பிணமே வாய்திறக்குமாம் என சொல்ல நினைத்த நான்... என்னை நிதானப்படுத்தினேன்.... அவன் கண்களில் ஒளி தெரிந்தது... நடையில் கம்பீரமிருந்தது.. எனக்கென நாடில்லையெனில் வீடெதற்கு வாழ்வெதற்கு என்ற கேள்விகளை அவனது முகத்தில் நான் கண்டு கொண்டேன்... எனது ஈரவிழிகளை துடைத்தான்..

உலகம் சுருங்கியிட்டதாய் சொல்லுறாங்களே தகவல் தொழில் நுட்பம் ஏழைமக்களின் கிராமங்களிற்கு வராதபோது, குச்சொழுங்கைகளில் இறங்க கால் கூசும் மந்திரிகள் இருக்கின்றவரை, கிராமத்தில் உள்ள தத்துவாசிரியர்கள் வாழமாட்டாங்கள் என என் மனம் எண்ணியது.

"ஒண்டுக்கும் கவலைப்படாதேயுங்கோ..."

என்னை ஆறுதல் படுத்த விளைந்தான். எனது வலது கரத்தை அவனின் வலது கரத்தால் பற்றிப்பிடித்தான்.. இன்னொருவனைக் கூப்பிட்டான். இருவரின் கை இணைப்பையும் தகர்த்துவிடும்படி சொன்னான். எனக்கு எல்லாமே வினோதமானதாக இருந்தது. இருவரின் கையிணையையும் பிரிக்கும் அவனின் முயற்சி தோற்றுப் போனது. எதுவும் விளங்காமல் நான் அவனைப்பார்த்தேன்.

இது தான் தேசியம் இப்படித்தான் நாங்கள் எல்லாரும் இணைய வேணும் ஏழைக்கும் பணக்காரனைவிடவலிமை கூட.ஏழையாலையும் எல்லாம் முடியும், நான் - நீங்கள் இப்ப எத்தனமும் தேவையில்ல பொறியும் தேவையில்லை இந்த உலகத்தை தலைகீழாக்கிற சக்தி எங்களுக்கிருக்கு. விஞ் ஞானத்தை போல எங்கட பயணமும் இருக்கக் கூடாது. விஞ்ஞானம் பல இடங்களில் சோம்பேறிகளுக்கு தீனி கொடுக்குது. இரண்டு கையிணைவை ஒருத்தன் பிரிக்க முடியேல்ல எண்டால், ஏழைகள் எல்லாம் ஒரு கைபிடித்தால் என்ன நடக்கும். அடக்கு முறையாளன் எல்லாம் போராடினால் என்ன நடக்கும்? ரமணன்ர தத்துவம் உலகின்ர காதுகள்ள கேக்கும் எண்டு சொன்னன். இலேசாகச்சிரித்தான் நிழற்படத்தில் இப்போது நான் பார்க்கும் சிரிப்பைப்போல.



## கவிதைகள்

### நிலவுத் தியானம்

என்றைக்கும் போல் மையேறிக்கிடக்கிறது
கங்குல் வானும் அதன் மீன்களும் நிலவும்.

இயல்புகளின் தற்காலிகத் தலைமறைவால்
ரணமாகிய என் ஊன்சரீரமும்
அதனைச் சுமக்கும் கட்டிலும் கிடக்கின்றன
சமாந்தரிகளாய்
பேச்சுத்துணைக்கு நிலவு மட்டுமே
இன்று •என்னோடு.

ஓ..என் பிரிய நிலவே...
அழிந்து போன எனதியல்புகள் மீண்டும்
எனைச்சேருமா நான் கேட்கிறேன்.
பூரணனும் நானே அபூரணனும் நானே
அறிந்துகொள்வாய் மானிடா
பதில் சொல்லிற்று நிலவு.

ரணங்களின் வடுக்கள் மறைந்து
முன்னையைப் போல் வதனம் பொலிய
ஒண்ணுமா எனக்கு இது நான்
வடுக்கள் என்முகத்திலுமுண்டு
எனைவெறுப்பாருமுண்டோ இவ்வுலகில்
சற்றே ஏளனித்துச் சொல்லிற்று நிலவு.

ஆயுளில் அரைப்பங்கு அற்றுப்போயிற்றெனக்கு
மீதியைச் சுகிக்க இயலுமா என்னால்...நான்
ஒரு தினத்தின் பாதியைத் தானே
நானே சுகிக்கிறேன்-எனினும்
இற்றைவரை நான் கலங்கியதுண்டோ மானிடா
கூறிப்புன்னகைத்தது நிலவு.

ஓ... என் பீரிய நிலவே...
இறுதியாக ஒன்றேயொன்று
எனக்கு இயல்புகள் வேண்டாம்
பொலிந்த வதனம் வேண்டாம்
ஆயுளின் அரைப்பங்கும் வேண்டாம்
என் கவிதைகளே எனக்கு வேண்டும்.
ஏனெனில் அவைகளின்றி நான்
உயிர்த்திருக்க மாட்டேன் நிலவே.

நன்றாய்ச் சொன்னாய் மானிடா
நானும் உனைப்போல் தான்
கதிரவனின்றி கணப்பொழுதேனும்
உயிர்த்திருக்க முடியுமா என்னால்
கலங்கிற்று நிலவு.

நாயொன்றின் ஊளையொலியில்
கலைந்தது நிலவுத்தியானம்
மனமெங்கும் வெறுமையின் வியாபிப்பு

ம்... என் வீட்டின் நாய் இறப்பின்
என் காணிக்குள்ளே தானே அடக்கம்
ஆனால் எனக்கு
எங்கோரிடத்தில் யாருமற்ற வெளிதானே
மீண்டும் தத்துவம் தலைதூக்க
கண்ணயர்ந்தேன் நான்.

வேல்.லவன்

### எந்த ஊர்?

அடையாளம் தெரியாமல்
அழிந்துபோய்க் கிடக்கிறது
எங்கள் ஊர்.
ஊர் எல்லையில் கால்பதித்த போது
சுதந்திரக் காற்று
ஓடி ஒளிந்து கொண்டது.


உள்மனதில் ஆயிரம் கேள்விகள்.
சுயமாக எதுவும் சுயமாக இல்லாது
எங்கே தொலைந்து போனது
எங்கள் ஊர்?

அரச மரத்தின் அடியருகைப்
பார்த்ததும் என் நெஞ்சு விம்மி
ஒரு முறை திக்கென்றது.
விக்கித்துப்போய் நிற்கையில்
வீதி நிறைந்த வாகனங்கள்
விதிக்குச் சவால் விடுகின்றன.

எங்கே தொலைந்தார்
எங்களூர் பிள்ளையார்?
மாதா கோயிலிலும்
மணியோசை கேட்பதில்லையாம்.

அதிகாலை வேளைகளில்
சுப்பிரபாதங்கள் காதை நிறைப்பதில்லை
கலவாத் ஓதுவாரைக் காணவில்லை
இடைவிடாது ஒலிக்கிறது 'பிரித்'
புத்தம், சரணம், கச்சாமி......
ஊர் மாறி விட்டேனா?
இல்லையே!
வானுயர்ந்த பனை மரங்கள்
பகர்ந்த பனை மரங்கள்
பகர்ந்து நிற்கின்றன
இது எங்கள் ஊர்தானென்று!

ச.முருகானந்தன்



## இலக்கியப்பகிர்வு

# எழுதாத உன் கவிதை

எமது பெண் கவிஞர்களின் பரப்பு மாவீரர்கள், போராளிகள், ஏனைய கவிஞர்கள் என விரிந்துள்ளது.

உண்மையில் 1999 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இருந்து இங்கு வன்னிப்பகுதியில் பல நூல்கள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றன. எத்தனையோ படைப்பாளிகள் அவர்களில் பலர் புதியவர்கள், இளம் படைப்பாளிகள் இலக்கிய உலகில் அவர்கள் தங்கள் வாசல்களைத் திறந்துள்ளனர்.



அந்த வகையில் 26 பெண் கவிஞர்களின் கவிதைகள் இங்கு தொகுப்பாய் உள்ளன. இவர்களில் பலர் ஏற்கனவே ஓரளவு அறிமுகமானவர்கள். பலர் புதியவர்கள் எனவே எங்கள் வெளியீட்டு வரலாற்றில் இது ஒரு முக்கியமான இடம்.

"எழுதாத உன் கவிதை" என்னும் இந்த தமிழீழப் பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பானது அறிமுக உரையில் மதிப்புக்குரிய பாலகுமாரன் அவர்கள் தெரிவித்தது போலவே எந்தப் பிச்சல் பிடுங்கலும் இன்றி எந்தத் தேடுதல் வேட்டைகள், பிளந்து கொண்டு உள்ளே புகுதல் என்ற கஷ்டப்பாடுகள் இல்லாமல் மிக எளிமையாக இயல்பாகச் சொல்லப்படும் கவிதைகள்.

இவற்றில் சில கவிதைகள் வாழ்வியல் தத்துவம், அரசியல், அழகியல், சூழலின் யதார்த்தம் என ஆங்காங்கே கிளை விரித்து பரப்ப முனைந்துள்ளன.

தமிழவள் அலையிசை, சிரஞ்சீவி, அம்புலி, சூரியநிலா, ஆதிலட்சுமி, சுதாமதி மலைமகள் என ஒரு பகுதியினர் ஆங்காங்கே பொறி பற்ற வைத்துள்ளன.

எல்லோருடைய எல்லாக் கவிதைகளையும் இங்கு சுட்டி நிற்க முடியாதுவிடினும் சிலவற்றை காட்டலாம் என நினைக்கிறேன்.

அலையிசையின் "ஆர்த்தெழும்" என்னும் கவிதையில் (ப/6)

சூனியத்துள் உறைந்து
எல்லைகளற்று விரிந்து
சமுத்திரங்களோடு - கண்டங்களையும் இணைக்கும் இந்து மா
கடலின்
ஓர் மூலையில்.... (எனத் தொடரும் நம்.....
வரிகள் பின்னர்)
நம்பிக்கை பெருகிய
ஒளிமுகங்கள்
அவர்களின் வரவுகளிற்காய்
காத்திருக்கும்.

இக்கவிதையில் சில அடிகளில் ஓர் தத்துவச்சாயல் இருக்கின்றது.

ஊழியின் முடிவு என்னும் ஆதிலட்சுமி அவர்களின் கவிதை (பக்கம் 45)

''தாளம் வலுக்கிறது-
ஊழியின்
தாண்டவம் உரக்கிறது.
இனி
வானம் வெடித்துப்பூமி
சிலிர்க்கும்
இந்த உலகம்
நெருப்புக்குள்ளிருந்து
நீந்தி வெளிவரும்

ஊழி முடிவுறும்-உன்
முகம் சிலிர்க்கும்.''

இதுவும் ஓர் தத்துவச் சாயல் கவிதையே, ஒரு பெரும் ஊழிக்கு பிறகு விடிவை எதிர்பார்க்கும் ஒரு மனம் இது.

"அவள் ஒன்றுக்கும் அசையாள்" என்னும் மலைமகள் கவிதை அழகியல் சார்பு ஓரளவேனும் கொண்டு கனிந்த கவிதை.

வானமே கிழிந்தது போல
வாரி வாரி மழைபெய்தது.
காவலரணையும் மேவி வெள்ளம்
கால் பரப்பி நடந்தது. என்று அழகு உணர்வு இயல்பாக வெளிப்பட்டு வருகிறது.

இக்கவிதையிலேயே மற்றுமொரு விடயம் போராளிகளுக்கு உரிய பொது நலன் பேணும் பண்பு மக்கள் மேல் கொண்ட அன்பு

"சனமெல்லாம் பாவம்
நனையப்போகுதுகள்"
அதுமட்டுமல்ல-
இவை எல்லாவற்றுக்கும் அப்பால்..
எதிரியின் வருகையை
காத்திருக்கும் போராளிகள் மன நிலையை மனத்தைத் தொடும்.

"சாக்குத்தொப்பியில் மழைநீர் ஊறி
தலையெல்லாம் கனக்க
கருவியோடு தானும் நனைந்தே
குளிரில் பல்கிடுக்க
மரத்தின் மறைவிலிருந்து
பகைத்தளம் நோக்கித் தன்
விழி விரித்த வீரி ஒருத்தி சற்றும்
அசைந்தாளில்லை
மழை வெள்ளம் என்ன
பகை வெள்ளம் வந்தாலும்
அவன் ஆசையால் எல்லாம்

மழைக்காலம் என்னும் சூரியநிலா அவர்களின் கவிதை.

"எத்தனமின்றி ஏது வாழ்வு" என்னும் கவிதை பின்வருமாறு முடிகின்றது.

விழுவதும் பின் எழுவதும்
வாழ்வாகிப் போனதால் தான்
உரமேறி உரமேறி அவள்
(உரமேறி,உரமேறி)
உறுதியாய் நிற்பதுவோ

எமது சமூகப் பெண் எவ்விதம் போர் குணமுடையவளாகின்றாள் என்பதைக் காட்டுகின்றது.

அதன் தொடர்பாகவே "உனது பெயர் புதுமைப் பெண்" எனத் தலை நிமிர்ந்து நிற்கின்றார் கனிமொழி பேரின்பராசா.

தமிழ் பெண்கள்
தளபதிகளாய் உயர்ந்தார்
தரமிங்கு கேணல் என
தாய்க்குலமோ பேற்றதுகாள்
என்று கூறி பூரிக்கின்றார்.

"போரின் நாட்கள்" எனும் சுதாமதியின் கவிதை இயல்பான நடையோடு மனதுக்கு மிக நெருக்கமாக வரும் கவிதை.

"படுக்கையை நனைக்கும்-
பனித்துளிகள் மனத்தைக்
குளிர்விக்குமா?
என இவர் கேட்பது.

இனிய காலை
வரவுக்காய்
காத்திருக்கின்றேன்
கண்ணீர்த் திரைகளை.
கரைத்து உலர்த்துகிறது.
என்பதும் ஈர்ப்புக்குரியது.

"பூமரங்களைத் தழுவி
வழிவதை சூடான தேனீர் அருந்தியபடி பார்க்கும் பொழுது
மழை மிகவும் இரசிக்கத் தக்கது."

அழகை சற்றே கொண்ட இன்னுமொரு கவிதை இது.

நகுலா எழுதிய
பெயரிடாத நட்சத்திரங்கள் இல்லாத சொல்லும்
செய்தி வேறானது. இது சொல்லுகின்ற செய்தி எல்லோருக்கும் தெரிந்தாலும் அது சொல்லாத சேதிகளே அநேகம்.

"அன்பான தோழி
நீயும் இன்று உனக்கு கல்லறையும் இல்லை"என்பது மிகவும் சோகமானது. நெஞ்சை நெகிழ வைப்பது.

சிரஞ்சீவியின்

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்






ச.வசந்தகலா,
பாரதி இல்லம்.

# எங்கள் முயல்


ஆமையும் - முயலும் ஓட்டப் போட்டியில் பங்கு கொண்ட கதை உங்களுக்குத் தெரியும். இப்ப நான் சொல்லப்போற கதை வேறு.

நீங்கள் அதிகம் வீட்டு வளர்ப்புப் பிராணிகளில் புசு புசு வென்ற வெள்ளை நிற முயல் களை பார்த்திருப்பீர்கள்.

வளர்த்துமிருப்பீர்கள். வளர்ப்பதற்காக மட்டுமல்ல இறைச்சிக்காகவும்தான். முயல் கள் இறைச்சிக்காக வளர்க்கப் படும் பண்ணைகளும் இருக் கின்றன. இதைவிட யாழ்ப் பாணத்தின் நெடுந்தீவு, தென்மராட்சிப் பகுதிகள் -மற்றும் வன்னிப் பகுதிகளில், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் பயிர்களுக்கு அழிவை ஏற்படுத்தும் முயல் களை தெரியுமா உங்களுக்கு? அவைதான் எங்கள் காட்டு முயல்கள்.

அதிகளவில் கறுப்பு நிறத்தில் நம் காட்டு முயல்கள் திடீரென காட்டு வீதிகளில் பாய்வதைக் காணலாம்.

முயல் கடும் கூரான பற்களைக் கொண்டிருப் பதால் - அது கொறி விலங் குகளில் அடக்கப்படுகின்றது. அதிகம் வெளிகளைக் கொண்ட புதர்க்காடுகளில்தான் முயல்கள் இருக்கும் கீரி, காட்டுப் பூனை, சிறுத்தை, வெங்கிணாந்திப் பாம்பு (மலைப் பாம்பு ) இவைதான் முயல் களைப்பிடித்து உண் ணும் நம் காட்டு விலங்குகள். இதனாலே தான் எதிரிகளை கண்டு தப்ப வெளியான புதர்களில் முயல்கள் அதிகம் இருக்கும். இதற்கேற்ற மாதிரி அதன் கேட்டல் சக்தி வலு துல்லிய மானது. நீண்டதாக பின்னங்கால்கள் இருக்கிறதால் முயலின் முன்னங் கால்கள் கைகள் மாதிரி இருக்கும்.



மண்ணில் குழிதோண்டித்தான் முயல் இருக்கும். தன் பின் கால்களால் நிலத்தை உதைத்து வலு வேகமாக ஓடுகிற திறமை முயலுக்கிருக் கிறது. எங்கடை காட்டு முயலுக ளின்ரை உயிரியல் பெயர் "லைபஸ் நிக்ரி கோலிஸ் சிங்ஹல" இலங் கைக்குரிய தனித்துவ இனம் என்றபடியால் கடைசிச் சொல்லாக சிங்ஹல என்ற பெயர் சேர்க்கப் பட்டுள்ளது. ஆங்கிலத்தில் ரப்பிற் (Rabbit) hare என்ற வகை இனங் கள் இருக்கின்றன.


எமது முயல்கள் hare வகை. எம்மிடம் ரப்பிற் வகை முயல்கள் இல்லை. சின்னச் சின் னக் கூட்டமாகத்தான் இவை இருக்கும்.

முயல்கள் புதிய சந்ததிக்கான கர்ப்ப காலம் ஒரு மாதம். ஒரு தடவையில் 2 குட்டி களை போடும்.

ஆமையும் முய லும் ஓடின கதையில முயல் நித்திரை கொண்டது தெரியும் தானே. முயல் உண்மையில வலு விழிப்பான எச்சரிக்கையான விலங்கு.

கதையில மட்டும் தான் முயல் நித்திரை கொண்டது சரியா.

## வழிகாட்டுங்கள்...




## சொற்சிலம்பம் - 51

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ப | ரா | ண் | இ | டா | ஏ | ர |
| வ | கா | ன் | ய | னி | ன் | த் |
| அ | செ | ல் | ம | பி | எ | ட் |
| த | றீ | சீ | ம | உ | மூ | ஊ |
| ண | ஆ | ம் | ய | பி | தி | த |
| ர | கை | டி | லை | ப் | ஈ | தே |
| ஔ | பூ | வ | ஓ | ச | வி | ஒ |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -49 இன் விடைகள்

01. தாமரை.

02. திருகோணமலை.

### சொற்சிலம்பம் - 49 இன் பரிசுக்குரியவர்

மோ.பிரகாந்
தரம்-8.
கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை,

### சொற்சிலம்பம் - 49 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. செ.மைக்கல், நெடுங்கண்டல், அடம்பன் மன்னார்.
02. ச.உதயபவன், கோவில்புதுக்குளம், வவுனியா.
03. த.அருந்ததி, வனவளப்பிரிவு, கிளிநொச்சி.
04. ச.பிரியங்கா, மு/சுப்பிரமணியம் வித்தியாலயம்.
05. ச.கௌரி, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
06. அ.காந்தருபி, பெரியவிளான், இளவாலை.
07. ந.கீதா, கற்சிலைமடு அ.த.க பாடசாலை,
08. மீ.சுபன், புதிய கொலனி, மாங்குளம்.

01. வன்னியை இறுதியாக ஆட்சிசெய்த மன்னன்?

01) ........................................

02. உலகில் பெரிய மலை எது?

01) ........................................

பெயர் :- ........................................

முகவரி :- ........................................

........................................

சொற்சிலம்பம்-51
ஈழநாதம்.
யாழ் சாலை.
கிளிநொச்சி.

# எலியாரின் வண்டில்

பகுதி-01



# ஏ9-ஏரம்பு

வணக்கம் பிள்ளையள்! கனநாளைக்குப்பிறகு இப்பிடி ஆறுதலா என்ரை ஏ9 குந்தில இருக்கிறன். எங்கட மண்ணின்ரை ஸ்பரிசத்தோட இப்பிடி இருக்கிற சுகம் எந்த ஒரு நாட்டிலையும் இருக்காது பாருங்கோ! அதிலையும் சிலநேரம் இப்பிடியே கொஞ்சம் காலை நீட்டி, சரிஞ்சு இந்தக்குந்தில ஒருக்கா படுக்கச் சொல்லிக்கிடக்கும். ஆனால், இந்த வீதியிலை முழிச்சிருக்கிறவனுக்கே உத்தரவாதம் இல்லை. இதுக்கிள்ளை நான் வேற வீதியோரம் படுத்துக் கிடந்தால், வாகனம் ஏதோ அடிச்சுப்போட்டு அநாதரவா ஒண்டு கிடக்குதெண்டு, ஆராவது

இருக்கிற கிரகம்' எண்டு எனக்கும் பேச்சந்தோசம். ஆனா, வாசிச்சுப்பார்த்த நேரம் தான் தெரிஞ்சிது, ஆரோ ஒரு விசுவாசின்ர பெயரில வந்த விளம்பர வாழ்த்தெண்டு. நான் கோவில்காரருக்குச் சொன்னன். "தம்பி! நான் உதுக்குக் கனக்கச் சொல்லலாம். ஆனா,சொல்ல மாட்டன். உந்த வாழ்த்துக்கு நீர் எவ்வளவு செலவு செய்ய விரும்பிறீரோ, அவ்வளவு தொகைக்கும் ஏதாவதொரு நூலகத்துக்கு நாலு புத்தகங்களை வேண்டிப் போடும்! இல்லாட்டி ஒரு பள்ளிக்கூட ஆய்வுகூடத்துக்கு முடிஞ்ச சாமானுகளை வேண்டிப்போடும்! சரி அதுகள் தான் இல்லாட்டி


எத்தினை சனம் கஷ்டப்படுகுதுகள்! அப்படியிருக்க சில்லறைத்தனமா நாங்கள் உப்பிடியெல்லாம் ஆசைப்படக்கூடாது. பெருமை சம்பந்தமா எனக்கும் ஒரு ஆசை இருக்கு. 203 நாடுகள் பங்குபற்றிற ஒலிம்பிக்கில ஒவ்வொரு நாடும் பதக்கங்கள் எடுக்குது. சந்தோசப்படுகிது. நாங்களும் அந்த 203க்குள்ளையும் இருந்து கலந்து கொள்ளிற ஆக்களிலை பக்கத்து நாடு, ஆசியநாடு, மூன்றாம் உலகநாடு வடிவான பொம்பிளைப்பிள்ளை எண்டு ஏதோ ஒரு எங்களுக்குப்பிடிச்ச அடிப்படையில, அவையின்ரை வெற்றிக்காக சத்தம் போடுறம்.



எடுத்துக்கொண்டு போய் புதைச்சுப்போடுவாங்கள். அதாலை மிச்சம் கவனமா இருக்கோணும்.

உங்களுக்கு நான் ஒரு பேப்பகிடி சொல்ல வேணும் நான் உங்களுக்கு எங்கட ஊர்க் கோயிலின்ர செயற்பாடுகள் பற்றிச் சொன்னனான் அல்லோ! போன கிழமை ஒருத்தர் எனக்கு ரெலிபோன் எடுத்து, என்ரை படம் ஒண்டு அனுப்பிவிடச் சொன்னார். நான் பயந்து போனன். எட எனக்கென்ன அவ்வளவு வயதாகி விட்டுதே? படம் எடுத்து வைக்கிறதுக்கு! அப்பதான் அந்தத்தம்பி சொல்லிச்சுது,

"நீங்கள் உங்கையிருந்து இஞ்சை வந்து கலந்துகொண்டனீங்கள்... அதைப் பாராட்டி பேப்பரிலை ஒரு வாழ்த்து விளம்பரச் செய்தி போடுறதுக்குத் தான்" எண்டு! இதென்னடா கரைச்சல் சும்மா போன பஸ்ஸில ஏறிப் போன எனக்கு பேப்பரில வாழ்த்தா? அதுவும் விளம்பர வாழ்த்து! இப்பையெல்லாம் பாருங்கோ பேப்பருகளை எடுத்து, உள்பக்க மூலையள்ளை படங்களைக் கண்டால் ஏதோ அசம்பாவிதம் நடந்திட்டோ எண்டு நீங்கள் நினைச்சு விடக்கூடாது! உப்பிடித்தான் அண்டைக்கு நாலைஞ்சு மரண அறிவித்தல், அஞ்சலியளுக்குப் பக்கத்திலை இந்து கலாசார அமைச்சரின்ரை பாஸ்போர்ட் சைஸ் படமும் போட்டிருந்திச்சு, துலைஞ்சிது 'வளையம் குண்டும், குழியுமா தண்ணி தேங்கி நிக்கிற றோட்டுக்களிலை ஏதாவது ஒண்டுக்கு கொஞ்சம் மண்ணும், கல்லும் போட்டு நிரப்பி விடுங்கோ!" "இல்லை அப்பு! என்ன இருந்தாலும் உங்கட படம் பேப்பரிலை வந்தால் எங்களுக்



குத்தானே பெருமை!" "தம்பி! பெருமை எண்டிறது கடுமையான உழைப்பால தானா வரோணும். நாங்கள் விலாசத்தைத் தேடிப் போகக்கூடாது! எத்தினை சனம் நிவாரணம், உதவி எண்டு நிறுவனங்களின்ரை உதவியளை நம்பியிருக்கு அதை வேற 33% ஆல் குறைக்கப் போயினமாம். சொந்த வீடுகளுக்குத் திரும்பிப் போக அரசாங்கம் விடாததால

யோசிச்சுப்பாருங்கோ! 203 நாடுகளுக்குக்கிடைச்ச பாக்கியம் எங்களுக்கு இன்னும் கிடைக்கேல்லை. எங்களுடைய முகமும், முகவரியும் இன்னும் உத்தியோகபூர்வமா உலகத்தாலை அங்கீகரிக்கப்படேல்லை. அந்த நிலையை மாத்தி வெற்றிகொள்ளோணும். எங்கட ஆக்களும் ஒலிம்பிக் மைதானம் ஒண்டிலை எங்கட நாட்டுச் சார்பில புலிக் கொடியை உயர்த்திக்கொண்டு நடக்கோணும். எங்கட பிள்ளையளும், பொடியங்களும் கெட்டிக்காரங்கள், கட்டாயமாக சாதிப்பினம் வெற்றியீட்டிப் போட்டு, எங்கட கொடியை உயர்த்திக் கொண்டு204 (203+1) நாடுகளையும் சேர்ந்த அந்தளவு சனத்துக்கு முன்னாலையும் (TV) ரிவியளிலை வருவினமெல்லோ! அதிலை தெரியுமடா எங்கள் எல்லாற்றை மூச்சையும்! அதுதான் உண்மையான விலாசம்!'' அப்பிடியே ரெலிபோனை வைச்சிட்டன். முன்னுக்கு மேசையிலை கிடந்த தினசரி கண்ணுக்குத் தெரிஞ்சிது. மனம் கனத்து ஏதோ அழவேணும் மாதிரி இருந்திச்சு. அழக்கூடாதெண்ட வைராக்கியத்தோட கண்களை இறுக மூடினேன்... துயிலுமில்லத்தில எரியிற பல்லாயிரக்கணக்கான ஜோதிகளின் வெளிச்சம் அங்கே தெரிஞ்சிது!

# தடம்மாற முயலும் இளையவர்கள்

காலம் தனது காலவோட்டத்தில் மூழ்கி உலகில் பல மாற்றங்களையும் பல வளர்ச்சிகளையும் கண்டுவருகின்றது. காலவோட்டத்தின் மாற்றங்கள் எம்பிரதேசங்களையும் விட்டுவைக்க வில்லை. குறிப்பாக சமாதான ஒப்பந்தத்திற்குப் பின்னர் பாதை திறப்பு, ஆடம்பரப்பொருட்களின் பெருக்கம், சினிமா என்பவற்றின் பிரவேசத்தால் எம் பிரதேசத்தில் வளர்ந்துவரும் இளையவர்கள் அவற்றிற்கு அடிமையாகின்றார்கள்.

ஒரு காலப்பகுதியில் இவ்விளையவர்கள் போர் அனர்த்தங்களில் அகப்பட்டு அல்லல்பட்டது மட்டுமல்லாமல் எம்பிரதேசத்தை எதிரியிடமிருந்து காப்பாற்றத் துணிந்து எதிரியைக்குழிதோண்டிப் புதைத்த வரலாறுகளும் ஏராளம். எதிரியின் தொல்லையிலும்கூட கல்விக்காக அவர்கள் செலவழித்த நேரங்களும் ஏராளம். அதன் பயனாக இறுக்கமான பொருளாதாரத்தடைகளுக்கு மத்தியிலும் சுகமாக வாழ்ந்த நாட்கள்தான் ஆயிரம் ஆயிரம்.

ஆனால் இன்று அன்றைய அச்சூழலிலிருந்து முற்றிலும் மாறுபட்டதான ஒரு ஆடம்பரமான அழிவை எதிர்கொள்ளத்தக்க வீட்டையோ, நாட்டையோ எள்ளளவுமெண்ணாத இளையவர்கள் உருவாகிக்கொண்டிருப்பது வளர்ந்துவரும் சிறுவர்களுக்கு தீயவழியைச்சுட்டுவதாயும் முதியவர்கள் துன்பத்திற்குள்ளாக்கும் செயலாகவும் காணப்படுகின்றது.

இவ்விளையவர்களின் வரட்டுக்கௌரவத்தின் விளைவால் தம் பெற்றார்களிடம் வரட்டுப்பிடிவாதம் பிடித்து ஆடம்பரப் பொருளாக இன்று கருதப்படும் மோட்டார் சைக்கிளைப்பெற்றுக் கொள்கின்றனர். புதுப்பழக்கம் புதுவேகம் என்பவற்றால் மூர்க்கத்தனமாக மோட்டார் சைக்கிளை ஓட்டுவது மட்டுமல்லாமல் ஸ்ரைலாக ஒரு கையில் விரல்களுக்கிடையே ஆறாம் விரலாக சிலநொடி வாழும் அவ்விரலைக்கூடப் பயன்படுத்தும் காட்சியோ வேதனைக்குரியது.

மோட்டார் சைக்கிள் ஓடும் போது யாரும் வீதியோரமாக சென்றால் போதும் வேண்டுமென்று வீதியோரமாக சைக்கிளைவெட்டி வீதியோரங்களில் செல்பவர்களை பதற்றமடையச்செய்வதில் இவர்களுக்கு குரூரமான மகிழ்ச்சி. நடந்தோ, சைக்கிளிலோ செல்லும் திசையால் சென்றால் கூட செல்பவரைத் துரத்தி வந்து மோதிக்கொள்வதில் இவர்களுக்கு நிகர் இவர்களே.

இக்காலத்தில் அறிவின் பரப்பும் ஆழமும் மிகுதியாகிக்கொண்டு போகின்ற காலம். பெற்றோர்களும் தம் பிள்ளைகளை எப்படியாவது நல்லமுறையில் கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பாடசாலைக்கும்,



தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்புகின்றார்கள். பிள்ளைகளோ பாடசாலை தனியார் கல்வி நிறுவனம் என்ற சாட்டுச்சொல்லி ஒரு கொப்பியுடன் வீட்டை விட்டுக்கிளம்புவார்கள். செல்லவேண்டிய இடத்திற்குச் செல்லாமல் திசைமாறிப்போகின்றார்கள்.

வழி தெருக்களிலும் மரநிழல் மறைவுகளிலும் பல சந்திப்புக்களை நடத்தி வருகின்ற நிலை இன்று அதிகமாகிக்கொண்டிருக்கின்றது.

பாடசாலையிலோ தனியார் கல்வி நிறுவனங்களிலோ இவர்களிடம் ஏதாவது விசாரித்தால் போதும் அதே நொடியில் மூர்க்கத்தனமான முரட்டு வேலைகளில் ஈடுபட்டுவிடுகிறார்கள். இச்செயற்பாட்டினால் தாம் வாழ்வில் முழுவதையும் பெற்றுவிட்டமாதிரியொரு நினைப்பு.

இவர்களின் இச்செயலானது உருப்படியான எதிலும் தீவிர பிடிப்பில்லாமல் நாட்டில் நடக்கின்ற நல்ல பல விஷயங்களை அறிந்திராத அல்லது அதில் தம்மை சம்பந்தப்படுத்திக்கொண்டு அதன் விளைவுகளை சந்திக்க துணிவில்லாதவர்களாக வளர்ந்துவருகின்றார்கள்.

கடந்த காலங்களில் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிகளில் நடந்தேறிய கடத்தல், பாலியல் வல்லுறவு, சிறுவயதுத்திருமணம் என்பன போன்ற சமூகத்தைச்சீரழிக்கும் விஷயங்கள் எப்பிரதேசத்தையும் ஆட்கொள்ளும் அபாயம் தோன்ற வாய்ப்புக்கள் நேரலாம்.

இவ் அபாயத்திலிருந்து இச்சமூகத்தை காப்பாற்ற பாடசாலைச் சமூகத்தினரும், பெற்றோர்களும் சமூகத்தில் வாழுகின்ற புத்தி ஜீவிகளும் முன்வரவேண்டும். தமிழீழத்தின் காவல்துறையினர் அன்று பல பிரசங்கங்களை நடத்திவந்தது போல இன்றும் இவர்கள் பொது ஸ்தாபனங்களில் குறிப்பாக பாடசாலைகளில் சிறுவர்களின் நன்நடத்தை பற்றிய அறிவுரைகளை வழங்கி அறிவின் பரிமாணங்களை கண்டறியவும் புரிந்து கொள்ளவும் கூடிய வக்கயில் இவர்களுக்கு அறிவூட்டவேண்டிய கடப்பாடு உண்டு. அறிவூட்டும் கருத்துக்கள் மிக விரைவில் களமிறக்கப்படவேண்டும்.

— பா.றுஜினா.




## சமையல் எண்ணெய்யாக பரிந்துரைக்கப்படும் பருத்திஎண்ணெய்

இந்தியாவில் சமையல் எண்ணெய்களுக்கு இணையாகப் பருத்தி எண்ணெயைப் பயன்படுத்த முடியும் என மருத்துவ நிபுணர்களும், உணவியல் துறை வல்லுநர்களும் தற்போது பரிந்துரை செய்கின்றனர். மற்ற சமையல் எண்ணெய்களில் இல்லாத பல நல்ல அம்சங்கள் பருத்தி எண்ணெயில் இருப்பது ஆய்வுகளின் மூலமாகத் தெரியவந்துள்ளது.

உடலுக்கு நன்மை செய்யக்கூடிய கொழுப்புச் சத்துக்கள், தீங்கு விளைவிக்கக் கூடிய கொழுப்புச்சத்துக்கள் என இருவகைகள் உள்ளன. இவற்றில் பருத்தி எண்ணெயில் தீங்கு விளைவிக்கக் கூடிய கொழுப்புச் சத்துக்கள் மிகவும் குறைவாகவே உள்ளன.

பருத்தி எண்ணெய் சமையலுக்குத் தவிர மற்ற வகைகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. இந்த எண்ணெயில் இருந்து எடுக்கப்படும் 'அசிற்றோ கிளிசரைட்' என்ற வேதிப் பொருளானது வெளிநாடுகளில் அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பிற்குப் பயன்படுகின்றது.

பருத்தி எண்ணெயில் மின்னோட்டத்திற்கு உட்படுத்தி குளிர்பானங்கள் தயாரிக்கப்பயன் படுத்தலாம். நார்ப்பயிர் அரசன் என போற்றப்படும் பருத்தி இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு 48 இலட்சம் தொன்கள் உற்பத்தியாகின்றன.

பருத்தி எண்ணெயை நீண்ட நாட்களுக்கு சேமித்து வைத்துப் பயன்படுத்த முடியும். பருத்தி எண்ணெயின் மூலமாக ஒரு கிராம் எண்ணெயில் 9 கிராம் கலோரி கிடைக்கின்றது. பருத்தி எண்ணெயில் 50 சதவீதம் உடலுக்குத் தேவையான நிறைவு செய்யப்படாத கொழுப்பு அமிலங்கள் உள்ளன.

ரத்ததந்துகளின் சுருங்கி விரியும் தன்மைக்குக் காரணமான லினோலியக் என்ற கொழுப்பு அமிலமானது பருத்தி எண்ணெயில் 48.7 சதவீதம் உள்ளது. பருத்தி எண்ணெயில் இந்த அமிலம் இருப்பதால் இதயநோயைக் குறைக்க இயலும். இந்த எண்ணெயானது அமெரிக்க மருத்துவ நிபுணர்களால் சிறந்த எண்ணெய் ஆக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பருத்தி எண்ணெயில் இருந்து தயாரிக்கப்படும் வனஸ்பதி மற்றும் டால்டாவில் இத்தகைய குணம் இல்லை.

தற்போது பிணந்தின்னும் கழுகுகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டேவருகிறது என தெரியவந்துள்ளது. பிணந்தின்னும் கழுகுகளினால் மனித இனத்திற்கு நேரடிப்பயன் இல்லாவிடினும், சுற்றுச்சூழல் தொடர்பில், உணவுச்சங்கிலியில் இவை முக்கிய இடத்தை வகிக்கின்றன.

## அழிந்துவரும் கழுகுகள்



பரந்த நிலப்பரப்பில் எல்லா உயிரினங்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக விளங்குகின்றன. ஒரு குறிப்பிட்ட உயிரினத்தின் எண்ணிக்கை கூடினாலும், குறைந்தாலும் தொடர் விளைவுகள் ஏற்படுகின்றன.

ஆசிய நாடுகளில் குறிப்பாக இந்தியா, பர்மா, பாகிஸ்தான் முதலிய நாடுகளில் இவை அதிக அளவில் காணப்பட்டன.

'டைக்ளோபெனக்' எனும் மருந்துப் பொருளே பிணந்தின்னும் கழுகுகளின் அழிவுக்குக் காரணமாகவுள்ளது. டைக்ளோபெனக் எனும் மருந்து கால்நடைகளின் மருந்துகளில் சேர்க்கப்படுகின்றது. இந்த டைக்ளோபெனக் செலுத்தப்படும் கால்நடைகளின் உடலில் இந்த மருந்துப் பொருளின் தன்மை முற்றிலும் தங்கிவிடுகின்றது. இந்த மருந்துப் பொருளின் படிமங்கள் அவற்றின் உடலில் நிரந்தரமாகத் தங்கிவிடுகின்றன. கால்நடைகளின் இறப்பிற்குப் பின்னரும் இந்த மருந்தின் தன்மை எந்த வடிவத்திலும் குறைந்துவிடாமல் அவற்றின் உடலில் இருக்கின்றது. இக்கால்நடைகளின் இறந்த உடல்களைத் தின்னும் பிணம் தின்னும் கழுகுகளின் உடலில் டைக்ளோபெனக் செல்கின்றது. இதனால் இந்தக் கழுகுகளின் சிறுநீரகங்கள் பாதிப்படைகின்றன.

டைக்ளோபெனக்கைப் போன்று ஓவரான் மருந்துகளும் கழுகுகளின் சிறுநீரக இழப்பிற்கு முக்கிய காரணமாக உள்ளன. இந்தச் சிறுநீரகப் பாதிப்பு கழுகுகளின் உயிரையே பறித்து விடுகின்றது.

இவ்வாறு உணவுச்சங்கிலியில் கழுகுகளின் எண்ணிக்கை திடீரெனக் குறைவதால் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. சுற்றுச்சூழல் மாசுபாடு அடைகின்றது.

## சவால்தரும் உணவுதானிய சேமிப்பு



உணவுத்தானிய சேமிப்பில் எத் தனையோ உயர்தொழில்நுட்ப முறைகள் பயன் படுத்தப்பட்டாலும் உணவுத்தானிய விளைச்சலைப் பாதுகாத்தல் என்பது மிகப்பெரிய சவாலாகவே இருந்து வருகின்றது.

உலக நாடுகளில் உணவுப்பஞ்சம் என்பது பெரும்பாலும் செயற்கைப் பஞ்சமாகவே இருந்து வருகின்றது.

விளைச்சலைப் பாதுகாத்து வைக்கும் போது ஏற்படும் நெருக்கடிகளால் உணவுத் தானியம் வீணாகுதல், முறையான பங்கீடு இன்மை ஆகியவற்றால் தான் உணவுப்பஞ்சம் ஏற்படுகிறது. நோபல் பரிசுத் பெற்ற அமர்தியா சென்னும் தனது 'வறுமையும் பஞ்சமும்'என்ற புத்தகத்தில் இதனைக் குறித்து விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, உணவுக்கழகத்திற்கும், தானிய சேமிப்புக்கிடங்குகளுக்கும் வருவதற்கு முன்னரே தானிய வீணாக்கம் தொடங்கி விடுகின்றது.

கணி மான நெல் அறுவடைக்குப் பின் வீணாகிறது. தகுந்த அறுவடை முறை, நெல்லை உலரவைத்தல் மற்றும் சேமிப்பு முறைகள் இல்லாமையால் மொத்த உற்பத்தியில் 10 முதல் 37 சதவீதம் வரை நெல் வீணாகிறது.


சர்வதேச உணவுக்கழகம் மற்றும் விவசாயக்கழகம் இந்த இழப்பைக் குறைக்க பலதிட்டங்களில் முதலீடு செய்துள்ளது. நெல்வயலிலேயே உலர்ந்து போகும் அளவிற்கு தாமதம் செய்து அறுவடைசெய்ய ஏற்ற நெல்ரகங்கள் இருக்குமாயின் இந்த இழப்புக் குறைய வாய்ப்புள்ளது.

1966 இல் அகிலஉலக நெல் ஆண்டாக அறிவிக்கப்பட்டது. மீண்டும் தற்போது 2004 இல் உலக நெல் ஆண்டாக ஐ.நா.சபை அறிவித்துள்ளது.

உணவு சேமிப்பிலும் புதிய உத்திகள் கண்டுபிடிக்கப்பட்டால் தான் விளைச்சலின் பயனைமுழுமையாக அனுபவிக்க முடியும்.

இந்தியாவில் தற்போது வீணாகியுள்ள 22ஆயிரம் தொன் உணவுத்தானியத்தைக் கருத்தில் கொண்டு புதிய உத்திகளைக் கண்டறியும் ஆய்வுகளை உடனடியாகத் தொடங்கவேண்டும்.

த.அருவி




## கடித்தது விசர்நாயானாலும் கலங்காதீர்கள்!

*விசர் நோய் பீடித்த நாய், பூனை, நரி, கீரி போன்ற மிருகங்கள் கடிப்பதனால் மனிதனுக்கு ரேபிஸ் (rabies) அல்லது ஹைட்ரோபோபியா (Hydrophobia) என்று சொல்லப் படும் நீர்வெறுப்பு நோய் ஏற்படும்.*

*இந்நோய் மனிதனுக்கு ஏற்பட்டுவிட்டால் அதைக்குணப்படுத்துவதற்கு எதுவித மருந்தும் இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை.இந்நோய் ஏற்பட்டால் மனிதனுக்கு மரணம் நிச்சயம்.*

*எனவே விசர் நாய்க்கடியிலிருந்து தப்ப வேண்டும். ஒருவேளை விசர் நாய் கடித்துவிட்டால் அந்நோய் மனிதனுக்கு ஏற்படாது இருக்க உடனடி வைத்தியம் ஆரம்பிக்கவேண்டும். எந்த நாய் கடித்தாலும், காயத்தை பலமுறை சவர்க்காரம் இட்டுக்கழுவ வேண்டும். உடனடியாக வைத்திய ஆலோசணை பெறுங்கள். பொதுவாக இக்காயங்கள் தைக்கப் படுவதில்லை.*

*கடித்தது எப்படிப்பட்ட நாயாக இருந்தாலும் ஏற்புவலித்தடை ஊசி (Tetanustoxoid) போடுவது அவசியம். விசர் நாயாக இருந்தால் உடனடியாக விசர் நாய் தடை ஊசி போடவேண்டும். இது நீர் வெறுப்பு நோய் ஏற்படாது நிச்சயம் தடுக்கும்.*

## கூவைக் கட்டு நோய் ஆண்களை மலடாக்குமா?

கூவைக்கட்டு பொதுவாக இளவேனில் காலத்தில் பள்ளிச் சிறுவர்களையும் கட்டிளம் பருவத்தினரையும் பீடிக்கும் ஒரு தொற்றுநோய் ஆகும். எந்தவயதினரையும் பாதிக்கலாம். ஆனால் கைக்குழந்தைகளைத்தாக்குவது அரிது.

கன்னத்தின் காதை அண்டிய பகுதியிலும் தாடையிலும் நாக்கின் கீழும் உமிழ் நீர் சுரப்பிகள் உள்ளன. இவற்றில் உண்டாகும் வீக்கமும் வலியுமே கூவைக்கட்டின் முக்கிய அறிகுறியாகும். அத்துடன் காய்ச்சலும் உடல் உளைவுகளும் ஏற்படலாம்.

கூவைக்கட்டு ஆண்களுக்கு வந்தால் அவரது விதைகள் பாதிப்படைந்து அவர் மலடாகி விடலாம் என்ற எண்ணமும் பயமும் பரவலாக நிலவுகிறது. இதில் ஓரளவு உண்மை இருக்கவே செய்கிறது. நோய் தணிந்த ஒரு சில நாட்களுக்குள் ஒரு பக்க விதையில் வீக்கமும் வலியும் உண்டாகலாம். இதுவும் தானே தணிந்துவிடும். சிலவேளைகளில் மாத்திரம் அந்த விதை மிகவும் பாதிப்படைந்து விந்து உற்பத்தியாவது பின்பு தடைப்படலாம். விதை வீக்கம் ஏற்படும் எல்லோருக்குமே இந்தப்பாதிப்பு ஏற்படாது. ஒரு சிலருக்கே ஏற்படலாம். பெரும்பாலும் ஒரு பக்க விதையையே பாதிக்கப்படுவதால் மலட்டுத்தன்மை ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் மிகக்குறைவே.

## பாம்பு கடித்தால்....

பயப்படாதீர்கள். கடிபட்டவருக்கு ஆறுதல் வார்த்தை கூறுங்கள். 70% இற்கு மேற்பட்ட பாம்புக்கடிகள் நஞ்சற்ற பாம்புகளாலேயே ஏற்படுகின்றன.

கடித்தது நச்சுப்பாம்பானாலும் கூட அவற்றின் நஞ்சுக்கு எதிரான மருந்துகள் வைத்தியசாலையில் கிடைக்கின்றன.


எனவே தாமதிக்காது வைத்தியசாலையில் அனுமதியுங்கள். கடிபட்ட இடத்தை வெட்டவேண்டாம். நன்றாகக்கழுவுங்கள். அல்லது துணியினால்ஒற்றி எடுங்கள். கடிபட்ட இடத்தை அசையாது வைத்திருங்கள். நஞ்சு பரவுவதை தடுக்க கடிபட்ட இடத்திற்கு மேல் நஞ்சு பரவுவதை தடுக்க கட்டுப்போடுங்கள். ஆனால் கடும் இறுக்கம் கூடாது. வேதனையைக்குறைக்க பனடோல் கொடுக்கலாம். அஸ்பிரின் கொடுக்கக்கூடாது. அதைவிட பாம்பினால் கடிஉண்டவரை மிகவிரைவாக வைத்தியசாலை கொண்டு செல்வது உயிராபத்தை இலகுவில் தடுக்கலாம்.

## உங்களுக்கு எவ்வளவு நித்திரை தேவை...?

உங்கள் உடல் தான் தனது தேவையைத்தீர்மானிக்க வேண்டும். உங்களது வயது, வாழும் முறை, தொழில், மரபு வழிசார்ந்த உங்களது உடலமைப்பு ஆகிய அனைத்துமே அதைத்தீர்மானிக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| ஒரு வயதுக்குள் | | 16-20 | மணி |
| 1-3 | வயதுவரை | 12-14 | மணி |
| 4-8 | வயதுவரை | 12 | மணி |
| 6-12 | வயதுவரை | 11 | மணி |
| 12-14 | வயதுவரை | 10 | மணி |
| 15-20 | வயதுவரை | 9 | மணி |
| ஏனையோருக்கு | | 7-8 | மணி |

இது ஒரு அட்டவணை ஆனால் பலருக்கு இதைவிடக் குறைந்த நித்திரையே போதுமானது.



# திரைவிமர்சனம்

பார்க்கக்கூடிய மாதிரி, மற்றவர்களும் பார்க்கலாம் என்று அவர்களுக்குச் சொல்லக்கூடிய மாதிரியாக இன்னொரு படம் கேம்பஸ் (Campus) படத்தின் பெயர் இங்கிலிஸ், இந்திய உச்சரிப்பில் இருப்பது சற்றுக்குழப்பம் தான். இந்தப்படத்துக்கு மட்டும் இந்தப்பிரச்சினை என்றில்லை இப்போது வெளிவருகிற பல புதிய சினிமாக்களுக்கு இதுவொரு புதிய வியாதி.

படத்தின் கதை, தன்மையை பொறுத்துச்சொல்வதென்றால் கொஞ்சம் வித்தியாசமானகதையை வழமையைப்போல படமாக்கியிருக்கிறார்கள். அல்லது கொஞ்சம் வித்தியாசமாக வழமையான கதையை எடுத்திருக்கிறார்கள்.

இரண்டு வகையாகவும் சொல்லலாம் போல, இரண்டு வகையிலும் கொஞ்சம் மாறுதல்கள். அதேபோல இரண்டு வகையிலும் ( கதை, படமாக்கிய முறைமை படத்தின் தன்மை) சாதாரண வாய்ப்பாட்டு வழமைகள். ஆனால் இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட தன்மையில் படம் நின்று இயங்குவதால் ஓரளவுக்கு கவனத்தை ஈர்க்கிறது. குறிப்பாக படத்தின் சாராம்சமும் வேகமும்.

படிக்கின்ற இளைஞர்களிடையே ஏற்படுகின்ற சமூக உணர்வையும் எழுச்சிகளையும் திசைமாற்ற முற்படுகின்ற ஊழல், அரசியல் அதிகாரம் நிறைந்த அரசியல்வாதியை வீழ்த்துவதே படத்தின் கதை.

வழமையாக படிக்கின்ற இளைஞர்களைப் பற்றிய



# கேம்பஸ்

படங்களென்றால் பெண்களுடன் குறும்பு, சேட்டை,காதல் அடிதடி என்றுதான் வரும். இதில் அவை இல்லை. தேவையில்லாத அலட்டல்கள் இல்லை. பதிலாக இளைஞர்களுக்கிருக்க வேண்டிய துடிப்பும், துணிவும், எதையும் செய்து முடிப்போம் என்ற உறுதியும் இருக்கிறது. இளைய வயதில் இயல்பாகவே இருக்கிற சமூகப்பொறுப்புணர்வு இவர்களில் இருப்பது காட்டப்படுகிறது.

தவிர, படிக்கிற போதில் ஒன்றாகக் கூடி நிற்கிற வேளையில் ஏற்படும் கூட்டுணர்வு அவர்களிடையே ஒரு பலமாகிறது. இந்தப் பலத்தை அவர்கள் நன்கறிகிறார்கள்.

தங்களையும் சமூகத்தையும் பிரித்து வைக்க முயல்கிற சூழ்ச்சிகளை, புரளிகளை முறியடிப்பதில் அவதானமாகவும் ஆர்வமாகவும் செயற்படுகிறார்கள் இந்த இளைஞர்கள்.

கல்லூரி நிர்வாகத்தை அதிகாரத்தால் மடக்கி விட நினைக்கும் அரசியல்வாதிக்கு அந்த நிர்வாகத்தின் உள்ளேயே கைக்கூலியாக இருப்பவரின் நடத்தைக் கோலங்களை பார்வையாளர் முன் சரியாக வைக்கிறார் இயக்குநர்.

உண்மையில் ஒரு ஆசிரியர் வழிகாட்டியாகவும் தோழமையோடும் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு பெண்ணாசிரியராக வரும் பாத்திரம் நல்ல உதாரணம்.

காட்சிப்படுத்தலில் சினிமா மொழியை வெற்றியாகக் கையாண்டிருக்கிறார்கள். ஒளிப்பதிவாளரும் இயக்குநரும்.

இளைஞர்களும் அரசியல்வாதியும் உண்மையாகவே வாழ்வதுபோல சிறப்பாக நடித்திருக்கிறார்கள்.

படத்தின் முடிவுகூட சடுதியாகக்காட்டப்படுவதுபோல ஒரு உணர்வைத்தருவதாக அமைந்துள்ளது. இல்லையென்றால் அதற்கொரு பத்துநிமிடச் சண்டைக்காட்சி, பிறகு பொலிஸ் வந்து கைது செய்வது போன்றில்லாமல் குற்றவாளிக்கு சிறைத்தண்டனை கிடைத்துள்ளது என இயல்பாக- யதார்த்தமாக படம் நிறைவடைகிறது.

இங்கே செய்தியென்னவென்றால் சட்டத்தை அதிகாரம் தன்சார்பாக கையாள முயல்கிறது. அது சமூக விரோதமாகிறது. இங்கே இளைஞர்களின் வேலைபொய்யான அரசியல் ஊழலதிகாரத்தை முறியடிக்க விழிப்புடனும் துணிச்சலுடனும் செயற்பட வேண்டும் என்பதே.

காட்சிக்கும் கதைக்கும் பாத்திரங்களிற்கும் பொருத்தமான வசனங்கள் உயிர்.

வசனமெழுதியவர் படத்தை இன்னும் பலப்படுத்துகிறார். இந்த மாதிரிப் படங்கள் வந்தாலே பரவாயில்லை என்பதாக இருக்கிறது தமிழ்ச்சினிமா. ஆனால், உலகச் சினிமா வேறெங்கோ வளர்ச்சிகளை நோக்கிப் போய்விட்டது. அதன் பார்வையாளர்களும்தான்.

— ஆரதி

படித்து பட்டம் பெற்று விட்டு வேலைக்காகக் காத்திருப் போரின் தொகை வருடத்திற்கு வருடம் கூடிக் கொண்டே போகிறது.

அதேவேளையில் வேலை செய்வதற்கு பொருத்தமானவர்கள் தேவை; வெற்றிடங்கள் தொகையாக வுண்டு என்ற நிலையும் தொடர்கிறது.

ஆக பட்டதாரிகள் காத்திருக் கிறார்கள் வெற்றிடங்கள் எதிர்பார்த்தி ருக்கின்றன.

வேலைசெய்வதற்கு வெற்றி டங்கள் இருக்கும்போது எப்படி வேலையற்றோர் வெளியே காத்திருக்க முடியும்? அதுவும் தொகையாகக் காத்திருக்கமுடியும்?

பட்டதாரிகள் துறை சார்ந்து கல்வியைப் பயின்றவர்கள் துறைசார் அறிவுடையோர்.

துறைசார்ந்து மேலதிக அறிவைப்பெற்ற இவர்கள். உடனடியாக சமூகத்துடன் இணைந்துகொண்டால் சமூகத்தேவைகளில் கூடுதலானவற்றை நிறைவுசெய்யமுடியும்.

போராலும் ஒதுக்குதல் ஒடுக்குமுறை நடவடிக்கைகளாலும் நொந்துபோயுள்ள சமூகம் எங்களுடையது. பல வகையிலும் பற்றாக்குறை களோடுள்ள நிலை நமது எல்லாவகையிலும் எல்லாவற்றையும் ஈடுசெய்து முன்னேற்றவேண்டிய அவசியமும் எங்களுக்கேயுண்டு.

நிறையவுண்டு. இவை பொருத்தமான அறிவாளிகளை துறைசார்ந்த ஈடுபாடுடையோரை வரவேற்கவும் தயாராக இருக்கின்றன.

ஆனால் பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்காகக் காத்திருக் கிறார்கள். வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கூட இவர்களுக்குண்டு. அதில் வேலைவாய்ப்புக்கோரி நிகழ்த்தப்படுகின்ற போராட்டங்களும் நிகழ்வதுண்டு.

ஒரு பக்கத்தில் உடனடி யாகவே வேலை வாய்ப்புக்கான களம் இருக்கிறது. மறுபக்கத்தில் வேலை யில்லை என்று சொல்லப்படுகிறது.

அப்படியென்றால் எங்கேயி ருக்கிறது இடைவெளி. அல்லது முரண். அல்லது பிரச்சினை?

சூழலில் என்னதான் நல்ல

ஏற்கனவே இருக்கின்ற துறைகளை விட மேலும் புதிய துறை களில் புதிய தொழில்களை மேற் கொள்ளலாம்.

அரசாங்க உத்தியோகத்தில் வரையறைகளும் மந்தத்தனமுமே இருக்கிறது. சுயதொழிலில் அது இல்லை.

இப்படி அந்த மதிப்பீட்ட றிக்கை சொல்கிறது. தென்னிலங் கையிலுள்ளசிங்கள இளைஞர். யுவதிகளில் அரசாங்க உத்தியோகத் திற்கெதிரான மனநிலை வளர்ந்து வருகிறது.

அவர்கள். அரசாங்கத்தின் பொருளாதாரக்கொள்கைகளிலும் திட்டமிடலிலும் அபிவிருத்திமற்றும்



# வேலையற்ற பட்டதாரிகள்.....

ஏன். இந்த நிலையற்ற சமா தானச் சூழல் குலைந்து. மீண்டும் போர் தொடங்குமானால் அதை எதிர்கொள்ள வேண்டிய தயார்ப்படுத்தல் எங்களுக் கிருக்கவேண்டும். எந்தக்காத்திருப் புக்கும் அவசியமின்றி ஒவ்வொருவரும் முன்னேற்பாடாக சமூகத்தேவை களைத்தேசத்தின் அவசியங்களை நிறைவேற்ற முயல்தல் வேண்டும்.

இதில் கூடுதலான பொறுப்பு உயர்கல்வியைப் பயின்றவர்களுக் குண்டு.

சமூகத்தின் தேவைக்காக சமூகப்பணத்தில் பயின்றவர்கள் இந்தப் பட்டதாரிகள். துறைசார்ந்த நவீன அறிவை விரிந்த அறிவைப்பெற்றவர்க ளும் இவர்களே. ஆகவே இவர்களே சமூகத்தின்தேவையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்குரியவர்கள்.

போரால் அழிவுண்ட வளங்க ளும் வாழ்வும் பெரிது. சிங்கள அரசு களின் தொடர்ச்சியான ஒடுக்குமு றையால் பாதிப்புக்கும் பிற்படுத்தலுக்கும் உள்ளான வளங்களும் தொழில் முயற்சி களும் வாழ்க்கையும் கூட பெரிதுதான் இதை மீட்டெடுத்து மீண்டும் முன் னோக்கிப் புதிய பாய்ச்சலோடு நகர்த்தப் படவேண்டிய பணிகள் இளையதலை முறையினருக்குண்டு.

கல்வி. மருத்துவம். ஊடகத் துறை. சமூகமேம்பாடு. மொழி. வாணி பத்துறை. சட்டம். வளஆய்வுகள். தொழில்நுட்பத்துறைகள். இயற்கை வளத்தை விரிவாக்குதல் என்று பலவகையிலும் பங்காற்றுவதற்கான வெற்றிடங்கள் காத்திருக்கின்றன.

இந்தத்துறைகளிலெல்லாம் பயின்றுவிட்டுப் பட்டதாரிகளும் காத்தி ருக்கிறார்கள்.

மேலே குறிப்பிட்ட துறை களில் செயற்பட்டு வருகின்ற நிறுவ னங்கள். அமைப்புகள். கழகங்களில் இவற்றுக்கான வேலைவாய்ப்புக்கள்

வேலைவாய்ப்புகள் இருந்தாலும் அவையெல்லாவற்றையும் விட அரசாங்க உத்தியோகம் பெறுவதில் தான் பெரும்பாலான பட்டதாரிகள் ஆர்வமாயிருக்கிறார்கள்.

"கோழியை மேய்த்தாலும் கவுண்மேன்ரில் மேய்க்கவேணும" என்ற பழைய மனோபாவம்தான் இப்போது நீடிக்கிறது.

அரசாங்கமோ நிதியில்லாப் பிரச்சினைகள். அரசியல் நெருக்கடிகள். உலக வங்கியின் நிபந்தனைகள் என்ற பிரச்சினைகளுக்குள் சிக்கியிருக்கிறது. இதனால் படித்துவிட்டு. பட்டம் பெற்று விட்டு வருடக்கணக்கில் காத்திருப் போரையிட்டு அதனால் உடனடியாக ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாது. இந்தநிலையிலும் அரசாங்க வேலை வாய்ப்புத்தான் பெறுமதியானது என்ற மனோபாவம் தவறான கணிப்பு வருவதற் கானகாரணம் இந்தப்பட்டதாரிகளுக்கு

**வெளிவாசல்பாலன்**

எப்படியேற்பட்டது. அரசாங்க உத்தி யோகம் குறித்த ஆர்வத்துக்கப்பால் அரசு இயங்குகின்ற முறைமை பற்றி ஏன் இவர்கள் சிந்திக்கவில்லை?

கடந்த வருடம் தென்னிலங் கையின் பல்வேறு பகுதிகளில் செய்யப்பட்ட ஆய்வொன்றில் பட்டதாரி களாக இருக்கும் இளையதலை முறையினரில் எழுபது வீதமானோர் சுயதொழில் செய்வதற்கே விரும்புகி றார்கள். அதற்கு அவர்கள் கூறிய காரணங்கள் முக்கியமானவையும் கவனிப்புக்கு உரியவையும் கூட.

சுயதொழிலில் ஈடுபடுவதன் மூலம் புதிய அணுகுமுறையிலும் புதிய திட்டமிடலிலும் அதனைச் செயற்படுத்த முடியும்.

சுயதொழிலில் சம்பிரதாய பு,ர்வமான வரையறைகள் இராது. பதிலாக சுதந்திரத்தன்மையிருக்கும்.

நிர்வாகச் செயற்பாடுகளிலும் நம்பிக்கை இழந்து வருவதையும் குறிப்பிடு கிறார்கள்.

ஆனால். தமிழில் படித்துப் பட்டதாரிகளாக வெளியேறுவோரோ இன்றும் அரச உத்தியோகக்கனவோடு தான் காத்திருக்கிறார்கள். கொலனி யாதிக்கத்தின் கீழிருந்த போதிருந்து இன்று வரையிலும் இந்த மன வியாதி யில் இருந்து நம்மிற்பலர் மாறவில்லை. அரசாங்க உத்தியோகத்திலிருக்கிற அதி கார சுகமும் அந்தஸ்தும் தான் இவர் களை இன்னும் அதனுடன் ஈர்த்து வைத்திருக்கிறது. இது ஒரு போதை மாயக் கனவு. அறிவிலித்தனம். இன்னும் சரியாகச்சொன்னால் 'அடிமைமோகம்' எனலாம்.

ஒடுக்குமுறை செய்யிற அர சின் நிர்வாக இயந்திரத்தை தொடர்ந் தும் இயங்க வைத்துவிடும் இந்த அறிவிலித்தனம் என்று இவர்கள் சிந்திப்பதில்லை.

விடுதலைக்கான போராட் டத்தில் வரப்போகின்ற புதிய வாழ்வில் மலரவுள்ள சுதந்திர தேசத்துக்காக பணி செய்யவேண்டுமென்ற பற்று இந்தப் பட்டதாரிகளிடையே உருவாக வேண்டும். பொங்குதமிழ் நிகழ்வுகளில் எழுச்சியில் முழு மாணவர்களும் ஒன்று திரண்டு தேச விடுதலையை முரசறை வது போல தங்களின் துறைசார்ந்த அறிவைப் பிரயோகிப்பதிலும் ஒன்று பட்டு எல்லோரும் முன்வரவேணும்.

அப்படிவந்தால் எங்கள் தேசத்தின் எல்லாவகையான நெருக்கடி களையும் விரைவாகத்தீர்க்க முயலலாம். புதிய கட்டுமாணங்களையும் . உற்பத்தி களையும் பெருக்கலாம். தேசத்தைப் பலப்படுத்தலாம். போராட்டத்தை விரைவுபடுத்தலாம் அதற்கு உந்து தலளிக்கலாம்.

பல பட்டதாரிகள் அரச உத்தியோகம் கிடைப்பதற்கிடையிலான

(23 ஆம் பக்கம் பார்க்க...)






இன்று ஆண்,பெண் இருபாலாரும் வேலைக்குப் போவது சாதாரண விடயமாகி விட்டது. அது வாழ்வின் தேவையுமாக உள்ளது. இவ்வாறான குடும்பங்களில் காலையில் எழுந்து வேலைக்குச் செல்லும் வரை வீடு அமர்க்களப்படும். இந்த நேரத்தில் வீட்டிலுள்ள ஆண்கள் புரிந்துணர்வுடன் செயற்படுவது முக்கியமாகும்.

காலை5.00 மணிக்கு கண்விழித்து தன் கடமைகளை செய்ய பெண் தொடங்கிவிடுவாள். காலையுணவு தயாரித்து, மதிய உணவு சமைத்துவைத்து, பிள்ளைகளை குளிப்பாட்டி பாடசாலைக்கு செல்ல உடுத்தி அவர்களுக்கு உணவு கொடுத்து, சாப்பாட்டுப் பெட்டிகளில் சாப்பாட்டைப்போட்டு இப்படி அந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகும். அதைவிட வீடு கூட்டுதல், முற்றம் கூட்டுதல், உடைதோய்த்தல், மாலையில் சந்தைக்குச் செல்லுதல், பாடம் சொல்லிக்கொடுத்தல் என்ற வேலைகளும் சேர்ந்துகொள்ளும். இவையாவற்றையும் முடித்து தானும் குளித்து, உடுத்தி, சாப்பிட்டு உரிய நேரத்திற்கு வேலைக்குச் சென்றுவிடவேண்டும். நேரம் பிந்திச் சென்றால் பதற்றம் (ரென்சன்) ஏற்பட்டு வேலையில் முழுக்கவனம் செலுத்த முடியாமல் போய்விடும். இப்படியான நேரங்களில் வீட்டிலுள்ள ஆண்கள், பொறுப்புடன் நடந்து கொண்டால் வேலைச்சுமையும், மன உளைச்சலும், பதற்றமும் பெண்களுக்குக் குறைந்துவிடும். உரிய நேரத்தில் சந்தோசமாக வேலைக்கு செல்ல வழியும் பிறக்கும். அதுவும் வீட்டில் பெற்றோர் துணையின்றி துணைவியும், துணைவனும் வாழும் குடும்பத்தில் ஆண்களின் பங்களிப்பு அளப்பரியது, ஆறுதலானது. ஆகவே ஆண்கள், வேலைக்குப் போகும் பெண்களின் வேலைகளில் தாமும்




## புரிந்துணர்வே வாழ்வின் ஆணிவேர்

பங்கெடுத்துக்கொள்வதன்மூலம் தங்கள் புரிந்துணர்வையும், அரவணைப்பையும் வெளிப்படுத்திக் கொள்ளலாம்.

உதாரணமாக காலையில் மனைவி எழுந்து தேனீர் தயாரித்து, உணவு சமைக்கும் நேரம் கணவன் எழுந்து முற்றம் கூட்டலாம், தண்ணீர் அள்ளிக்கொடுக்கலாம், பிள்ளைகளைக் குளிப்பாட்டி விடலாம், முடிந்தால் உடைகளையும் தோய்க்கலாம். இவ்வாறு குடும்ப வேலைக்குள் இருக்கும் உயர்வு தாழ்வுகளை களைந்து பங்கெடுப்பதன் மூலம் வேலைகள் பங்கிடப்படுவதுடன், நேரமும் மிச்சமாகின்றது. அதனால் வேலைச் சுமை, களைப்பு, பதற்றம் குறைகின்றது. இருவரும் சந்தோசமாக உரிய நேரத்திற்கு வேலைக்குச் செல்வதுடன் பிள்ளைகளையும் அக்கறையுடன் உரிய நேரத்திற்கு பாடசாலைக்கு அனுப்பிவைக்கமுடியும்.

அத்துடன் குடும்பம் எனும்விருட்சம் கிளைபரப்பி, விழுதெறிந்து நிலையாக வாழ வழிகிடைக்கும்.

அதைப்போல மாலையில் சந்தைக்குச் செல்லுதல், பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுத்தல், மறுநாள் பாடசாலைக்கு பிள்ளைகள் செல்வதற்கு ஆயத்தப்படுத்தல் போன்ற வேலைகளில் உதவுவதன்மூலம், வேலையால் களைப்புடன் வந்த மனைவிக்கு வேலைச்சுமை குறைவதுடன் சிறிது ஓய்வும் கிடைக்க வாய்ப்பாக அமைகின்றது. இதன் மூலம் வாழ்க்கையில் ஓர் பிடிப்பு, அன்பு, அரவணைப்பு, ஆறுதல், சந்தோசம் முழுக்குடும்பத்துக்கும் கிடைக்கின்றது. மனைவி, கணவனின் அன்பில் கட்டுண்டு வாழ்க்கையை வளம் பெறச் செய்ய இவ்வாறான உதவிகள் மிகவும் முக்கியமானவையாக அமையும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

த. யது

## முட்டை வடை




**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| முட்டை | -மூன்று |
| பிஞ்சுமிளகாய் | -இரண்டு |
| வெங்காயம் | -நான்கு |
| மிளகுப்பொடி | -சிறிதளவு |
| உப்பு | -தேவையான அளவு |
| வெண்ணெய் | -தேவையான அளவு |
| தக்காளி | -இரண்டு |

**செய்முறை:**

முட்டைகளை உடைத்து முட்டை அடிக்கும் இயந்திரத்தின் உதவியுடன் நன்கு கலக்கிக்கொள்ளவும்.வெங்காயம், பிஞ்சுமிளகாயை நன்கு பொடியாக நறுக்கவும்.மற்றும் மிளகுத்தூள், உப்பு எல்லாவற்றையும் முட்டையில் சேர்த்து நன்கு கலக்கிக்கொள்ளவும்.

தாச்சியில் எண்ணெய்விட்டு, சூடானதும் கலவையை கரண்டியில் எடுத்துச் சிறுசிறு வட்டங்களாக எண்ணெயில் விட்டுப் பொன்னிறமாகப் பொரித்து எடுத்துவிட்டால் அதுதான் முட்டை வடை.

## சந்தேகத்தை ஒழியுங்கள் சந்தோசத்தை வரவழைக்கலாம்

உதாரணமாக ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால் அங்கே கணவன் மனைவி இருவருக்கிடையில் மகிழ்வைக் கெடுப்பது சந்தேகமே. என்னதான் நாகரிகம் மாறினாலும் சிலபேர் ஆடையை மட்டும் அது நல்லம் இது நல்லம் என்று மாற்றிமாற்றி தம்மை அழகு படுத்துவர். ஆனால் உள்ளம் அழகாக வைத்திருக்க முடியாமல் தவிக்கின்றனர். மனம் தூய்மையே நம்மை முழு மனிதனாக அமைதியாய் வாழ வழி வகுக்கும். குறிப்பாக ஆண் பெண் இருபாலாரும் இதை நன்கு அவதானிக்க வேண்டும்.

பெண்களுக்கு அதிக கட்டுப்பாடுகள் கடுமையாகும் போது தவறுகள் கூடிவிடுகின்றன. இக்கருத்தை மிகவும் ஆராய்வோமே யானால் சந்தேகத்தின் பெயரில் தாக்கப்படுவோர் பெண்களே. கணவன் மீது சந்தேகப்படும் பெண்களும் இருக்கின்றனர். எதுக்கெடுத்தாலும் சண்டை சந்தேகம். சும்மா தேவை இல்லாமல் தம்மனதைப் போட்டு குழப்பி குடும்பத்தில் பெரிய பூகம்பமே வெடிக்கும் அளவுக்கு செய்கின்றனர். சிலரது வாழ்வு விவாகரத்து வரை சென்று விடுகின்றது. சந்தேகம் என்பது காரணத்தோடு வரலாம் சும்மா தேவையில்லாமல் வரவே கூடாது. கணவன் மனைவி இருவரும் இதை நன்கு உணரவேண்டும். தாம் இருவரும் இப்படி ஒருவர் மீது ஒருவர் சந்தேகப்பட்டு சண்டைபிடித்தால் பிள்ளைகளின் எதிர்காலமும் சீரழிகின்றது. வாழ்வில் மகிழ்வு இருந்தால் தானே பிள்ளைகளின் மீது கவனம் வரும். கணவன் மனைவி இருவரும் சிந்திக்க வேண்டும். மனம்விட்டு நன்றாக கதைக்க வேண்டும் அப்போது தான் சந்தேகமற்ற சந்தோசமான வாழ்வு உருவாகும்.

சிவாஜினி

## இப்படிச் செய்யலாம்...

வீட்டிற்கு வரும் விருந்தாளிகளுக்கு தேசிக்காய் கொடுக்க வேண்டும் என்றால், வெள்ளி டம்ளரில் கொடுக்காதீர்கள். வெள்ளி டம்ளரில் தேசிக்காய் கொடுத்தால் விரைவில் வெள்ளி டம்ளர் கறுப்பாகி விடும். தேசிக்காய் எப்போதும் கண்ணாடி குவளையில் கொடுப்பது நல்லது!

* * *

பூக்குவளையில் தண்ணீர் ஊற்றி ஒரு சிட்டிகை உப்பையும் போட்டுவிட்டால், பூக்குவளையில் வைக்கப்படும் பூக்கள் நீண்டநேரம் புதியவையாகவே இருக்கும் வேகமாக வாடாது.

* * *

பிரஷர் குக்கரைப் பயன்படுத்தும்போது, பிரஷர் குக்கரில் வைக்கப்படும் தண்ணீரில் ஒரு சிறிய துண்டு எலுமிச்சம் பழத்தைப் போட்டு விட்டால், பிரஷர் குக்கரின் உட்புறம் நிறம் மாறாமல் இருக்கும்.

* * *

பிஞ்சு மிளகாய் நாளானால் அழுகிவிடும். பிஞ்சு மிளகாய் அழுகிவிடாமலிருக்க அதற்கு ஒரு வழியிருக்கின்றது அது என்ன வழி தெரியுமா?

பிஞ்சு மிளகாயின் காம்பை கிள்ளி எடுத்துவிட வேண்டும். இந்த மாதிரி காம்புகளை எடுத்து விட்ட பிஞ்சு மிளகாய்கள் வேகமாக அழுகிப் போவதில்லை.

* * *

## உடலியல் குறிப்புகள்

இரத்தச்சோகை குறைவடைய வெந்தயக் கசாயம் குடித்தால் குணமாகும்.

• • •

ஒற்றைத் தலைவலி நீங்க வெங்காயச்சாற்றை எதிர்ப்பக்க மூக்கினுள் சில சொட்டுகள் இட்டால் உடனே நின்றுவிடும்

• • •

அடிபட்டதாலோ அல்லது வெட்டப்பட்டதாலோ இரத்தம் அதிகமாக ஏற்பட்டால் எலுமிச்சம் பழச்சாற்றைக் காயத்தில்விட்டால் இரத்தப்பெருக்குத் தடைப்படும்.

• • •

தக்காளிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, தேன் ஆகிய மூன்றையும் சம அளவில் கலந்து ஒரு மேசைக்கரண்டி காலை மாலை சாப்பிட்டால் கல்லீரல் நோய் குணமாகும்.

• • •

இரண்டு துளி துளசி இலைச் சாற்றைக் காதில் விட்டால் காதுக் குத்தல் நின்றுவிடும்.

க.உஷா

வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத் திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

வீடு,
வெள்ளிநாதம், ஈழநாதம்,
யாழ்சாலை,கிளிநொச்சி.




## குமரகுரு பல்பொருள் புடைவை வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—12**

பெயர்:.................................................

முகவரி:...............................................

...............................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# பலவான்கள் நாங்களே...!

சிறிலங்கா கிரிக்கெட் அணிக்கு அதன் கிரிக்கெட் வாழ்க்கையில் மகத்தான வெற்றி ஒன்று கிடைத்துள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்கு எதிரான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியே அதுவாகும்.


ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை முழுமையாக வெற்றிகொண்டதன் மூலம் சிறிலங்கா தென்னாபிரிக்காவுக்கு பத்து வருடத்தின் பின்னர் மிகப் பாரிய தோல்வி ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்து பெருமையைபெற்றுள்ளது.

இது தென்னாபிரிக்காவின் கிரிக்கெட் வாழ்க்கையில் கறைபடிந்த ஒன்றாகவும் மாறிவிட்டதுடன் அவ் அணிமீதான சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளது.

1994ஆம் ஆண்டு காலப் பகுதியில் கெப்பிலவேல்ஸின் தலைமையில் தென்னாபிரிக்கா அணி தொடர்ச்சியாக பத்து தோல்விகளை சந்தித்திருந்தது. அதன் பின்னர் தென்னாபிரிக்க அணி அப்படியான ஒரு பாரிய தோல்வியை சந்தித்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இந்த நிலையில் சிறிலங்கா அணிக்கு இப்படி ஒரு பலம் எப்படி வந்தது'. எங்கிருந்து வந்தது. என்று பார்க்கும்போது ஆச்சரியமாகவுள்ளதுதானே.

அண்மைக்காலமாக வாங்கிக்கட்டிய அணி; தரவரிசையில் இரண்டாம் நிலையில் உள்ளதென்னாபிரிக்க அணியை எவ்வாறு சமாளிக்கப்போகின்றது என்றெல்லாம் ஊகங்களும் கருத்துக்களும் நிலவ அவற்றையெல்லாம் தலைகீழாக மாற்றி மகத்தான வெற்றியை பெற்று ஆச்சரியத்தை ஏற்படுத்தி



சிகரத்தில் நிற்கிறது பிரமிக்கத்தக்கதுதான்.

சொந்த மண்ணில் டெஸ்ட்மற்றும் ஒருநாள் தொடர்களை இவ்வாண்டு அவுஸ்திரேலியாவிடம் இழந்தசிறிலங்கா தரவரிசையில் இரண்டாம் நிலையில் உள்ள தென்னாபிரிக்காவிடமும் பலத்த சவாலை எதிர்கொள்வது தவிர்க்கமுடியாதது.

அதுவும் நட்சத்திரசுழல் பந்துவீச்சாளர் இல்லாத, சிறிலங்கா அணி கௌரவமான தோல்வியைத்தானும் தக்கவைத்துக் கொள்ளுமா என்ற எதிர்வுகூறல்களும் கிரிக்கெட்விமர்சகர்கள் மத்தியில் கேள்விகளை எழுப்பியிருந்தது. இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தென்னாபிரிக்க அணிக்கு தலைகுனிவை ஏற்படுத்தி வெறுங்கையுடன் நாட்டுக்குத் திருப்பி அனுப்பி நிமிர்ந்து நிற்கின்றது சிறிலங்கா அணி.

இது அவ் அணிமீது பல சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள அதேவேளை அவ் அணி வீரர்களை உளவியல் ரீதியில் பாரிய தாக்கத்துக்கு



உள்ளாக்கியிருக்கும்.

விளையாட்டில் தோல்விகள் தவிர்க்கமுடியாத ஒன்று என்பது நியதியாக இருந்தாலும் ஒரு தரம் வாய்ந்த அணி தொடர் தோல்விகளை சந்திக்கின்றது என்றால் அவ் அணியில் குறைபாடு ஏற்பட்டுவிட்டது. என்ற முடிவுக்கு வருவதே பொருத்தமானது. அதனை கண்டறிய தென்னாபிரிக்கா தவறிவிட்டதா? அன்றி சிறிலங்காவின் பலத்தின் முன்னால் அதன் முயற்சிகள் தோல்விகண்டதா?

ஒட்டு மொத்தத்தில் அண்மைக்காலமாக சிறிலங்கா வீரர்கள் அதிகத் திறமையை வெளிப்படுத்தி வருவதுடன் அவர்களின் கூட்டுமுயற்சி எந்தவொரு அணியையும் தோற்கடிக்கும் வல்லமையை கொடுத்துள்ளதாகவே உணர முடிகின்றது.

குறிப்பாக பந்துவீச்சு துடுப்பாட்டம் களத்தடுப்பு என்பவை அபாரமாக உள்ளமை எதிரணிகளுக்கு பலத்தசவாலாக அமைந்துள்ளது.

இத்தனைக்கும் தென்னாபிரிக்க வீரர்கள் ஒன்றும் குறைந்தவர்கள் அல்லர் அவர்களும் சகலதுறைகளிலும் வல்லவர்களே.

• ஆனால் இப்படியொரு தலைகுனிவான தோல்வி எப்படி ஏற்பட்டது. அந்நாட்டு கிரிக்கெட் சபையே மலைத்துப்போய் நிற்கின்றது.

இது சிறிலங்கா அணியை குறைத்து மதிப்பிட்டதால் ஏற்பட்ட தோல்வியா அன்றி ஆடுகளங்களின் தன்மை, வீரர்களின் திறமை, திறமையின்மை போன்ற விபரங்களை அறியாமல் விட்டதால் ஏற்பட்டதா? தலையை பிய்த்துக்கொண்டுள்ளது தென்னாபிரிக்க கிரிக்கெட்சபை.

இந்த நிலையில் தென்னபிரிக்க அணியில் அனைத்துவீரர்களையும் அணியில் இருந்து நீக்கிவிடவேண்டும் என்று தென்னாபிரிக்க பத்திரிகை ஒன்று தனது கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தவிர தென்னாபிரிக்க கிரிக்கெட்அணியின் ஆரம்ப பிரபல்யமான வேகப்பந்து வீச்சாளர் பனிடிவில்லியஸ் தென்னாபிரிக்க அணியில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது.

எனவே முக்கியமான மாற்றங்களை எடுக்கக்கூடிய



திடமான கௌரவமானவர்கள் தென்னாபிரிக்க கிரிக்கெட்டில் இருந்து வெளிவர வேண்டும் அவர்கள் தைரியத்துடனும் சுயகௌரவத்துடனும் அந்த முடிவுகளை மேற்கொள்வார்களேயானால் தென்னாபிரிக்காவின் எதிர்காலத்தை மாற்றலாம் அல்லாது விட்டால் தென்னாபிரிக்க கிரிக்கெட் இருள்சூழ்ந்ததாகிவிடும் என்றுள்ளார்.

இதற்கிடையில் வரும் 10ஆம் திகதி இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ஐ.சி.சி.மினி உலகக்கிண்ணப் போட்டிக்கான அணி வீரர்கள் பட்டியலில் தற்போதைய வீரர்களே தென்னாபிரிக்க அணியில் இடம் பிடிப்பது தென்னாபிரிக்க கிரிக்கெட்சபைக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

எனவே ஐ.சி.சி மினி உலகக்கிண்ண போட்டியில் தென்னாபிரிக்கா பழிக்குப் பழிவாங்கி தனது பலத்தை மீண்டும் நிரூபிக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

# இது யாருக்கான போட்டி?

தென்னாபிரிக்கா சிறிலங்கா அணிகளுக்கிடையில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்கள் முடிவுற்றுள்ளன.

பெரிதும் எதிர் பார்க்கப்பட்ட தென்னாபிரிக்க அணி சிறிலங்காவில் படுதோல்வியடைந்துள்ளது.

ஆனால் இந்தத் தொடரைப்பொறுத்தவரை சிறிலங்கா அணிக்கு மிகவும் பெறுமதி வாய்ந்ததும் முக்கியத்துவம்மிக்கதுமாகும்.



ஐ.சி.சியின் ஒரு நாள் தரப்படுத்தலில் சிறிலங்கா அணி மின்னாமல் முழக்காமல் இரண்டாவது இடத்தைக்கைப் பற்றிக்கொண்டது.

ஆனால் இது தென்னாபிரிக்க அணிக்கும் சிறிலங்கா அணிக்கு மிடையிலான போட்டியென்பதைவிட இந்திய அணிக்கும் சிறிலங்கா அணிக்கும் இடையிலான தரப்படுத்தல் போட்டியென்றுகூறுவதே பொருத்தப்பாடுடையதாகும்.

இந்திய அணி ஆசியக் கிண்ணத் தொடருக்கு முதல் அவுஸ்திரேலிய சுற்றுப் பயணம் மற்றும் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் என்பவற்றில் பெரிதும் பிரகாசித்து அவுஸ்தி ரேலிய அணிக்கு சவால் விடுத்த வண்ணமிருந்தனர்.



அத்தோடு இந்திய அணியின் துரித வெற்றிகளைக் கண்டு சில விளையாட்டு ஆர்வலர்களும் இந்திய அணிக்குச் சார்பான கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

ஆனால், ஆசிய கிண்ணத் தொடர் மற்றும் இந்திய பாகிஸ்தான், அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்ற முக்கோணத்தொடர் ஆகியவற்றில் பிரகாசிக்கத் தவறியதையடுத்து இந்திய அணியின் செல்வாக்கு பெரிதும் சரியத் தொடங்கிவிட்டது.

கவர்ச்சிமிக்க வீரர்களின் பட்டியலைக் கொண்ட இந்திய அணி முடிவுகளில் ரசிகர்களை ஏமாற்றுவதில் வல்லதொரு அணியாக திகழ்ந்து வருகின்றது.

இதற்குக் காரணங்களை தேடுவதாக இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி கூறுகின்றபோதும் இந்திய அணியில் முதற்காரணமாக இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலிக்கும் அணியின் சிரேஷ்ட வீரர்களுக்குமிடையில் நிலவும் ஒற்றுமையின்மை பிரதான காரணமாகவே தென்படுகிறது. இந்திய அணியைப் பொறுத்தவரை சௌரவ் கங்குலி சிறந்த ஒரு அணித்தலைவராகக் கூறப்பட்டாலும் வெற்றிகளை நழுவவிடும் தலைவராகவே இருந்து வருகிறார் அத்தோடு கங்குலியிடமிருந்தே அணியின் சிரேஷ்ட வீரர்களுக்கு புதிய புதிய பிரச்சினைகள் தோற்றுவிக்கபடுகின்றது.

அந்த வகையில் கங்குலி அணிவீரர்களை ஒற்றுமையுடன் ஒழுங்குபடுத்தி வெற்றியை நோக்கி விசுவாசமாக வீரர்களை உழைக்கச் செய்வதில் வெற்றி காணாதவரை அந்த அணிக்கு தோல்விகள் காத்திருக்கவேசெய்யும்.

ஆனால் அணியின் ஒற்றுமையுடன் கூடியகூட்டு உழைப்புக்கு அண்மை உதாரணமாகத் திகழ்வது சிறிலங்கா அணியே யாகும்.

சிறிலங்கா அணி பெற்று வரும் தொடர் வெற்றிகளுக்கு காரணம் அணிவீரர்களுக்கிடையில் நிலவும் கூட்டு உழைப்பு என்றால் மிகையில்லை. அதோடு புதிய இளம் வீரர்களின் பிரவேசம் சிறிலங்கா அணியை இன்னும் இளமையாக்கியுள்ளது. இந்த வகையில் இந்திய அணி சிறிலங்கா அணியிடம் நிறையவே பாடம் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என்பது மட்டும் உண்மை.



# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

தமிழீழத் தாயகத்தில் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு நெல் உற்பத்தி இடம்பெறுவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப் பாளர் கரிகாலன் அவர்கள் அண்மையில் மன்னார் கறுக்காய் குளத்தில் நடைபெற்றுள்ள நிகழ்வொன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழர் தாயகத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல்லில் 60 வீதமான நெல் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுவதாகவும் ஏனைய 40 வீதமான நெல் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்றைக்கு பதின்னான்கு வருடங்களுக்கு முன்னர் 1990இல் கணிப்பிட்ட கணிப்பீட்டின் படி தமிழீழத்தில் மொத்த நெல் உற்பத்தி 609000 மெற்றிக் தொன்களாகும். அக்காலப்பகுதியில் தென்தமிழீழ மக்கள் பல்வேறு நெருக்கடிகள் சிக்கல்கள் மத்தியில் உற்பத்தியில் ஈடுபட்டனர் எனினும் மேலதிக உற்பத்தி சிங்களப்பகுதிகளுக்கு சென்றது.

வட தமிழீழத்தில் பல்வேறு நெருக்கடிகளால் பெருமளவு வயல் நிலங்கள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படாவிடினும் 127000 மெற்றிக் தொன் நெல் உற்பத்திசெய்யப்பட்டது.

வட தமிழீழத்தின் நெற் செய்கைக்கு உட்படுத்தக்கூடிய நிலப்பரப்பாக 99055 ஹெக்டர் நிலப்பரப்பு அப்போது இனம் காணப்பட்டது.

மேற்படி நிலப்பரப்பு பூரணமாக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டால் அதாவது சராசரி ஒரு ஹெக்டயருக்கு 2.5 மெற்றிக்தொன் நெல் விளைந்தால் மொத்தமாக 247 637 மெற்றித்தொன் நெல் உற்பத்தி செய்ய முடியும். இது அப்போதைய மக்களின் தேவையைவிட 53027 மெற்றிக்தொன்னாக மதிப்பிடப்பட்டது.

ஆனால் இப்போது 2004 ஆம் ஆண்டு நிலப்பரப்பு மாத்திரம் அதிகரிக்கப்படவில்லை. முயற்சியும் தான்முன்னேறியுள்ளது.

எனவே எமது தேவையை நாமே பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

## மண்ணை வளமாக்கும் மண்புழுக்கள்

மண்புழுக்கள் விவசாய நிலத்தை வளமாக்குகின்றன. மண் புழுக்களை உரப்புழுக்கள் என்றும் கூறுவதுண்டு. உரப்புழுவான மண்புழுக்கள் நிலத்தில் காணப்பட்டால் அந்த மண் வளமான மண் என்றும் விவசாயம் செய்யக்கூடிய மண் என்றும் சொல் லலாம். இப்புழுக்களின் வளர்ச்சிக்கு கால் நடைக்கழிவு, கோழிக்கழிவு, உக்கிய இலை, குழை, தளை வைக்கோல், சமையலறைக்கழிவுகள் போன்ற அழுகும் நிலையில் உள்ள தாவரக்கழிவுகள் போன்றன மண் புழுவை உயிர் வாழச் செய் வதோடு விருத்திய டையவும் செய்கிறது.

நீளமான மண்புழுக்களின் ஆற்றல் வியப்பூட்டக்கூடியன. இதனுடைய வழுவழுப்பான தன்மை அதன் உடலில் சுரக்கும் திரவத் தினால் உண்டாகின்றது. இதனால் சொரசொரப்பான மண்ணில் கூட இவை எளிதில் துளைவிட்டு உள்ளே செல்கின்றது. இதன் உடலில் உண் ணவும் கழிக்கவும் இரு துவாரங்கள் உண்டு. அது தன் எடைக்கு மேல் பத்துப்பங்கு எடையினைக் கொண்ட கழிவுகளைக் கழிக்கிறது. இக்கழிவே இயற்கை உரமாகும். இதே உரத்திற்கு இந்தியாவில் அதிக கிராக்கி உண்டு.

வீட்டுத்தோட்டம் செய்பவர் கள் செலவில்லாமல் மண் புழு வளர்க்கலாம். இயற்கை உரமிட்டு காய்கறி, பழங்கள், உணவு தானிய உற்பத்தியினை பெருக்கிக்கொள்ள முடியும்.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். வீட்டில் உள்ள தோட்டத் தில் நிழல் விழும் பகுதியில் 1மீ. நீளம் X 1 மீ. அகலம் X 1மீற். ஆழம் கொண்ட குழியினை வெட்டி அதில் நன்றாக உக்கிய தொழு உரத்தினை இட்டு நிரப்ப வேண்டும். இதன் பின் வயலில் கிடைக்கும் மண்புழுக்களைப்பிடித்து அக்குழி யினுள் இடுதல் வேண்டும். தினமும் அக்குழியில் நீர் ஊற்றி பாதுகாக்க வேண்டும். சமையல் கழிவுகள், பண் ணைக்கழிவுகள், இலை தழைகள், குழைகள், வைக்கோல்கள் ஆகியவற்றை உணவாக இடுதல் வேண்டும். அமிலத்தன்மை கொண்ட பழங்களை அதாவது எலுமிச்சம் பழத்தோல்கள் போன்ற அமிலத் தன்மையான பொருட்களை இந்தக் குழியினுள் போடக்கூடாது.

குழியை பனையோலை, அல்லது தென்னோலைத் தட்டி, மூங்கில் பாய் என்பவற்றால் மூடி பாதுகாக்க வேண்டும். இல்லா விட்டால் மண்புழுக்களை பறவைகள் விழுங்கிவிடும். குழியில் தயாரிக் கப்பட்ட பசளையினை இரண்டு மாதங் களின் பின் வளமான நல்ல உரத் தினைப் பெற்றுக்கொள்ளலாம். மண் புழுக்கள் ஈரத்தன்மையுள்ள பகுதி களுக்கு விரும்பிச்செல்லும் என்பதால் இரண்டு மாதம் கழித்து உரத்தினைப் பிரித்து எடுக்க குழியில் ஒரு புறத்தில் மட்டும் நீர் ஊற்றி மண் புழுக்களைப் பிரித்தெடுத்து விட்டு உரத்தை வயல் கள், காய்கறித்தோட்டம், பழமரங்கள் என்பவற்றிற்கு இந்த உரத்தைப் போடலாம். மண்புழு உரமானது செல வில்லாதது. எல்லோராலும் இலகுவாகச் செய்யக்கூடியது.

மனிதனுக்கும் சுற்றுச் சூழலுக்கும் கேடு விளைவிக்கும் செயற்கை உரத்தினை தவிர்த்து இத்தகைய உரத்தில் மண்புழுவின் முட்டைகளும், புழுக்களும் அதிக மாகவே காணப்படும்.

இந்த உரத்தினை வயல்களுக்கோ தோட்டங்களுக்கோ இடும்போது எமது வயல் களிலும் இந்த மண்புழுக்கள் உற்பத்தியாகும்.

எங்கு சேதனப்பசளைகள் இயற்கை உரங்கள் நிறைந்து காணப்படும் இடமெல்லாம் மண் புழுக்களின் வளர்ச்சியும் செயற்பாடும் நிறைந்து காணப்படும். இரசாயன உரங்கள் பாவிக்கும் இடமெல்லாம் மண்புழுக்கள் நுண்ணுயிர்கள் இறந்து காணப்படும். ஆகவே இரசாயன உரங் களைத் தவிர்த்து இயற்கை உரங்க ளைப் பயன்படுத்தினால் மண்ணை உயிரோட்டமுள்ளதாக மாற்றமுடியும்.

இயற்கை உரங்களாவன தொழு உரம், சாணம் போன்ற விலங் கின் கழிவுகள் தாவரங்கள் செடி கொடிகளைக்குழியிட்டு மக்கவைத்து பயன்படுத்துவதை தொழு உரம் என்போம். இயற்கைக் கழிவுகளை நேரடியாக உரமாகப் பயன் படுத்த முடியும். எண்ணெய் வித்து, புண் ணாக்குகள், சாம்பல், எலும்புத்தூள், மீன் கருவாடு, கழிவுகள் போன்ற வற்றையும் இயற்கை உரமாகப் பயன்படுத்தும் போது நல்ல பயனைப் பெறமுடியும்.

**கமலா**

(சி-10044)

**(13 பக்கத் தொடர்ச்சி)**

அணியாக (Screen team) சென்றது. அந்த அணிசென்று வந்த இடையில் ஓர் இடத்தில் தங்குவது வழக்கம். இப்படியான ஓர் நாளொன்றின் போது, அச்சுதன் முரசுமோட்டை நவஜீவனத் தடியிலிருந்து உணவை சுமந்து வந்து, ஒவ்வொரு காவலரணாகக் கொடுத்துவிட்டு, வழமையாக கொடுக் கும் முன் அணிக்கு கொண்டு சென் றான். அந்த அணி அன்று மாறி விட்டது என்பது அவனுக்குத் தெரி யாது எனவே முன்னே சென்று பார்த்துவிட்டு வழமையான இடத்தில் இல்லாததனால் அவ் அணியை தேடிமுன்னே சென்றிருக்கிறான்.

அதாவது பசியோட இருக் கும் அணிக்கு எப்படியும் சாப்பாடு கொடுக்கவேண்டும் என்ற துடிப்புடன் முன்னே சென்றவனுக்கு திகைப்பு காத்துக்கிடந்தது. மூன்றுபேர் கை காட்டி வரச்சொல்ல இவன் எம்மவர்களெனக கிட்டச்சென்றுவிட 40-50யார் தூரத் தில் எதிரியென இனங்கண்டு கொண்டான். உணவை வைப்பது போல் பாசாங்கு செய்துவிட்டு குண்டை கழற்றி எறிந்துவிட்டு, சாப்பாட்டை யும் எடுத்துக்கொண்டு எதிரியின் சூட்டிற்கு தப்பியவாறு ஓடிவந்து சேர்ந்து தனது கதையை சொன்னான்.

இதே போன்று ஊரியா னிலே ஒரு நாள் மாவீரன் லெப். அச்சுதனும் மாவீரன் கப்டன் நிலா வேந்தனும் முன் அவதானிப்பு நிலையில் நின்றபோது எதிரி நகர் ந்து வருவதை அச்சுதன் கண்டு கொண்டு, மேலும் தம்மை உரு மறைத்து இருந்துவிட்டு எதிரி கிட்ட வந்ததும் குண்டை கழற்றி போட்டு விட்டு இருவரும் தங்களது சுடுகரு வியால் சுட்டுவிட்டு சேதம் இல்லா மல் ஓடிவந்துவிட்டனர். மறுநாள் இலங்கை ஊடகங்கள் தாக்குத லொன்றில் ஒரு சிப்பாய்செத்தும் ஏனைய இருவர் காயமடைந்தும் உள்ளதை அறிவித்தது. இப்படியாக மாவீரன் லெப்.அச்சுதன் எத்தினையோ தாக்குதல்களில் வித்தியாசமான சண்டைகளை செய்துமுடித்தான்.

ஒட்டுசுட்டானில் தொடங்கிய ஓயாத அலைகள் மூன்றில் ஓமந்தை செல் லும் வரையிலும், அச்சுதன் தனக்கே உரிய பாணியில் பல தாக்குதல்களில் பங்கு பற்றி அதன் வெற்றிக்குக் காரணமாய் அமைந்தான்.

09.11.99 அன்று நெடுங்கே ணிக்குள் எமது வேவு அணியொன்று எதிரியின் நடமாட்டத்தை அவதா னிக்கச்சென்றபோது, எதிரியின் பதுங் கித்தாக்குதலில் இவர்களது வேவு அணி சிதறுண்டுவிட்டது. ஏனைய வர்கள் தப்பி வந்துவிட்டனர். அச்சு தனை காணவில்லை. நாட்கள் 03 ஆகிவிட்டன. சிலவேளை அச்சுதன் வீரச்சாவடைந்திருக்கலாம்என, எண்ணி, பிரதாபன் அச்சுதனின் உடலை யேனும் எடுக்கலாம் என்று, சம்ப வம் நடந்த அந்த காட்டுப்பகுதிக்குச் சென்ற போது எம்மவர்களின் நடமாட்டத்தை கண்டு ஒரு பற்றைக் குள்ளிருந்து அச்சுதன் எழுந்து வந்திருக்கிறான்.

அச்சுதனை கண்டவர்கள் திகை த்தே போய்விட்டார்கள். மூன்று நாட் கள் தன்னிடமிருந்த உலர் உண வையும், தண்ணீரையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பகிர்ந்து உண்டு, குடித்து மறுநாளைக்கும் மிச்சம் வைத்திருந் தான். தன்னை கடந்து எத்தி னையோ எதிரிசென்றதாகவும் நீங்கள் இன்று வராவிட்டால் எனது குண்டு இரண்டை யும் கழற்றி எதிரி ஒருவனை அல்லது பலரை கொன்றுவிட்டே வீரச்சா வடைந்திருப்பேன் என்று தெளிவுட னும் பதற்றமில்லாமலும் கூறினான்.

## மனிதவள மேம்பாட்டுப் பகுதி நிதித்துறை.

### தமிழ் ஆசிரியப் பணிநிலைக்கான வேண்டுகை

பகுதி நேரமாகவோ முழுநேரமாகவோ தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றைக் கற்பிக்கக்கூடிய இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. தகைமைகள்:
    01. பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்கள்.
    02. தமிழ்ப் பட்டதாரிகள்.
    03. பண்டிதர், புலவர் பட்டங்கள் பெற்றோர்.
02. பட்டறிவு:
    பத்தாண்டுகளுக்குக் குறையாத தமிழ் ஆசிரியப்பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

03 அகவை: 40 தொடக்கம் 65 வரை

04 வேண்டுகை முடிவு நாள்: 15-09-2004

05 வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

06. நேர்முகத் தேர்விற்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றுடன் வருகை தரவேண்டும்.

07 சம்பளம்: முழுநேர ஆசிரியராகத் தெரிவு செய்யப்படுவோருக்கு தகைமைக்கும், பட்டறிவிற்குமேற்ப பத்தாயிரம் உருபாவிற்குக் குறையாச் சம்பளம் வழங்கப்படும்.

08 நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள் தங்களின் தபால் முகவரிக்குக் கடிதம்மூலம் அனுப்பிவைக்கப்படும்.


ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை.

(சி-10203)


வன்னி நெட் கபே
Vanni Net Cafe
உங்கள் அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வருகின்றது
- நினைத்த நேரத்தில் இன்டநெட் ஈ-மெயில் பாவிக்கும் வசதி.
- 24மணி நேர இணைப்பு.
- சிறந்த பராமரிப்பு, திருத்த சேவை.
- வேகம் 64 Kbps, 128Kbps, 256 Kbps, 1MB, 2 MB.
- வாகனங்களில் பயன்படுத்தக்கூடிய விஷேட அன்ரனாக்கள் மூலம் பயணங்களின் போது இன்ரநெட் பாவனை.
- நகரைச் சுற்றி 5K.M சுற்றளவிற்கு நடமாடும் இன்ரநெட் வசதி.



அரச அலுவலகங்கள், அரச சார்பற்ற, சர்வதேச (NGO,INGO), தனியார் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்




கணினி மையம்
TCC
யாழ் சாலை, கிளிநொச்சி (கந்தசாமி கோயிலுக்கு அருகில்)



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 02**

**பகுதி -12**

அந்தக் குரலிலே ஒரு இனம் புரியாத அவசரம் இருந்தது. "டிப்சுக்கு பூட்டின கதவுகள் வேண்டாம்'' என்ற அவனது குரலில் விம்மல் தொனித்தது.

"கதவுகளை பூட்டுவது உனக்கு விருப்பமில்லை''என்று அவனுக்கு நான் கூறினேன்.

டிப்ஸ் நிலைகுலைந்து போனது போல் தோன்றியது. டிப்ஸ்சின் குரல் கரகரப்பான கிசுகிசுப்பாய் வெளிவந்தது. "டிப்சுக்கு சாத்தின கதவுகள் விருப்ப

முடிவடைந்ததும், இங்கு செலவழிக்கக் கூடிய நேரம் கிட்டத்தட்ட முடிந்து விட்டதையும், அவன் வகுப்பிற்குத் திரும்ப வேண்டும் என்பதையும் அவனுக்குச் சொன்னேன்.

''இன்னும் ஐந்து நிமிடங்கள் இருக்கின்றன. அதன் பின் நாம் போக வேண்டும்.''


அந்தப் பொம்மை வீட்டின் முன்னால் அசையாமல் அமர்ந்தபடியிருந்தான். எதுவுமே பேசவில்லை. நானும் எதுவும் பேசவில்லை. அந்த ஐந்து நிமிடங்கள் முடிந்ததும் வகுப்புக்கு திரும்பிப்போவோம் என்று எண்ணிக் கொண்டேன்.

திரும்பிப்போக விரும்புகிறானா என்று அவனிடம் கேட்கவில்லை. அவனுக்கு யதார்த்தமான வேறு ஒரு தெரிவு இருக்கவில்லை. இங்கு திரும்பிவர அவன் விரும்புகிறானா என்றும் நான் கேட்கவில்லை. அவனாக ஒரு முடிவைத் தெரிவிக்க அவன் விரும்பாமல் இருக்கக்கூடும். அவனுக்கான திட்டங்களை அவனது தாயோடு உரையாடி இன்னமும் முழுமையாக ஆக்கியிருக்கவில்லை. என்பதால், அடுத்த வாரம் அவனைச் சந்திக்கிறேன் என்று கூட அவனிடம் சொல்லவில்லை. நிறைவேறமுடியாத வாக்குறுதிகளை நான் முன்வைக்காமலே




மில்லை, சாத்திப் பூட்டிய கதவுகள் விருப்பமில்லை. சுற்றிவரச் சுவர்கள் இருப்பது டிப்ஸ்சுக்கு விருப்பமில்லை''

சாத்திப் பூட்டிய கதவுகளுடன் அவனுக்கு மகிழ்ச்சி தராத அனுபவம் ஏற்பட்டிருக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அவன் வெளிப்படுத்திய உணர்வலைகளை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அதன் பின்பு அந்த பொம்மை வீட்டுக்குள் பொம்மைகளை வைத்த இடத்திலிருந்து எடுக்கத் தொடங்கினான். அப்பா, அம்மா பொம்மைகளை வெளியே எடுத்து வைத்து விட்டு ''ஸ்ரோருக்குள்ள போங்க ஸ்ரோருக்குள்ள போங்க... போய் த் துலையுங்கோ... கெதியா ஸ்ரோருக்குள்ள போங்கோ... என்றான்.



''அம்மா ஸ்ரோருக்குள்ள போகப் போறாவா?... அப்பாவுமா?... தங்கச்சியுமா?...'' என்று கேட்டேன். அவன் அந்தப் பொம்மைகளை வீட்டிலிருந்து அப்பால் விரைந்து தள்ளிவிட்டான்.

அதற்குப் பின் அந்தப் பொம்மை வீட்டின் சுவர்களைக் கழற்றியெடுக்கலாம் என்பதைக் கண்டுகொண்டான். "சுவர்கள் விருப்பமில்லை... டிப்ஸ்சுக்கு சுவர்கள் விருப்பமில்லை... எல்லாச் சுவர்களையும் பிடுங்கி எடு டிப்ஸ்...''என்று சொல்லிக் கொண்டே ஒவ்வொரு சுவராய்க் கழற்றி எடுத்தான். அந்த விளையாட்டு அறையிலே டிப்ஸ் தன்னைச் சுற்றி எழுப்பிக் கொண்டிருந்த சுவர்களில் ஒரு பகுதியை உடைத்தெறிந்திருந்தான்.

இந்த விதத்தில் மெதுமெதுவாகவும் கிட்டத்தட்ட வேதனையுடனும் அவன் விளையாடிக்கொண்டிருந்தான். ஒதுக்கப்பட்ட ஒரு மணித்தியாலம்

அந்தக் குழந்தை அதிக அளவில் பாதிப்புக்குள்ளாகியிருந்தான். அங்கே மகிழ்ச்சியாக இருந்தானா என்றும் கேட்கவில்லை. அப்பொழுது தான் பெற்ற அனுபவம் ஒன்றைப் பற்றி மதிப்பீட்டை செய்யும்படி ஏன் அவனை நிர்ப்பந்திக்க வேண்டும்? ஒரு பிள்ளை விளையாடும் விளையாட்டுக்கள் அவனது உணர்வுகளை வெளிக்காட்டுகிறதென்றால் அந்த வெளிப்பாடுகளை நெகிழ்ச்சியில்லாத ஒரு வழமையான பதிலுக்குள் ஏன் நாம் திணிக்க வேண்டும். அவனிடம் கேட்கப்படுவதற்கு முன்னமே, வேறு எவராலோ பதிலளிக் கப்படும் கேள்விகள் ஒரு பிள்ளையைக்குழப்பிவிடுகின்றன.

அந்த ஐந்து நிமிடங்கள் முடிந்ததும் எழுந்துகொண்ட நான் "நாம் போவதற்கான நேரம் வந்துவிட்டது டிப்ஸ்'' என்றேன். அவன் மெதுவாக எழுந்து நின்றான். எனது கையைப்பிடித்துக்கொண்டான். இருவருமாக அந்த அறையை விட்டு வெளியேறி மண்டபத்தினூடாக நடந்தோம். நாங்கள் மண்டபத்தின் நடுப் பகுதிக்கு வந்து அவனது வகுப்ப றைக் கதவு தெரியத் தொடங்கும் இடத்தில் வைத்து,தனியாக மிகுதித் தூரத்தை கடந்து வகுப்புக்குச் செல்லமுடியும் என்று நினைக்கிறாயா என்று கேட்டேன்.

(தொடரும்....)

(19ஆம் பக்கத்தொடர்ச்சி..)

குறுங்காலப்பகுதியில் தற்காலிகமாக வேலைதேடுகிறார்கள். இந்த இடைக் காலத்தில் எங்களுடைய வளர்ச்சிக்கும் தேசவளர்ச்சிக்கும் பொருத்தமான நல்ல வேலை கிடைத்தாலும் அவர்கள் அதில் தொடர்ந்து இருப்பதில்லை. ஒன்றில் அரசஉத்தியோகத்துக்கு ஓடுவார்கள். அல்லது வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களில் பணிசெய்யப் போவார்கள். ஏனிப்படி போகிறீர்கள் என்றுகேட்டால் 'வீட்டில் அம்மா அப்பாவின் விருப்பம் அதுதான் தாங்கள் அதனை மீறமுடியவில்லை' என்கிறார்கள்.

சீதனம், பேர், புகழ், அந்தஸ்து, அதிகாரம், பெருமை என்ற சூழல் வளையத்துள் வாழுகின்ற ஒரு தலைமுறைப் பெற்றோருக்கு அப்படித்தான் சிந்தனையோடும். ஆனால் இதனை தங்களின் பெற்றோருக்கு தெளிவுபடுத்தி அவர்களைச் சம்மதிக்க வைக்க வேண்டிய பொறுப்பு இளையதலைமுறையினருக்குண்டு. இவர்களுடன் சகதோழர்களாக இருந்தவர்களில் பலர் போராட்டத்துடன் முழுமையாக தங்களை இணைத்துச் செயற்படுவதை இவர்கள் மனப்பூர்வமாக நினைத்தால் எந்தப் பின்னிற்றலும் இல்லாமல் தாமும் தம் பங்களிப்பைச் செய்யவந்துவிடுவர்.

இன்னும் வெளிப்படையாகச்சொன்னால் துறைசார்ந்த அறிவோடு தேசப்பற்றும் சமூக உணர்வும் வளரவேணும். இதை வளர்க்க வேண்டிய முக்கிய பணி ஆசிரியர் மட்டத்தில் இருந்து பல்கலைக்கழக பேராசிரியர் வரையில் உள்ளோருக்குண்டு. அதேவேளையில் பெற்றோருக்கும் இந்தப்பொறுப்புண்டு.

அதாவது இன ஒடுக்குமுறையைச்செய்துவரும் அரச இயந்திரத்தோடு இணைந்து நிற்பதைவிட சுதந்திரத்துக்காகப் போராடும் தேசவிடுதலையுடன் இணைந்து நிற்பது அவசியம் என்ற அறிவு பெருகுதல் வேண்டும்.

நாங்கள் கடந்த காலங்களில் பெற்ற கசப்பான அனுபங்களையெல்லாம் வெகு சுலபமாக மறந்துவிடுதல் சரியானதா? தரப்படுத்தல் என்றும், தனிச்சிங்களச்சட்டம் என்றும் ஒரு காலத்தில் நிகழ்ந்த ஒதுக்குதல்கள் சாதாரணமானவையா? ஏன் இப்போது கூட பதவி உயர்வுகளில் இருந்து பலவகையிலும் பல்வேறு நிலையிலும் பாரபட்சங்கள் சிங்களத் தரப்பால் பார்க்கப்படுகின்றன என்று பல தமிழர்கள் மனம் பொருமுவதையும் குறைப்படுவதையும் கூட அவதானிக்கலாம்.

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும் போது "எங்களின் தேசத்துக்காக இன்றே பணி செய்தல்" என்றே சொல்லத் தோன்றுகிறது.

''அரசாங்க வேலையற்ற பட்டதாரிகள்" என்ற பழிச்சொல் இனியும் வேண்டாம்.

---

(08ஆம் பக்கத்தொடர்ச்சி..)

அரசியலுக்கூடாக மாற்றி ஆட்சி மாற்றத்தை பிரித்தானியா ஏற்படுத்தியது. இது பிரித்தானிய மாதிரி எனவும் பிரபலம் பெற்றது. ஆனால் அமெரிக்காவே இராணுவத்தை நிறுத்தி தான் ஏற்படுத்திய குடியேற்றவாதத்தின் கீழ் தான் விரும்பியவரை அரசியல் தலைவராக நியமித்து அவருக்கு இராணுவப்பாது காப்பை வழங்கி அரசியலையும் சனநாயகத்தையும் நிலைநாட்ட விரும்புகிறது. இது புதுமாதிரி சனநாயம் எனக்கூறுவதைவிட துப்பாக்கி ரவைகளிலிருந்து பிறந்த சனநாயம் எனலாம். நவீன சனநாயகத்தின் தந்தை ஆபிராகாம் லிங்கனின் சனநாயகத்தின் போலித் தன்மையை அவரது வாரிசுகள் உலகத்திற்கு உரித்துக் காட்டியுள்ள நிகழ்வாகவே இவற்றை பார்க்க முடியும். கறுப்பர்களுக்கு வாக்குரிமை கொடுத்ததை நவீன சனநாயகமென உலகத்திற்கு பிரகடனப்படுத்தி அமெரிக்கா மாதிரி அதனை 21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றமாதிரியாக வடிவமைத்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் மட்டுமல்ல முழு இஸ்லாமிய நாடுகளிலும் இவ்வாறான அரசியலை புகுத்துவதில் அமெரிக்கா முனைப்புக் கொண்டிருக்கின்றது. இது ஆயுதரீதியில் உருவாக்கப்படும் சனநாயக அரசியலாகும். அவ்வகையான அரசியலும் அதன் தலைமையும் தீவிரவாதத்தின் முன் எப்படி சாத்தியமாகும் என்பதே பிரதான சர்ச்சையாகவுள்ளது. தீவிரவாதத்தை முறியடிக்க இராணுவம் உகந்தவழியாக மட்டும் கருதுவது தீர்வற்ற உலகத்தை உருவாக்குவதாகவே அமையும். முரண்பாட்டுக்குரிய தீர்வு சரிவர அடையாளம் காணப்பட்டுதீர்க்கப்பட்டால் மட்டுமே தீவிரவாதம் மிதவாதத்தில் நம்பிக்கை கொண்டு செயற்படும். அவ்வாறன்றி பலஸ்தீனம்போன்று ஆப்கான் போன்று செயல்பட்டால் அமெரிக்கரே ஆட்சியாளராகமாறவேண்டும். அது பொருத்தபாடானதாக அமைவது கடினம்.

### தாய்வான் அரசியல்

2008 இல் தாய்வான் தனியரசாக பிரகடனப்படுத்தப்போவதாக தாய்வான் அரசு கூறுகின்றது. தனியரசுக்கான வாக்கெடுப்பை சாத்தியப்படுத்திவிட்டு தனியரசுக்கான பிரகடனத்தை உருவாக்க ஆட்சியாளர்கள் விரும்புகின்றனர். சீனாவோ 2008 இல் தாய்வான் மீது பாரிய இராணுவ நடவடிக்கைக்குரிய ஒத்திகைகளை ஆரம்பித்துள்ளது. ஒரு வகையில் யுத்தப்பிரகடனத்தையே வெளியிட்டதுடன் தயார்ப்படுத்தலையும் செய்து வருகின்றது. சீனாவுக்கு சமமான பலமற்ற நாடாக தாய்வான் இருந்தாலும் தாய்வானுக்கு பின்னணியில் அமெரிக்கா செயல்படுவதை மறுக்கமுடியாது. எப்படி இஸ்ரேல் பாகிஸ்தான் என்பன காணப்படுகின்றனவோ அவ்வாறே தாய்வானையும் சரிப்படுத்த அமெரிக்கா விரும்புகிறது. ஆனால் அமெரிக்கா மோதவிருக்கும் நாடு ஈராக் போன்றதுமல்ல. இந்தியாவுமல்ல. என்றவகையில் சீனாவைப்பற்றிய விழிப்பும் தாய்வானுக்கு அவசியமானதாகும். 2008இல் சாத்தியப்படுகிறதோ இல்லையோ தாய்வான் பிரகடனமே சீனாவின் உலகநோக்கையும் அமெரிக்காவின் அரசியல் பலத்தையும் இராணுவப்பலத்தையும் காட்டுவதாக அமையும். இப்பிரகடனம் உலக அரசியலில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்துமென நம்பப்படுகிறது.

ஈரோ ஏவுகணையின் பிரயோகம் தாய்வான்- சீன எல்லையில் தான் முக்கியமானதாக மாறுகிறதோ என்ற எச்சரிக்கை உலகத்தால் எண்ணப்படுகிறது. தாய்வான் சுமூகத்தன்மையை கடைப்பிடிக்க தவறுமாயின் சீனாவின் அணுகுமுறையில் மாற்றம் இருக்காது. இதுபெரும் அரசியல், இராணுவ, யுத்தத்திற்கு வழிவகுக்கலாம். ஏற்கனவே பலதடவை பிரகடனம் செய்யமுயன்ற தாய்வான் காலத்தை ஒத்திப்போடுவது அதன் திட்டமிடலல்ல அமெரிக்காவின் பணிப்புரையேயாகும். அமெரிக்கா எதிர்பார்ப்பது சீனாவை பலவீனப்படுத்தி அரசியல் ஊடுருவலை அதிகப்படுத்திவிட்டு நெருக்கடி நிலையை ஆரம்பித்தால் சீனாதடுமாறி விடும் என இலகுவாக கணக்குப் போடுகிறது. ஆனால் சீனாவோ பிராந்தியத்தையும் உலகத்தையும் அமெரிக்காவையும் தடுமாறவைக்க திட்டமிடுகிறது.

எனவே ஆயுதப் போட்டியை உலகத்தில் தீவிரமாக பரப்பிவரும் அமெரிக்க இரட்டைக் கொள்கையை கடைப் பிடித்து வருகிறது. உலகம் முழுவதும் அமைதின்மைக்கு எந்தெந்த சக்திகள் பங்களிப்பு செய்தனவோ அதே அளவு பங்கு அமெரிக்காவும் ஆற்றியுள்ளது. ஈரோ ஒரு புதிய அத்தியாயத்தை நோக்கி உலகத்தை திசைதிருப்பும்.

# தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையும் பிள்ளைகள் எதிர்நோக்கும் உளநெருக்கீடும்

இலங்கைப் பாடசாலைக் கல்விக் கலைத்திட்டத்தின் இறுதிச் செயற்பாடு மதிப்பீடாகும். அமுல்படுத்தப்படும் கலைத்திட்டத்தின் பயன்படு தன்மை, கலைத்திட்டத்தின் குறிக்கோள் நியாயமானதா? குறிக்கோளுக்கும் பாட உள்ளடக்கத்திற்கும் இயைபு உள்ளதா? இதனால் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? என்பன போன்ற விடயங்களை அளவிடும் வகையிலேயே மதிப்பீடுகள் அமைந்துள்ளன. இதனடிப்படையில் தரம்-5, தரம்-9,க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. பொதுவாக பரீட்சைகள் மாணவர்களைத் தரப்படுத்துவதும் கற்றலுக்கான ஊக்கலை வழங்குவதையும் கருத்தில் கொண்டுள்ள போதும் சிறப்பாக, தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையானது போட்டி அடிப்படையில் ஒரு தொகுதிமாணவர்களை வருடம் தோறும்தெரிவுசெய்து புலமைப்பரிசில் வழங்குவதற்காக நடாத்தப்படுகின்றது.

கல்வி என்பது 'வளர்த்தல்' என்றும் 'மனிதனைப் பூரணமாக்குகின்றது.' என்றும் பல்வேறு வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்றைய உலகமயமாதலுக்கு ஏற்ற கல்வியை வழங்குவதற்குரிய தேவையை உணர்ந்து கற்பிக்க வேண்டிய பாரிய பொறுப்பு கற்பித்தல் பணி சார்ந்தவர்களை வேண்டி நிற்கின்றது. ஆரம்ப காலங்களில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையானது கற்கும் ஆர்வம், திறமையிருந்தும் பொருளாதார நலிவுகளினால் சிறந்த பாடசாலை எனக் கருதும் பாடசாலைக்கு செல்ல முடியாத பிள்ளை சென்றடைவதற்கான வாய்ப்பை வழங்கியது. ஆனால் இன்றோ 'பெருமை பேசும்' ஒன்றிற்காக மாணவரை வதைக்கும் செயற் பாடாக மாறிவருகின்றது. பொதுவாக இப்பரீட்சையை எதிர்நோக்கும் மாண வர்கள் சார் உளநெருக்கீடுகளைப் பெற்றோர், ஆசிரியர் தரப்பில் உணர வாய்ப்பில்லாத நிலைமையே வளர்ந்து வருகின்றது.

பிள்ளைகளுக்காக நடாத்தப்படும் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையானது பெற்றோரையும், ஆசிரியரையும் பரீட்சிக்கும் பலப் பரீட்சையாகவுள்ளது என்று கூடக் கூறலாம். ஏனெனில் அதிகாலை நான்கு மணிக்கு பிள்ளையை எழுப்பி, பிள்ளைக்குரிய பணிவிடைகளைக் கவனித்து, விடியும் வரை அருகிலேயே இருந்து காவல்காக்கும் நிலைமையில் தொடங்கி பள்ளி சென்ற பிள்ளை வீடு வந்ததும் தனியார் கல்வி நிலையம் நோக்கி அனுப்பி, அல்லது அழைத்துச் சென்று காவல் நின்று, மீள அழைத்து வந்த இன்னொரு பிரத்தியேக வகுப்பை ஒழுங்கு செய்து அங்கும் மணிக்கணக்காகக் காத்திருந்து அழைத்து வருவதுடன் மட்டும் நின்று விடாது, மீண்டும் வீட்டில் உள்ளவர்களது வழிப்படுத்தல் தொடரும். இத்தனை சித்திரவதைகளையும் தாண்டி அந்தப் பிஞ்சுமனம் நித்திரைக்குச் செல்ல ஏறக்குறைய இரவு 10-11 மணியாகிவிடுகின்றது. திரும்பவும் அதிகாலை நான்கு மணிக்கு இதே சக்கரச் சுழற்சி தொடரும்.

பொதுவாக "என்பிள்ளை சித்தியடைந்து விட்டான்(ள்)" என்றும், "பக்கத்து வீட்டுப் பிள்ளையை விட என்பிள்ளை அதிக புள்ளி பெற்று விட்டான் (ள்)" என்று மார்தட்டும் ஒரு சமூகச் சூழலில் அர்த்தமற்ற போட்டிகளுக்கிடையே சிக்கி இந்தப் பிள்ளைகள் அவஸ்தைப்படுகின்றார்கள்.

பெற்றோரின் இத்தகைய அர்த்தமற்ற திணிப்புக்களிலிருந்து மீண்டு, பாடசாலை வரும் பிள்ளைக்கு அங்கும் ஆறுதல் இல்லை. தொடர்ச்சியான கற்பித்தல் செயற்பாடுகள் அளவுக்கு மீறிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சிகள் 'தேவையற்றது.' என்று கூறுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல . மாறாக பிள்ளையின் உளவயது,காலவயது இவற்றினடிப்படையில் கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கு படுத்த வேண்டும்.

உளவியலறிஞரான 'ஜீன்பியாஜே' என்பவரது உளவியல் கருத்தின்படி 7-12 வயது வரையான பிள்ளை விருத்திப்பில் "தூலசிந்தனைப் பருவத்தில்" சிந்தனைத் தொழிற்பாடாக பிள்ளை தான் அனுபவித்த சம்பவங்களை உளக்குறியீட்டு அடிப்படையில் சிந்திக்கின்றான். இச்சிந்தனைக்கு வாய்ப்பாக 'கற்பனை' மனதில் நிலை பெறாததாகவும், வேறுபடுத்தப்படாததாகவும் இருத்தல் வேண்டும். பொதுமைப்படுத்தல், பின்திரும்பல், மாறாதிருத்தல் போன்ற செயற்பாடுகளை பிள்ளைதன் மனதிலே செய் ய க் கூடியவனாக இருக்க வேண்டும். ஆனால் தரம்-5 மாணவர்கள் பெரும்பாலானோரது கற்றல்- கற்பித்தல் செயற்பாடானது பரீட்சை நிறைவுற்ற அந்தக் கணமே மறக்கப்படுவதாக உள்ளது.

பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சியில் பெற்றோருக்கு அடுத்தபடியாக முக்கிய பங்கு வகிப்பவர்கள் நிலையப் பெற்றோர்களாகிய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே. பிள்ளையின் சகல வளர்ச்சித் துறைகளுக்கும், சகல நுண்ணறிவு, மனவெழுச்சி போன்றவற்றில் ஆசிரியரின் நடத்தை செல்வாக்குச் செலுத்துகின்றது. ஆரம்பப் பாடசாலை வகுப்புக்கள் பிள்ளையின் "விருப்புப்" பருவத்தை அடக்கியுள்ளதென்பதை ஆசிரியர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். தரம்1இலிருந்து பிள்ளை அடைய வேண்டிய தேர்ச்சிகளைப் படிமுறையாக அடைய வைப்பதில் ஆசிரியரும், இவற்றைக் கண்காணிப்பதில் பொற்றோரும் ஆரம்பத்திலிருந்தே ஆர்வமுடையவர்களாக இருப்பார்களேயானால், இத்தகைய உள நெருக்கீடுகளைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்த வாய்ப்பில்லை.

பிள்ளை படிப்பதற்கு முன்னரும் படித்து முடித்த பின்னரும் குறித்தளவு 'ஓய்வு' வழங்குவதன் மூலமே 'நினைவாற்றலை' மேம்படுத்த முடியும். சொற்களோடு பொருட்களையும் செயல்களையும் இணைத்துக் கற்பிப்பதன் மூலமும் நினைவாற்றலை அதிகரிக்கலாம். இன்னும் மொழி சார்ந்த நினைவாற்றலுக்கு 'கருத்தேற்ற முறைமை' (Suggestopedia) ஏற்றதாகும். அதாவது 'ஆழ்மன ஊக்கல்' அல்லது நினைவிலிப் பதிவுகளுடன் மொழியை இணைப்பதாகும். இத்தகைய செயற்பாடுகளினூடாக பிள்ளையின் இயல்பான ஆளுமை விருத்தியைக் கட்டியெழுப்பலாம்.

**தரம்–5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு வீடு வந்த பிள்ளை ஒன்று, தான் கொண்டு வந்த உடமைகளைத் தாயின் முன்னே வீசி விட்டு, "அம்மாவினுடைய சோதனை இன்று முடிந்து விட்டது. இனிநான் விளையாடலாம். எனக் கூறிச் சிட்டாகப் பறந்தான்." இது கற்பனையல்ல நிய சந்திப்பு. இங்கு தான் அந்தப்பிள்ளையின் உண்மையான உளநெருக்கீட்டை அனுபவவாயிலாக உணரமுடிகின்றது.**

தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு வீடு வந்த பிள்ளை ஒன்று, தான் கொண்டு வந்த உடமைகளைத் தாயின் முன்னே வீசி விட்டு, "அம்மாவினுடைய சோதனை இன்று முடிந்து விட்டது. இனிநான் விளையாடலாம். எனக் கூறிச் சிட்டாகப் பறந்தான். இது கற்பனையல்ல நிய சந்திப்பு. இங்கு தான் அந்தப் பிள்ளையின் உண்மையான உளநெருக்கீட்டை அனுபவவாயிலாக உணரமுடிகின்றது.

இத்தனை நாளும் அவனது கற்றல் யாரையோ திருப்திப்பட வைத்ததே தவிர, அவனுக்கு அனுபவத்தைக் கொடுக்கவில்லை. பொதுவாக தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறுகின்ற அனைவரும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெறுகின்றார்கள் என்று கூறுவதற்குமில்லை. இந்தப் பலப்பரீட்சைக்காக. ஒட்டப் பிடித்த 'நாணயக் கயிற்றை' பரீட்சை முடிந்த அந்தக் கணத்திலேயே விட்டு விடுகின்றோம். இதுதான் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஏறக்குறைய 50% மான மாணவர்களது பெறுபேறு வீழ்ச்சிக்கு ஏதுவாகின்றது.

பொதுவாக மாணவர்களது வெட்டுப் புள்ளியைப் பற்றி சிந்திக்கின்றோமே தவிர அவர்களது சித்திப் புள்ளிகளைப் பற்றி சிந்திப்பதில்லை. பாடசாலைகளும் தமது பெறுபேறுகளை உயர்த்தி சாதனை படைப்பதற்காக வகுப்பு மட்டத்தில் வடிகட்டி பிள்ளையைத் தெரிவு செய்து கற்பிப்பதால், பரீட்சைக்குரிய வயதெல்லையுடைய சராசரி மாணவர்கள் புறந்தள்ளப்பட்டு பலவீனமாக்கப்படுகின்றார்கள். மிகக் குறைந்த புள்ளியைப் பெறுகின்ற மாணவர்கள் வாழ்க்கையை முடிக்கிறதா? அல்லது நாமே முடித்து வைக்கின்றோமா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.


வெட்டுப் புள்ளியைத் தாண்டிய மாணவனைத் தட்டிக் கொடுக்கின்றோம்; பராட்டு நிகழ்த்துகினறோம். இப்புள்ளியை அண்மித்த பஞ்சு மனங்களின ஏக்கங்களை யாரும் நினைக்கின் றோமா? அந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பிள்ளைகளது மனக்குமுறல்களை, கொஞ்சமேனும் நாம் நிலைநிறுத்திப் பார்க்க வேண்டும். பொதுவாக இன்று ஆசிரியர்களால் வழங்கப்படும் தண்டனைகள் மருவி வருகின்றதெனினும், அண்மைய ஆய்வுகளின் படி ஆசிரியர்களது தண்டனைகளாக,

(1) தொந்தரவு கொடுத்தல்/விரக்தியூட்டுதல்.
(2) குற்றம் சுமத்துதல் / சங்கட நிலையை ஏற்படுத்துதல்.
(3) ஒப்பிட்டுக் குறை கூறுதல்.

என்ற வகையில் வழங்கப்படுகின்றன, என்ற கருத்தையும் இங்கு ஒப்பிடல் மனங்கொள்ளத்தக்கது. இது பெற்றோருக்கும் பொருந்துவதாகும்.


எனவே சுருங்கக் கூறின் பரீட்சையில் வெற்றி, பொருளாதார நலன் பேணல், புகழ் இவையெல்லாம் பிள்ளைகளிடையே கட்டியெழுப்பப்பட வேண்டியவை தான். எனினும் மனதைக் கடுமைப்படுத்தி, தொடர்ச்சியான கற்றல் திணிப்புகள் மூலம் நீண்ட கால நோக்கில், பயனற்ற குறுங்கால வெற்றிக்கான வாய்ப்புக்களைத் தேடாது, படி முறையான செயற்பாடுகளை இளவயது முதலே கட்டியெழுப்புவதன் மூலம் பிள்ளைகளின் உளநெருக்கீட்டைக் குறைத்துக் கொள்ள முயற்சிப்போம். இன்னும் இறுதியாக (15.08.2004) நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு 2606 நிலையங்களில் 306107 மாணவர்கள் தோற்றியுள்ளார்கள். இவர்களில் 66146 மாணவர்கள் தமிழ் மொழி மூலமாணவர்கள். இவர்களுக்குரிய வெட்டுப் புள்ளியைத் தாண்டாத பிள்ளைகளை பரீட்சை முடிந்த பின்பும் பாதிப்பை ஏற்படுத்தும் உளநெருக்கீட்டை ஏற்படுத்தாது. எல்லோரையும் பாராட்டும் மனப்பாங்கை பெற்றோரும், ஆசிரியரும் இன்றே பெற்றுக்கொள்ள வேண்டும்.

திருமதி. மீனலோஜினி



**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

*பாசத்திற்குரிய பாவலரே! ''கிபிர்'' விமான வேகத்தில் விலைவாசி ஏறுகிறதே இதை தடுக்கமுடியுமா?*

**சுகி.**
**கோணாவில்.**

'கிபிரை' தடுத்தாலும் விலைவாசியைத் தடுக்க முடியாது.

*இலங்கை அரசியல் இருக்கும் இன்றைய நிலையில் மத மாற்றத் தடைச்சட்டம் தேவையா பாவலரே?*

**சுதா.**
**திருவையாறு.**

தேவையற்றதை மட்டுமே இலங்கையரசால் அது இன்றுள்ள நிலையில் செய்ய முடியும்...!

*மன்னார் நுரைச்சோலை மின் நிலையம் தமிழர்களுக்கு சாதகமா, பாதகமா பாவலரே!?*

**தீபா.**
**புதுக்குடியிருப்பு.**

தமிழருக்கு சாதகமான எதையும தமிழ்பகுதிகளில் அமைக்க சிங்கள அரசுக்கு மனம் வராதே!

*பாவலரே! தேர்தலின் போது அடையாள அட்டை பயன்படுத்த வேண்டும் எனும் சட்டம் எதற்காக கொண்டுவரப்படுகிறது?*

**ரதீஸ்.**
**யாழ்ப்பாணம்.**

'விரலில்' அடையாளமிடும் முறை தோற்றுப் போய்விடுவதால்..

*உலகின் வல்லரசுகளில் ஒன்றான இந்தியா ஒலிம்பிக்கில் ஒரு தங்கம் கூட பெறவில்லையே இந்நிலை ஏன் பாவலரே!?*

**பிரியா.**
**வவுனியா.**

சாதி இன மதப்பிரச்சினையுள்ள நாடுகளில் சனத்தொகை அதிகமிருப்பினும் சாதனை செய்வோர் இருப்பதில்லை.. என்பது கசப்பான உண்மையே....

*இந்திய கிரிக்கெட் அணியின் கடந்த வார தோல்விகள் பற்றி என்ன கூற விரும்புகிறீர்?*

**ராகவி.**
**கொக்குவில்.**

அதிகப் பிரசங்கித்தனம் அவமானத்தையே வென்று வரும் அவ்வளவுதான்.

*பாவலரே வணக்கம்! எமது தமிழீழ காவல் துறையினர் வீதி வீதியாக நின்று விபத்துக்களை தடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதனை பொருட்படுத்தாத இளைஞர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?*

**டபோ.**
**தேவிபுரம்.**

தங்கள் தலைவிதியை வீதியில் முடித்து வைக்க விரும்புகிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

*கிழக்கில், "தாக்கினால் திருப்பித் தாக்குங்கள்" என்று இராணுவத் தளபதி கட்டளையிட்டுள்ளாரே?*

**நிசாந்தன்.**
**உருத்திரபுரம்.**

ஒவ்வொரு தாக்கத்திற்கும் எதிரான மீள்தாக்கம் இருக்கவே செய்யும் என்ற விஞ்ஞான விதியை உணராமல் கூறுகிறார் அவ்வளவு தான்.

*ஆமிக்கேன் அப்பக்கடை பாவலா?*

**கோகிலா.**
**கிளிநொச்சி.**

தமிழரைச் சுட்டு களைத்து போய் அப்பம் சுட வெளிக்கிட்டினம்.... என்கிறார் ஒரு தமிழ் மூதாட்டி...

*பாவலரே! எனக்கு கனவில் அடிக்கடி ஆமி செல் அடிப்பது போல் கனவு வருகிறது. கனவு நனவாகி விடுமா?*

**கரன்.**
**ஸ்கந்தபுரம்.**

ஆமி செல்லை உங்களை நோக்கி அடிக்கவில்லை போல் தெரிகிறது.. அப்படி அடித்திருந்தால் 'நனவாகுமா' என்று கேட்டிருக்க மாட்டீர்!

*பாவலரே! இப்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் (பொ.ஐ.ம. முன்னணி) இலங்கையில் உள்ள எல்லா வளங்களையும் வெளிநாடுகளுக்கு கொடுத்துள்ளது. போற போக்கை பார்த்தால் எமது நாட்டையும் வெளிநாட்டிடம் கொடுத்து விடுவார்கள் போல் இருக்கிறது. அப்படி ஒரு நிலை இலங்கைக்கு வருமா. நாம் விடலாமா பதில் தரவும்.*

**குமார்.**
**வட்டக்கச்சி.**

அவர்களின் நோக்கமே அது தான்... அதை நாம் விடலாமா என்று நீங்கள் கேட்பதுதான் வெட்கம்.

*பாவலரே! அயல் வீட்டில் தண்ணீர் எடுக்கும் நிலைபற்றி?*

**றஜித்தா.**
**இணுவில்.**

மீன் வளமுள்ள நாம் டின் மீனை இறக்குமதி செய்கிறோம் எனக் கவலைப்பட்டவர் 'மகுடி'யார் (சிரித்திரன் சுந்தர்) நீர் வளமுள்ள' நன்நீரை இறக்குமதி செய்கிறோம் வெட்கம்...!




*டெல்லோ ஆய்வாளர் நிறுவிப்பினம் எண்டாலும் காணியும் என்ர தான் தாங்கோ எண்டு கேக்காம காணிக்கயுள்ள நகைய மட்டும்தானே கேக்குது எண்டு இரங்கியிருப்பாங்கள்.*

*சும்மா விடு-இந்த மனிசியின்ர வேலையால இனி அங்கயுள்ள எல் லா வீடுகளையுங் காணியையும் உழுது கொட்டப்போறாங்கள் இருந்து பாருங்கோ*

* * *

*ஜேர்மனியில பறவைக் காவடியத் தடை செய்து போட்டாங்களாம் அங்கத்தய அரசாங்கம்.*

*வன்முறையா இருக்கெண்டோ.*

*இல்லை போனவரியம் துலா முறிஞ்சு சனத்துக்க விழுந்து போனாராம். காவடியாடினவர்.*

*சூ...இஞ்ச எத்தினபேர் விழுந்தவை நாங்கள் நிப்பாட்டேல்லயே.*

*விழுந்துமெழும்புவர் தமிழர்.*

* * *

*"காங்கேசன் துறையில ஒரு மனிசி அம்பது பவுண் நகையத் தாட்டுவச்சுப்போட்டு இந்தியாவுக்கு போனதாம் இப்ப வந்து அரச அதிபர் மூலமாப் போய்த் தோண்டி எடுத்துப் போட்டுதாம்.*

*எல்லாம் அவங்கட நல்ல காலம், அதை அங்க விட்டு வைச்சு பிறகொரு காலத்தில தோண்டி எடுத்தா அது தமிழற்ற வாழ்விடம் எண்*

*கந்தசாமி கோவில் தேரோட பத்துச் செற்றுப் பறவைக் காவடியாம்.*

*முன்னை பறவைக் காவடி பார்க்கிறதெண்டா செல்வச்சந்நிதிக்குத்தான் போகோணும். ஒருவருக்கு நீதிமன்றத்தில தூக்குத் தண்டனை தீர்ந்ததாம். அப்பீல் கேட்டு அதில விடுதலை கிடைச்சதால எடுக்கிற வராம்.*

*இப்ப, பந்தயங்கட்டியும் எடுக்கினம்.*

*வந்தவர்:- பிள்ளை எங்கபடிக்கிறீர்?*
*பிள்ளை:- இன்டர் நேசனல் ஸ்கூல்ல*
*வந்தவர்:- ஓ...வட் இஸ் யூவ மதர் நேம்?*
*பிள்ளை:- மதர் நேமில்ல, மதர்ஸ் நேமெண்டு கேக்கோணும்.*
*வந்தவர்:- (சிரித்து) மதர்ஸ் நேமா? உனக்கிருக்கிறது ஒரு அம்மா தானே.*

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள் - 84



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் - 84

..................................................
..................................................
..................................................
..................................................

பெயர் : ..................................................
முகவரி : ..................................................
..................................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் - 83



**மா.விஜயகுமார்,**
**திரைப்படவெளியீட்டுப்-பிரிவு,**
**மல்லாவி.**

## பரிசுக்குரிய வரிகள்

*ஏதிலியாய் இடம் பெயர்ந்து ஆண்டு பல ஆச்சு*
*காதினிலே வீழு தொரு சமாதானப் பேச்சு*
*பாதியிலே பிரிந்திடுமோ வெண்புறாவின் மூச்சு*
*எம் வாசலிலே போயிருக்க வழி இன்றிப் போச்சு.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*சினங்கொண்ட சிங்களமே- உன்*
*மதங்கொண்ட பொருட்தடையால்*
*தனம் இல்லையெனினும்- இவர்*
*மனங்குன்றா மறத்தமிழர் புரிந்து கொள்.*

ச.சுதாகரன்,
கிளிநொச்சி.

*விதியின் விளையாட்டு என்று*
*வீதியைப் பார்க்காதீர்கள்!*
*வளமாக வாழ்ந்த எம்மினத்தை*
*வீதிக்கு கொண்டு வந்தது திட்டமிட்ட சதியே!*

எஸ்.செல்வகுமார்,
யாழ்.பல்கலைக்கழகம்.

*கூலிப்படையின் கொடிய செயலால்*
*கூடி வாழ்ந்த இடங்களை விட்டு*
*வனத்திலும், தெருவிலும் குடிசை*
*அமைத்து வாழ்வது எம் தலைவிதியோ!*

ந.ஜெகதீஸ்வரி,
உருத்திரபுரம்.

*ஓலைக் குடிசையில் இவர்கள் வாழ்வு*
*இது இவர்கள் நிரந்தர இடம் இல்லை*
*உயர் பாதுகாப்பு வலயத்தில் இவர்கள் வீடு*
*இதனால் இவர்களின் நிரந்தரம் இவ்விடம்.*

சி.கவிந்தன்
வவுனியா.

*பாதைதிறந்ததென்று ஊருக்குப்புறப்பட்டோம்*
*பாதியிலே மறித்த சிங்கள ஆமிசொன்னான்-உயர்*
*பாதுகாப்பு வலயமாம் எங்களது வாழ்விடங்கள்*
*பாவிகளாய் வாழ்கின்றோம் மீண்டும் அகதிகள் முகாமில்.*

க.கமல்,
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** புதுக்குடியிருப்பு வழங்குகின்றது.
கிளிநொச்சி.


REERDO நிறுவனம் தனது சேவையில்!
தொழில் சார் பயிற்சி பெற்று தொழில் வாய்ப்பை
நோக்கிச் செல்லும் இளைஞர்,யுவதிகள்.
இயல்பு வாழ்க்கைக்குப் பின்னர் எமது இளைஞர்,யுவதிகளுக்கு ஏற்றவகையில் தொழில்சார் பயிற்சியை வழங்கிய REERDO நிறுவனம் பின்வரும் வேலைதிட்டங்களுக்கு ஆளணியை தயாராக்கியுள்ளது. ஆகவே அன்பான ஒப்பந்தகாரர்களே எங்களிடம் திறன் மிக்க ஆளணியுள்ளது ஆகவே தங்களின் வேலைத்திட்டங்களுக்கு எங்களிடம் நாடுங்கள்.
கட்டிட வேலை
மரவேலை
நீர்க்குழாய் இணைப்பு
மின் ஒட்டு
தளபாடம் வடிவமைத்தல்
வீட்டு மின்னிணைப்பு
பெயின்ரிங் வேலை
உழவு இயந்திரம் திருத்துதல்
பாடசாலை சிறுவர்,சிறுமியர்களுக்கான ஆடைகள் தைத்தல்.
தொடர்புகளுக்கு :-
கிராமிய பொருளாதார
கல்வி ஆய்வு அபிவிருத்தி
நிறுவனம் (REERDO)
கனகபுரம் வீதி
கிளிநொச்சி.
மேற்படி பயிற்றுவிக்கப்பட்ட துறைசார் திறமைசாலிகளை பயன் படுத்துவதன் மூலம். உங்கள் துரிதமான கட்டிடப்பணிகளை விரைவுபடுத்தலாம் அத்துடன் உங்கள் முதலீடுகளில் கூடிய பலனை எதிர் பார்க்கலாம்.
Y.VIKKI


குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தினரின்
மாபெரும் பரிசுத்திட்டம் அறிமுகம்
வாடிக்கையாளர் அட்டை மூலம்
பல பரிசுகளை வெல்லும் அரியவாய்ப்பு!
வணிக நிறுவனங்கள் எதிலும் இல்லாத
இவ் அரிய வாய்ப்பை தவற விடாதீர்கள்!
இவ் அட்டை பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடகாலத்திற்கு செல்லுபடியாகும்.
★இவ் அட்டை மூலம் 10000/= பெறுமதியான பொருள் கொள்வனவு செய்தவுடன் அப்பெறுமதியின் 5% கழிவை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
★குலுக்கல் பரிசாக 10000/= ரூபாய் கொள்வனவு (பகுதிபகுதியாகவோ, ஒரே தடவையிலோ)நிறைவு செய்யப்பட்ட அட்டையின் இலக்கங்கள் நான்கு மாதத்திற்கு ஒரு தடவை குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு முதலாவது பரிசாக ஒரு பவுண் தங்க நாணயம் வழங்கப்படும்.
எமது காட்சியறை முற்றிலும் குளிரூட்டப்பட்டது.
★இவ்வட்டை ஒரு வருடம் பூர்த்தியாகும் வரைக்கும் குலுக்கல் எண்ணுடன் சேர்க்கப்படும்.
★பரிசில் வழங்கப்பட்ட எண் அட்டை மீண்டும் குலுக்கல் எண்களுள் சேர்க்கப்படமாட்டாது.
★இவ் வாடிக்கையாளர் அட்டை 30.09.2004 வரைக்கும் வழங்கப்படும்.
★இவ் அட்டை மொத்தவியாபாரத்திற்கு வழங்கப்படமாட்டாது.
★ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.
குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.
T.P. 021-2285971
(சி-10150)
SM Graphics


EXPOAIR
your friend in the skies
எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்
யாழ்-கொழும்பு பயணத்தின் போது
ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின்
சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.
ஒதுக்கீடுகளுக்கு
அழையுங்கள்
021-2223891/6297, 0772348888/2349999,
0112372952/953, 0112360290/291.
e-mail- jaffna@expoavi.com
e-mail- reservations@expoavi.com
இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை
C-10120